
# ஞானச்சுடர்



## சந்நிதியான் ஆச்சிரமம்.

மாசி

2014




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள்வழி

**அறனியலா னில்வழ்வா னென்பான் பிறனியலாள்**
**பெண்மை நயவா தவன்.**

பொருள் : அறத்தின் இயல்போடுகூடி இல்வாழ்க்கை வாழ்கின்றவ னென்பான் பிறனொருவனின் மனைவியை விரும்பாத வனாவான். (147)

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.**

பொருள் : பிறனுடைய மனைவியைப் பாராத பெருங்குணம் அறிவுடையோர்க்கு நீதியும் நிரம்பிய ஒழுக்கமும் ஆகும். (148)

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### குறள் வெண்செந்துறை

ஆதார வாதேய மானவுப் பொருளின்
பாதார விந்தம் பணிதல் பயனே 41

சூதான தற்ற வெளியிற் சுகமாய்
நீதா னிருத்தர் நிச்சய மாமே 42


தேகம் விழுமுன் செல்வத்துட் செல்வத்தை
ஆகத்துட் காண்ட லறிவென் பாரே 43

போக போக்கியம் எல்லாம் வீணென
யோக சமாதியி லிருந்துணர் வாயே 44

ஏக மாகிய ஒன்றே யெல்லாமாய்த்
தியாக மானது சிந்தித் தறிநீ 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு— 2 சுடர்— 194

2014 **பொருளடக்கம்** மாசி


| | | |
|---|---|---|
| ஆன்மிகம் சார்ந்த அறநெறி... | கு. சோமசுந்தரம் | 01 -02 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 03 -05 |
| திருவாதவூரரும்... | நா. நல்லதம்பி | 06 -09 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 10 -13 |
| சிவராத்திரியும் பிரதோஷ... | காரை எம்.பி. அருளானந்தன் | 14 -15 |
| வட இந்திய தல யாத்திரை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 16 -19 |
| பாசுரம் பாடலுற்றார்... | சிவ. சண்முகவடிவேல் | 20 -21 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 22 -24 |
| மரணத்தின் பின் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 25 -27 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 28 -29 |
| அறிவுடையார் எல்லாம்... | செல்வி செ. ஜடா | 30 -31 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 32 -33 |
| சைவ சமயத்தின்... | பு. கதிர்த்தம்பி | 34 -35 |
| சிறுவர் கதைகள் | – | 36 -37 |
| திருவருட்பயன் | – | 38 -40 |
| நக்கீரரும் திருமுருகாற்றுப்... | திருமதி சி. சறோஜினிதேவி | 41 -43 |
| சிவயோக சுவாமிகள் | இ. சாந்தன் | -44 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 45 -48 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 49 -50 |
| சிவபுராணம் எமது... | V.R. சரவணபவன் | 51 -52 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 53 -55 |
| அன்பு வழிப் பாடல்கள் | திருமதி க. தமிழினி | 56 -57 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 58 -61 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 62 -64 |


**அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா**


**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

தைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு. ஆறு திருமுருகன் (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மலரை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சூரியன் ஒவ்வொரு நாளும் தவறாது உதிப்பதுபோல ஞானச்சுடர் மலரும் கிரமம் தவறாது மாதாமாதம் வெளிவருகின்றது என்று கூறினார்.

தொடர்ந்து அவர் தனது உரையில் 2014ஆம் ஆண்டு புதுப்பொலிவுடன் பல்வேறு அம்சங்களைக் கொண்டு, காலத்தின் தேவை கருதி வெளியிடப்பட்டு வருகின்றது என்று சபையோருக்குக் கூறியதுடன்

மேலும் தனது உரையில் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளைச் சமூகத்தில் உள்ளவர்களுடைய "வாய் வாழ்த்தா விட்டாலும் வயிறு வாழ்த்தும்" என்ற வாக்கிற்கிணங்க இங்கே இடம்பெறும் நித்திய அன்னப்பணி போற்றுதற்குரியது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

193ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு ஆ. சிவநாதன் (அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மலரை மதிப்பீடு செய்வதென்பது யாராலும் இயலாத காரியம். ஆனாலும், ஒரு வரையறைக்கு உட்படுத்தி மதிப்பீடு செய்கின்றேன் என்று சபையோருக்குக் கூறினார்.

தொடர்ந்து அவர் தனது உரையில், சந்நிதியானை தேடிவந்து தரிசிக்க இயலாவிட்டாலும் ஞானச்சுடர் ஊடாகச் சந்நிதிப் பெருமான் எம் இருப்பிடங்களுக்கு விபூதிப் பிரசாதத்துடன் வருகிறான். மேலும், விளம்பரம் எதுவுமின்றி எந்த விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியாத தனிச்சிறப்புடன் "ஆன்மீக சிந்தனையை" நோக்கமாகக் கொண்டு வெளிவருவதுதான் "ஞானச்சுடர்" என்று கூறினார்.

மேலும் இச்சுடரில் புதிய பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டு, நிறைவான சொற் பிரயோகங்களுடன் வெளிவந்தமையானது பிரமிக்கத்தக்க செயலாகும் என்றதோடு இனிவருங் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது பிரகாசிக்க வேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

இவ் உலகில் நாம் இருக்கும் சமூகம் நமது அனுபவங்கள், நமக்கு உலகத்தோடு உள்ள தொடர்பு இவை எல்லாமே இருவிதமாகத் தென்படுகின்றன.

ஒன்று இறைவன் நமக்குக் கொடுக்கும் அனுபவங்கள், நமக்கு அவர் தரும் அனுபவங்களின்மூலம் ஏற்படும் இறை நம்பிக்கை. மற்றது நமது ஆசைகளும், அகங்காரங்களும். அதன்மூலம் நமக்கு ஏற்படும் அனுபவங்கள் குழப்பங்கள் போன்றவை.

இறைநம்பிக்கை என்பது நாம் முழுமனதோடு அவன்பால் சரணடைவதே ஆகும். இச்செயல்மூலம் பல அடியார்கள் பயனடைந்துள்ளார்கள். இதை நாம் பல புராண இதிகாசங்களினூடாக அறியக்கூடியதாக உள்ளது. தற்கால சூழ்நிலைகளில் கூட இவ்வகையான செயற்பாடுகள் இலைமறை காய்போல நடந்த வண்ணமே உள்ளன. இதனை எல்லோராலும் உணர்ந்துகொள்ள முடியாது. இறை தியானத்தில் திளைத்தவர்களாலேதான் உணரமுடியும்.

எமது ஆன்மிக வாழ்க்கைக்கு ஆலய வழிபாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அம்சமாகும். நாம் ஆலயங்களுக்கு இறைவழிபாட்டிற்கு செல்லும்போதுகூட இறைவனை வழிபடப் போகின்றோமே என்ற சிந்தனையின்றி எமது மனங்களை பிற விடயங்களில் அலைபாயவிட்டுச் செல்கின்றோம்.

இப்படி நாம் ஆலயவழிபாட்டில் ஈடுபடுவது சாதாரணமான செயற்பாடாகப் போய்விட்டது. இதனால்த்தான் ஆலயங்களுக்குச் சென்றுங்கூட எம்முடைய வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க எந்த நல்லமாற்றமும் ஏற்படுவதில்லை.

நாங்கள் எமது வழிபாட்டின்போது எமக்குரிய தேவைகளை இறைவனிடம் கேட்கின்றோமே தவிர வேறு யாருக்காகவோ அவர்களது தேவைக்காகவோ நாம் பிரார்த்தனை செய்வதில்லை. இதன்மூலம் நாம் எந்த அளவுக்கு சுயநலம் கொண்டவர்களாக இருக்கின்றோம் என்பதையே காட்டுகின்றது. நம்முடைய இவ்வகையான செயற்பாட்டில் நல்ல மாற்றங்கள் ஏற்படாத வகையில் நாம் ஆலயங்களுக்குப் போவதாலோ நாம் செய்யும் வழிபாட்டினாலோ ஒரு பயனும் இல்லை.

தற்கால சூழ்நிலையில் ஆலய வழிபாடு என்று சொல்லும்போது பெரும்பாலும் எமது இளஞ்சந்ததியினர் குறுகிய கண்ணோட்டத்தில்த்தான் ஆலய வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். வழிபாட்டைவிட அங்கே இடம்பெறும் கேளிக்கை நிகழ்வுகளில் பங்கு பற்றுவதில்தான் கூடிய கவனம் செலுத்துகின்றனர். இந்நிலை மாறவேண்டும். மாற்றப்பட வேண்டும். ஆலய வழிபாட்டின் மகத்துவத்தை உணர்வதற்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதிச் செல்வனைப் பாடிப் பாடி சரணம் சரணமென்பேன்



அருண கிரிபோல குமர குருபரர்போல்
அடியேன் பாடுவேனோ? அன்றி
கருணைக் கீரன் போல ஆற்றுப்
படைதான் பாடு வேனோ?
பொருள் நயமாகப் புலவர் – போல
பொருந்தவும் பாடேன், எந்தத்
தருணமெதிலும் உனை நினைத்திடிலோ
தனியூற்றாய் வரும் பாட்டே

எந்தாய் என்றும் தந்தா யென்றும்
எண்ணி யுனை நானே
கந்தா கார்த்தி கேயா என்தன்
கற்பக மெனப் பாடுவேன்
சிந்தா குலமே தீர உன்தன்
தேவிமா ரிருவ ருடன்
வந்தே யென்முன் காட்சி தாராயோ
வடிவேல் முருகை யனே

புள்ளி மயில்மீ தேறிச் சந்நிதியான்
புனிதன் உலாவி யுடன்
வள்ளி தேவ யானை சகிதம்
வலமாய் வருகின்றான்
கொள்ளை இனிமை குலாவு முக்கனியும்
தேன் தினை மாவும் படைத்தே
வள்ளல் பாதம் விளக் கெடுத்தே யாம்
வணங்கித் தொழு வோமே

**அன்னப்பணி**

செல்வச் சந்நிதி சேர்ந்தசண் முகனே
சேயோனே குகனே
வல்ல குஞ்சரி வள்ளி மணாளா
வடிவேல் முருகை யனே
எல்லை யில்லா அன்னப் பணியுடன்
ஞானச் சுடர்ப் பணியும்
நல்ல மோகனதாஸ் சுவாமிகளுடே
நடக்க வைத்தாய் சரணம்

–முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)
**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)
**N. கதிர்காமநாதன்**
(கொழும்பு)
**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)
**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)
**ந. யோகேஸ்வரன்**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)
**அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)
**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)
**V.R. கனகராசா**
(சண்றைஸ் ஸ்ருடியோ, சுண்ணாகம்)
**தலைவர், செயலாளர்**
(வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)
**சி. பத்மநாதன் J.P**
(உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை)
**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)
**வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)
**உரிமையாளர்**
(ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. மகாலிங்கம் J.P
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
சு. சிவதாசன் G.S
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
தலைவர், செயலாளர்
(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)
உரிமையாளர்
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
ஐ. லோகஞானம்
(பிரதம அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்)
ஆ. விஸ்வலிங்கம்
(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)
V. அரியராசா
(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)
அ. அரியகுமார் அதிபர்
(யாழ். சித்திவிநாயகர் பாடசாலை, பருத்தித்துறை)
க. யோகேந்திரநாதன் G.S
(தும்பளை, பருத்தித்துறை)
உரிமையாளர்
(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)
செ. சந்திரமூர்த்தி
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
சி. பஞ்சலிங்கம்
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
செல்வி ஷாலினி தேவேந்திரா
(ஔஸ்காவீதி, உரும்பராய்)
இராசரெட்ணம் வசந்தன்
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
இ. குமாரதாசன்
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)
உரிமையாளர்
(உதயா பேக்ஹவுஸ், வல்லைவீதி, சங்கானை)
N. K. தங்கராசா
(இளை. தபாலதிபர், புலோலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்**
(நாதன் மெடிக்கல் சென்ரர்,நெல்லியடி)
**சோ. புவனதாஸ்**
(சங்கானை)
**த. விவேகானந்தன்**
(புலோலி தென்மேற்கு, புலோலி)
**இ. ஜெயபாலன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
**மா. ந. பரமேஸ்வரன்**
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
**K. சிவம்**
(காரைநகர் றோட், யாழ்ப்பாணம்)
**S. ஈஸ்வரன்**
(டச்சுவீதி, சித்தங்கேணி)
**ச. மதனகுமார்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**கெ. தவராசா**
(விவேகானந்தர் வீதி, இணுவில்)
**வி. ந. ஸ்ரீதரன்**
(நீராவியடி, யாழ்ப்பாணம்))
**செ. செல்விகா**
(நீர்வலடி ஒழுங்கை, மானிப்பாய்)
**சி. இராசரத்தினம்**
(இராஜஸ்தான்,சுதுமலை)
**வே. மதிபாலசிங்கம்**
(செட்டியதெரு, கரவெட்டி)
**நா. முருகையா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**செல்வராசா பொன்னுத்துரை**
(கரந்தன், நீர்வேலி)
**விஸ்வலிங்கம் குகலிங்கம்**
(பண்ணாகம், சுழிபுரம்)
**மா. தேவகுரு**
(செட்டிவளவு லேன், இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செ. பாலச்சந்திரன்**
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
**இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)**
(நெல்லியடி, கரவெட்டி)
**தி. பாலசுப்பிரமணியம்**
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
**விஸ்வலிங்கம் துரைசிங்கம்**
(பண்ணாகம் தெற்கு)
**நாகன் கிருஸ்ணபிள்ளை**
(கோண்டாவில்)
**சி. கந்தையா**
(சுண்ணாகம்)
**K. விஷ்ணுமோகன்**
(உரும்பராய் கிழக்கு)
**சி. கனகசபை**
(நீர்வேலி)
**ச.க. தம்பு**
(அல்லாரை, மீசாலை)
**சிதம்பரநாதன் ஸ்ரீகரன்**
(புத்தூர்)
**நாகராசா சாந்தி**
(அச்சுவேலி)
**க. ரட்ணேஸ்வரன்**
(சங்கானை)
**சுப்பிரமணியம் மங்களேஸ்வரி**
(பருத்தித்துறை)
**சிவபாதசுந்தரம் கீதா**
(கரணவாய் மத்தி)
**க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்**
(ஆனைக்கோட்டை)
**திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி செல்வநாயகம்**
(வடலியடைப்பு)
**திருமதி சீதாதேவி இந்திரன்**
(மீசாலை)
**உரிமையாளர்**
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் சார்ந்த அறநெறி வாழ்வு

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

மனிதன் அறிவு நிரம்பப் பெற்றவன். மனித அறிவானது பகுத்தறிவு, இயலறிவு, கற்றறிவு, பட்டறிவு ஆக உள்ளமை நோக்கற்பாலது. அதேவேளை மனிதனிடம் வேகம் நிறைந்த உணர்ச்சிகளும் காணப்படுகின்றன. இந்த உணர்ச்சிகள், மனிதனின் அறிவை மழுங்கச் செய்யக்கூடிய சக்தி வாய்ந்தவை. காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாற்சரியம் என இவ்வுணர்ச்சிகள் பலவாக உள்ளன. உணர்ச்சிக் கொந்தளிப்புகள் மனிதனை ஆட்கொள்ளும்போது, அறிவு அகன்று விடுகிறது. உண்மையில், உணர்ச்சிகள், அறிவைப் பலவந்தமாக அகற்றி விடுகின்றன என்று கூறுவதே மிகப் பொருத்தமாகும். உணர்ச்சிகளோடு மட்டும் உறவுகொண்டு, அறிவோடு துறவு கொள்ளும் மனிதர்கள், மிருக நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர். உருவத்தில், அங்க அடையாளங்களில், அவர்கள் மனிதர்கள் போலக் காட்சியளிப்பினும், அவர்கள் புரியும் செயல்களில் விலங்குத் தன்மை இருக்குமே அன்றி மனிதத்தன்மை இருக்காது.

ஆத்திரப்படுதல், ஆவேசமடைதல், சினம் கொள்ளுதல்; போர்முனைப்பு, வன்முறைகள், வஞ்சம், பழிக்குப் பழிதீர்த்தல் போன்றவற்றில் ஈடுபடுதல், முறையற்ற பால் கவர்ச்சி கொள்ளுதல் முதலிய தீய உணர்ச்சிகள், மனிதனின் அறிவு அகற்றப்பட்ட நிலையில், ஆதிக்கம் செலுத்துகின்றன. விளைவுகள் பாரதூரமானவையாகி விடுகின்றன. கொலை, களவு, மது, மற்றும் போதைப் பொருள் பாவனை, காமம், பொய் எனும் பஞ்சமா பாதகங்கள் இடம்பெற ஏதுவாகின்றன. தனி மனித நிம்மதி, குடும்ப அமைதி, சமுதாய அமைதி என்பன மறைந்து விடுகின்றன.

தற்காலத்தில் சமூகங்களில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், அமைதியின்மைக்கும், வன்செயல்களுக்கும் அடித்தளமாக அமைவது மனிதரிடம் அதிகரித்து வரும் உணர்ச்சிப் பெருக்கமும் மேலாதிக்கமும், அவற்றின் விளைவாக ஏற்பட்ட அறிவுப் பஞ்சமுமே என்றால் அது மிகையாகாது.

குடும்பங்களில் ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகள், பூசல்கள், தப்பபிப்பிராயங்கள், வன்முறைகள், குடும்பப் பிரிவுகள் யாவும், அறிவுக்கு இடங்கொடுக்காமல் உணர்ச்சிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதால் நிகழ்கின்றன என்பதை உணர்ந்து கொண்டால், தனிமனித அமைதி, குடும்ப அமைதி என்பவற்றைக் காப்பாற்றிக்கொள்ளலாம். அவ்வாறே உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், உடன் பணிபுரிவோர், மற்றையோர் ஆகியோருடன் கருத்து வேற்றுமை கொள்ளுதல், சண்டை சச்சரவுக்குப் போதல், வாக்குவாதப்படுதல், அவற்றின் விளைவாக நீங்காத வெறுப்பையும், பகைமையையும் தேடிக்கொள்ளல் என்பனவற்றிற்கு மூல காரணம், ஒரு கணம் நமக்குள் வந்து போகும் உணர்ச்சிப் புயலின் வீரியம் என்பதை நாம் உணருவோமானால், இக்கொடுமையான விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

செயலுக்கேற்ற விளைவு நிச்சயம் உண்டு. அது இயற்கை நியதியும் இறை நீதியுமாகும். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும், அறிவைப் பெருக்கவும் எமக்குக் கிடைத்துள்ள ஒரே வழி, ஆன்மிகத்தில் நாட்டங்கொண்டு ஆன்மிக வழியில் எமது கருத்தைச் செலுத்துவதுதான். உலக வாழ்க்கையுடன் ஆன்மிகம் இணையும்போதுதான், வாழ்வு அறநெறி வாழ்வாக மலர்ச்சி பெறுகிறது. இறை உணர்வும், அறநெறியும் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையெனும் நாணயத்தின் இரு பக்கங்கள். நாணயத்தின் ஒரு பக்கத்தில் சிதைவு ஏற்பட்டாலும், அது மதிப்பு இழந்து விடுகிறது; பெறுமதியற்ற செல்லாக்காசு ஆகிவிடுகிறது. மனித வாழ்க்கையிலும் இறையுணர்வும், அறநெறியும் பேணப்படும் நிலையில்தான், மனித வாழ்விற்கு மதிப்பும், பெறுமதியும், கணிப்பும் கிடைக்கின்றன.

ஆன்மிகம் அறிவுபூர்வமானது. ஆன்மிகத்தில் அடங்காத தருமம் இல்லை. சத்தியம், அன்பு, நீதி, நேர்மை, அகிம்சை, இரக்கம், கருணை, பொறை, அடக்கம் உள்ளிட்ட தருமங்கள், அறங்கள், விழுமியங்கள் அனைத்தும் ஆன்மிகத்தில் அடங்கும்.

மனிதர்கள், உலகியல் ஆசைகள், பழக்கம், சூழ்நிலை என்பவற்றின் செல்வாக்கினால் உந்தப்பட்டு, தான் மனிதன் என்பதை மறந்து, புலன்கள் வழிநின்று, விவேகத்தைத் துறந்து, வேகத்துடன் உறவு கொண்டாடி, வாழும் மயக்க நிலையிலிருந்து விடுதலை பெறவேண்டியது மிக அவசியமாகும். அப்பொழுதுதான், மனிதர்கள் அறிவின் தெளிவோடு, மனித வாழ்வின் பயன் என்ன என்பதை உணர்ந்து, மனிதத் தன்மைகளுடனான மனிதர்களாக வாழ வழிபிறக்கும். அறிவு புலனடக்கம், மனவடக்கம் என்பவற்றை மனிதன் அடைவதற்கு உறுதுணையாக உள்ளது. அறிவு மனிதனுக்கு அறம் காக்கும் கருவியாகும். அதுவே, மனிதரின் மனதுக்கு அமைதியளித்து பாதுகாக்கும் கவசமும் ஆகிறது. அறிவே தெய்வம் என்பர் ஞானியர். அறிவுள்ளவர்கள் எல்லாமுடையர்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" -திருக்குறள்.

அறிவுடையவர் எல்லாம் உடைய பெருஞ் செல்வர்கள் ஆவர். அறிவைப் பறிகொடுத்தவர்கள், வேறு எத்தகைய செல்வங்களை உடையவர்களாக இருப்பினும், ஏதும் அற்ற வறியவர்களேயாவர். மனத்தையும், புலன்களையும் அவை செல்லுமிடமெல்லாம் செல்லவிடாமல் தடுத்து, தீமையானவற்றிலிருந்து நீக்கிக் காத்து, நன்மையானவற்றில் செல்ல விடுவதே அறிவு ஆகும்.

அறிவில்லாதவர் தம்மைத் தாமே துன்புறுத்துபவர்கள் ஆக அமைந்து விடுகின்றனர். அறிவில்லாமையே, இல்லாமை பலவற்றினுள்ளும் மிகக் கொடிய இல்லாமையாகும் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

"அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு" -திருக்குறள்.

மனிதர்களாகப் பிறந்த அனைவரும் இன்பமான, மகிழ்ச்சி நிறைந்த, ஆரோக்கியமான, நிறைவாழ்வையே வாழ விரும்புகின்றனர். ஆனால் நடைமுறையில், அத்தகைய சிறப்பான வாழ்க்கை அமைவதில்லை. அதற்குரிய காரணம் என்னவென்று சிந்தித்தால், ஒவ்வொருத்தரும் தாம் தாம் அனுபவிக்கின்ற துன்பங்கள் துயர்களுக்குத், தாமே காரண கர்த்தாவாக உள்ளமை தெளிவாகத் தெரியவரும். "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்", என எச்சரிக்கிறது உலகநீதி. கேட்டு நடந்தால் உண்டு வாழ்வு. நிறைவான, மகிழ்ச்சியான அமைதி நிறைந்த வாழ்வு வாழ, அனைவரும் ஆன்மிக அறிவிலே, அதன் வழி நல்லொழுக்கப் பண்பாட்டிலே, முழுமையான உயர்வு பெறுதலும், அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தலுமே சிறந்த வழியாகும் என்பதை மகான்கள் உணர்ந்து கூறியுள்ளனர். ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு முன், அச்செயலால் ஏற்படும் விளைவறிந்து, செயலாற்றும் பண்பினைக் கைக்கொண்டு வாழ்தலே ஆன்மிகம் சார்ந்த அறநெறி வழிப்பட்ட மனித வாழ்வு ஆகும் என்பதை உணர்வோமாக.

**முயற்சி செய்தும் பலன் கிடைக்காவிட்டால் அதனால் தோல்வி ஏதுமில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்திநுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களி னூறலர் பிழைத்தும்
ஏழு திங்களிற் றாம்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்



**பதவுரை:-**

மானுடப் பிறப்பினுள்- மக்களாய்ப் பிறக்கும் பிறப்பினுள்ளும், மாதா உதரத்து ஈனம் இல் கிருமி செருவினில் பிழைத்தும்- தாயின் கருப்பையினுள்ளே குன்றுதல் இல்லாத புழுக்கள் இடும்போரிலே சிதைவுபடாமல் தப்பியும், ஒரு மதி தான்றியின் இருமையின் பிழைத்தும்- கருப்பையினுள் முதல் திங்களில் தான்றிக்காயின் வடிவுபோல் இருக்கையில் இருவகையாக உண்டான கேட்டினின்றும் தப்பியும், இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்- இரண்டாந் திங்களில் நாதமும் விந்துவும் ஒன்றுபட்டு விளைந்தவிடத்தும் எஞ்சிய விந்து உட்புகுதலால் உளதாகும் ஒருவகைக் கேட்டினின்றும் தப்பியும், மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்- மூன்றாம் திங்களில் கருவளர்தற் பொருட்டுக் கருப்பையிற் சுரக்கும் மதநீர் மிகுதியினின்றும் தப்பியும், ஈர் இரு திங்களில் பேர் இருள் பிழைத்தும்- நான்காம் திங்களில் கருப்பையினுள் உண்டாகும் பெரிய இருளுக்குத் தப்பியும், அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்- ஐந்தாம் திங்களில் சாவதினின்றும் தப்பியும், ஆறு திங்களில் ஊறு அலர் பிழைத்தும், ஆறாம் திங்களில் உளதாகும் இடையூற்றிற்கு ஏதுவாகிய விரிவுகளுக்குத் தப்பியும், ஏழு திங்களில் தாள் புவி பிழைத்தும்- ஏழாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களில் உறுப்பு முழுவதும் நிறைவுற்ற கரு பூமியில் வீழ்தலினின்றும் தப்பியும், எட்டாம் திங்களில் கட்டமும் பிழைத்தும்- எட்டாந் திங்களில் உளதாகும் துன்பத்தினின்றும் பிழைத்தும் ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்- எட்டாந் திங்களில் உண்டாகிய துன்பம் ஒன்பதாம் திங்களில் மிகுதலால் அதனின்று தப்பியும், தக்க தசமதி தாயொடு தான்படும் துக்க சாகர துயர் இடை பிழைத்தும்- கருவுயிர்த்தற்குத் தகுந்த காலமாகிய பத்தாந் திங்களில் தன்னைப் பெறுகின்ற தாய் அடையும் கடல்போன்ற பெருந்துன்பத்திலும் தான் அடையும் துன்பத்திலும் தப்பியும்.

தாயும் தந்தையும் ஒருங்கு புணர்ந்தவழி தந்தையின் உடம்பினின்றும் வெளிப்பட்ட வெண்பாலிலுள்ள புழுக்கள் தாயின் கருப்பையிற் சென்ற அளவில் அங்குள்ள செம்பாலிலுள்ள தாய்க் கருவினொடு ஒன்று சேர்தற்குச் செய்யும் போரில் அப்புழுக்களில் ஏனையவற்றைப் புறத்தே தள்ளித் தான் சிதைவுபடாமல் அத்தாய்க் கருவிற்சென்று ஒன்றாதலை, "மாதாவுதரத்து ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்" என்றது உணர்த்தியது.

உதரம்- வயிறு, "உதர, மோடு சடர மகடும் வயிறே" என்பது பிங்கலந்தை (5:288). ஈண்டுக் கருப்பையை உணர்த்தியது. ஹிந என்னும் வடசொல் ஈனம் என்றாயிற்று. கிருமி- புழு; வடசொல். ஈனமில் கிருமி என்றார் தந்தையின் வெண்பாலிலுள்ள கிருமிகள் மிகுதியாயிருத்தலின், செரு- போர்.

தந்தையின் வெண்பாலிற்றோன்றிய கருவிலொன்று தாயின் செம்பாலிற்றோன்றிய கருவிற் பதிந்து முதல் திங்களில் தான்றிக்காயின் அளவினை அடையும். அவை இரண்டும் ஒன்றுபடாமல் வேறுபட்டிருக்குமாயின் கருச்சிதைவுக்கு ஏதுவாமாதலின், "ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்" என்றார்.

தந்தையின் கருவும் தாயின் கருவும் ஒன்றுபட்டவிடத்தும் அதனுள் பிற ஆண்கருக்கள் புக்கு ஊறு செய்யுமாயின் அக்கரு சிதையும். அதனைத் தடுத்தற்குத் தாய்க்கருவின் வாய் அடைபடுதல் வேண்டும். அது நோய் மயக்கம் முதலிய ஏதுக்களால் நிகழாத விடத்துப் பிற ஆண் கருக்கள் புக்கு முன் புக்க கருவை அழித்துவிடும். அந்த தன்மையினின்றும் தப்ப வேண்டுமென்பர், "இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்" என்றார்.

"எப்பிறப்பும் முன்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துட் - கர்ப்பமாய்ப்
புல்லிற் பனிபோற் புகுந்திவலைக் குட்படுங்கால்
எல்லைப் படாஉதரத் தீண்டியதீப் - பல்வகையால்
அங்கே கிடந்த அநாதியுயிர் தம்பசியால்
எங்கேனு மாக எடுக்குமென - வெங்கும்பிக்
காயக் கருக்குழியிற் காத்திருந்தும்" 13-19

எனப்போற்றிப் ப..றொடையில் வருதலும் ஈண்டு அறியற்பாலது.

கருக்கள் ஒன்றுபட்டு, வாயிலும் அடைபட்டுக் கருவளரும்போது முன்பு மாதந்தோறும் கழிந்துகொண்டு வந்த தாயின் மதநீர் அக்கரு வளர்தற் பொருட்டு அக்கருப்பையினுள் சுரக்கும். அவ்வாறு சுரக்கும் மதநீர் வேண்டிய அளவினும் மிக்கவிடத்துக் கருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்து கருச்சிதைததலும் மூன்றாம் திங்களில் நிகழ்தலுண்டாதலின் அச்சிதைவுக்குத் தப்பியமையை "மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்" என்றார்.

நாலாந் திங்களில் கருப்பையினுள் சுரந்த மதநீர் கருவளர்தற்கு வேண்டிய பகுதிபோக மிகுதி கழிவாகிய கருநிறத்தாய்க் கிடக்கும். அது மிகுந்தவிடத்தும் அதன் நச்சுத்தன்மையால் கருச்சிதைவுண்டாகுமாதலின் அதற்குத் தப்பியமையை "ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்" என்றார்.

ஐந்தாம் திங்களிற் கருப்பையிற் பெருகும் மதநீரும் அதன் கழிவாகிய கரிய பகுதியும் மிக்கவிடத்து அவற்றுட்பட்ட கரு பிழைத்தலரிதாகலின் "அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்", என்றார். முஞ்சுதல்- சாதல். இதனை "துஞ்சல் பொன்றல் விளிவல் வீதல், முஞ்சல் துவன்றல் முடிவுலத்தல் வீடல், மாய்தல் இறத்தல் மாளறபுதல், சாத லென்றச் சாற்றினர் புலவர்" என்னும் திவாகரத்தானும் (செயல்பற்றிய) அறிக.

ஆறாந்திங்களில் பிண்டமாக இருந்த கருவினிடத்துக் கை முதலிய உறுப்புக்கள் வளர்தலாகிய விரிவினால் கருப்பை இடங்கொள்ளாவிடத்துக் கரு சிதைவுறுமாதலின் அதற்குத் தப்பியமையை "ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்" என்றார். ஊறு அலர்- உறுவதாகிய விரிவு.

ஏழாந் திங்களிற் கரு உறுப்புகள் முழுவதும் அமையப் பெறுதலால் ஒரேவழி அக்கருவினைத் தாங்கமாட்டாது கருவாய் திறத்தலானும் கருச்சிதையும் அதனின்று தப்பியமையை "ஏழுதிங்களிற் றாழ்புவி பிழைத்தும்" என்றார்.

எட்டாந் திங்களிற் கரு மிக விரைந்து வளர்தலானும், அதனை வளர்தற்குச் சுரந்த மதநீரின் கழிவு மலம் மிகுதலானும், தாய் உண்ணும் உணவின் அடர்ச்சியானும் நெருக்குண்டு வருந்துதலினும் அத்துன்பங்களினின்று தப்பியமையை "எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்" என்றார். கட்டம்- கஷ்டம். "கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே" (சதகம் 48) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும் என்றது முன் சொன்னவற்றின் மிகுதியினால் வரும் துன்பங்களினின்று தப்புதலை உணர்த்தியது.

பத்தாம் திங்கள் கருவுயிர்த்தற்குத் தகுந்த காலம் என்பார். "தக்க தசமதி" என்றார். தச- பத்து. தசநான் கெய்திய பணை மரு ணோன்றாள்... பொருதொழி நாகம்" (நெடுநல் 115-7) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தாய்படும் துக்கசாகரத்தொடு தான்படும் துயரிடைப்பிழைத்தும் என நிரல் நிறையாக கொள்க.

"தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்
தியாயுறு துயரமும் யானுறு துயரமும்" (பதினொராந் திருமுறை)

எனத் திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் வருதலுங் காண்க.

தாயொடு என்பதில் ஒடு- எண்ணொடு. ஆறறிவுடைய தாய் கருவுயிர்க்குங்கால் அடையும் துன்பம் பெரிதாகலின் "துக்க சாகரம்" என்றும் ஆறறிவு விளங்கப்பெறாத பச்சிளங்குழவி அடையும் துன்பம் அவ்வளவு பெரிதாகாமையின் அதனைத் "துயர்" என்றும் கூறினார்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதவூரரும் திருவாசகமும்

— திரு நா. நல்லதம்பி அவர்கள் —



அரிமர்த்தன பாண்டியன், திருவாதவூரரின் கல்வி கேள்வி அறிவைக் கண்டு மகிழ்ந்து, அவரைத் தனது முதன் மந்திரியாக்கி, தென்னவன் பிரமராயன் எனச் சிறப்புப் பட்டஞ் சூட்டி வைத்திருந்தான்.

அந்த நேரத்தில், வாதவூரர், கல்விகேள்விகளிலும் வேத ஆகமங்களிலும் பக்தி நிலையிலும் சிறந்து, முன்தவப் பயனால் சரியை, கிரியை, யோகம் என்னும் நெறிகளில் முதிர்ச்சி பெற்றவராய் சத்திநிபாத மென்னும் நான்காம் ஞான மார்க்கத்தை நாடி இருக்கின்றார்.

ஆனால், மந்திரிப் பதவியைப் பெற்றதனால் தனது கடமைகளைத் திறம்படச் செய்து வழுதியின் நீதி நெறியையும் பாதுகாத்து வந்தார்.

தீத்திற வினையி னாலே சிறைப்படும் உயிரை யெல்லாம்
பார்த்தனர் உலகவாழ்வில் பயனிலை என்று தேர்ந்து
கூத்தினர் தன்மை வேறு கோலம் வேறு ஆகு மாபோல்
நீத்தனர் மனத்தின், முன்போல் நிகழ்த்தினர் வழுதி நீதி

எனக் காட்டுகின்றார் கடவுள் மாமுனிவர்.

ஞானத்தை அடைவதற்கு குரு தேவை. குருவில்லா வித்தை பாழ். அதனால் ஞானாசாரியாரைத் (குருவைத்) தேடிக்கொண்டிருக்கின்ற திருவாதவூரரை- தேனைத் தேடும் தேனீ போலத் திருவாசகத் தேனைத் தேடும் திருவாதவூரரை, திருப்பெருந்துறைக்குச் சென்று நல்ல இனக் குதிரைகள் வாங்கி வரும்படி பொன்னும் ஏவலாளருங் கொடுத்து அனுப்புகிறான் பாண்டியன். இவ்வாறு இந்த நேரத்தில் அவரிடம் கொடுத்த பொன், மெய்ஞ்ஞானம் பெறும்படி கொடுத்த சன்மானம்போல இருந்தது என்பர்.

திருப்பெருந்துறைக்குச் சென்ற வாதவூரருக்குக் குதிரைகளின் சத்தம் காதில் கேட்கு முன், ஒரு குருந்தமரச் சோலையிலேயிருந்து வேதபாராயண ஒலி கேட்கிறது! அங்கே, திருவாதவூரரை ஆட்கொள்ளும் பொருட்டுச் சிவபெருமான் உருவத் திருமேனியெடுத்து குருந்த மர நிழலில் வீற்றிருக்கின்றார். இத்தருணத்தைப் பயன்படுத்தித் திருமாலும் பிரமாவும் வந்து வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்திராதி தேவர்கள், பூதகணங்கள், திருநந்தி தேவர், பூமாதேவி, இலக்குமி முதலானோரும் கூடியிருக்கிறார்கள்.

அங்கு என்ன நிகழ்கிறது என்பதை அறிந்து வரும் வண்ணம் ஏவலாளரை அனுப்பு கிறார் வாதவூரர். அங்கு சென்றவர்கள் திரும்பி வந்து, சிவபெருமானைப் போன்ற சிவயோகியார் ஒருவர், அரிபிரமேந்திராதி தேவர்களும் ஏனையோரும் சேவிக்கக் குருந்த மர நிழலில் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டோம் என்கின்றனர்.

உடனே வாதவூரர் அங்கு சென்று, சிவயோகியாரை மனதால் தியானித்து, அமைச் சருக்குரிய பெருமிதத்தோடு நின்று, "ஐயா! தங்கள் கையிலுள்ள திருமுறை யாதோ"

**அறிவு நம்மைக் கைவிடும்போது நம்பிக்கையே உதவுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்கிறார். அது பொய்ம்மையிலாச் சிவஞான போதம் எனப் பதிலளிக்கிறார் சிவயோகியார். தொடர்ந்து "என்னை நீ அறிந்திலையோ? எனக் கேட்டு கிருபா நோக்கஞ் செய்கிறார் இறைவன். அடியார்க்கெளியோனான இறைவன் இவன் எனத்தெளிந்த திருவாதவூரர், இறைவனைத் தலைதாழ்த்தி வணங்கி நிற்க, இறைவன், வாதவூரர் தலைமேல் திருவடியை வைத்து அருள்செய்கிறார். கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க எனச் சிவபுராணத்தில் வாதவூரர் இதனைக் குறிப்பிடுகின்றமை காணலாம்.

இவ்வாறு அன்பு நெறியை அறியவைத்த சிவபிரான், தமது அருட்கோலத்தை மறைத்துக்கொண்டு பழவடியாரோடு சிவபுரம் சென்றார்.

"அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

எனத் திருமூலர் குறிப்பிடுவதுபோல, அன்பின் வடிவான, சிவ வடிவான வாதவூரர் சிவபெருமானைக் காணும் பேரின்பம் பெறு கிறார். சிவத்தைச் சிவத்தாற்றான் காணலாம் என்பது சித்தாந்தம்.

திருப்பெருந்துறையிலே பரமாச்சாரி யார் கோலத்தையும் திருவுத்தரகோசமங்கை, திருவிடைமருதூர், திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் வித்தக வேடத்தையும் காட்டியரு ளிய ஈசன், தில்லையிலே அருவுருவத்தை யும், குணங்கடந்ததும் குணத்திற் கிடந்தது மான தமது உண்மை நிலையையும் காட்டி யருளினார்.

அப்பொழுது, ஐயனே! என்னைப் பிறவிப் பிணியிலிருந்து மீட்டெடுக்க எழுந்தரு ளிய புதுமைதான் என்னே; காலகாலனே! கண்ணின் மணியே! என அழுதார்; ஏனைய திருத்தொண்டரோடு கூடினார் வாதவூரர். சிவிகைமேல் இவர்ந்து கவிகைக் கீழ் மன்ன னென வந்தவர், உருமாறி நீறுசாத்தி, விரித்த குஞ்சியும் கோவணவுடையுங் கொண்டு விழி நீர் பெருக்கி நின்றார்.

ஏவலாளர், திருவாதவூரரை அணுகி, குதிரை வாங்குவது பற்றி ஞாபகமூட்டிய போது, அவர்களை அகன்று போய் விடுமாறு கூறிவிட்டார். ஆகவே அவர்கள் தென்னவனிடம் போய், திருப்பெருந்துறையில் நடந்தவைபற்றி விண்ணப்பஞ் செய்தார்கள். அதனால் வெகுண் டெழுந்த வழுதி, வாதவூரரை அழைத்து வரும்படி திருமுகம் கொடுத்து தூதரை அனுப்பினான்.

வாதவூரர் இறைவனைத் துதித்துக் கொண்டு மதுரைக்குப் போய் ஆவணி மூல நட்சத்திரத்தன்று குதிரைகள் வந்து சேரும் என்று அரசனிடங் கூறவே, அரசனும் அவ ருக்கு உபசாரம் செய்து முன்புபோல மந்திரத் தலைவராயிருக்கப் பணித்தான். ஆனால் திருப் பெருந்துறையிலே குதிரைகள் இல்லையெனச் சேவகர் வந்து வழுதிக்குச் சொல்லவே, வழுதி வாதவூரரைச் சிறையில் வைத்தான்.

சிறையிலே வாதவூரர் இறைவனைச் சிந்தையில் வைத்துத் தொழுது நின்றார். அதனால் இறைவன் நரிகளைக் குதிரை யாக்கி வர்த்தகர்போல வேதமாகிய குதிரை யிற் செல்ல, தேவர்கள் சேவகராக நரிக் குதிரைகளைக் கொண்டு மதுரை சென்றனர்.

குறிப்பிட்ட மூலநாளில் சங்கரனுடைய பரிகள் வந்தன. தாம் செய்த தவப்பயனால், தமது எண்ணப்படி குதிரைகள் வந்ததை மனதிற் கொண்டவராய் விளங்கிய வாத வூரரை அரசன் அழைத்துச் சென்று சன் மானங் கொடுத்தான்; கயிறு மாற்றிக் குதிரை களையும் பெற்றுக் கொண்டான்.

அன்றிரவு புதிய குதிரைகள் நரிகளாக மாறி, பழைய குதிரைகளையும் கடித்து, உறங்கிய மக்களையும் துயிலெழுப்பி அட்ட காசம் புரிந்து காட்டுக்கு ஓடிவிட்டன. அது கண்டு சீற்றங் கொண்ட பாண்டியன், இனிப்

**உன் அயலானை நேசி, ஆனால் வேலியை எடுத்துவிடாதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியில்லாத இருபிறப்பாளரான வாதவூரரை வைகைக் கரையில் சுடுமணலில் நிற்க வைத்தான். வைகை ஆறு பெருகி வாதவூரர் பாதங்களைக் குளிர வைத்தது. மக்கள் அணைகட்ட அழைக்கப்பட்டனர். அப்பொழுது இருவினையொப்பும், மலபரிபாகமுங் கொண்ட வாதவூரடிகள், மதுரை நகரை அழிக்காமல் இருக்க இறைவனை வேண்டி நின்றார். இதற் கிடையில் செம்மனச் செல்வியான வந்தியின் பங்கை அடைக்க இறைவன் சென்று பிட்டுக்கு மண் சுமந்து, பாண்டியனிடம் பிரம் படியும் பெறுகின்றார்.

இவையெல்லாம் வாதவூரரான அடி யாருக்காகவே சிவபெருமான் செய்த திரு விளையாடல் என்பதை உணர்ந்த பாண்டி யன், தான் செய்த குறை குற்றங்களை மன்னிக் கும்படியும் அரச பாரத்தை ஏற்கும்படியும் வாதவூரரை வேண்டினான். அதற்கு வாதவூரர், என்னைத் திருப்பெருந்துறைக்குப் போக விடு தலே உலகம் ஆள்வதற்குச் சமம் எனக் கூறினார். சிவபக்தருக்கு அரச வாழ்க்கையில் நாட்டம் இருக்காதென்பதை உணர்ந்து, அவரை அவர் வழியில் செல்லவிட்டுத் தான் மதுரைக்குத் திரும்பினான்.

திருவாதவூரடிகள்,

அண்டருக்கு அரியாய் போற்றி
அடியவர்க்கு எளியாய் போற்றி
வண்டமிழ்ப் பாண்டிநாடு
வாழமண் சுமந்தாய் போற்றி
கண் தனக்கினிய மேனி
காட்டிஎன் சென்னி மீது
முண்டகத் திருத்தாள் வைத்த
முத்தனே போற்றி போற்றி

எனத் துதித்து, தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது திருத்தொண்டர் கூட்டத்தில் திருப்பெருந்துறையில் இனிது இருந்தார்; திருவம்பலத்தில் முத்திநிலை பெற்றார். தொண்டர் கூட்டத்தில் இருந்து,

வெண்பிறை முடித்த வேணி விண்ணவர் அன்பிலாத
பண்பினர் எனினும் தம்மைப் பாடினர்க்கு இரங்குவாரென்று
எண்பெறு நமச்சிவாய வாழ்க வென்றெடுத்து நாதன்
வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகலல் உற்றார்

இவ்வாறு பல திருத்தலங்களுக்குச் சென்று திருவாசகம் பாடிய திருவாதவூரர், திருவண்ணாமலை வந்து சேர்ந்தார். அங்குள்ள மகளிர் மார்கழித் திருவாதிரை நாளில் அதிகாலையில் கூடி நீராடி இறைவனை வழிபடுவது கண்டார். அவர்களுக்காகத் திருவெம்பாவை என்னும் திருவாசகத்தைப் பாடியருளினார்.

பின்னர் தில்லையம்பலத்தில் திருவாசகத் திருமுறையை வாயிற் படியில் வைத்தார். அங்கு தில்லைவாழ் அந்தணர்கள் திருவாசகத்தின் பொருள் கேட்க, அவர்களை அழைத்துக் கொண்டு திருப்புலியூர் சென்று,

.........

ஒன்றியஇத் தமிழ் மாலைப்
பொருள் இவர் என்று உரைசெய்து
மன்றுதனிற் கடிதேகி
மறைந்தனர் அங்கு அவர்காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழ்த்து

பூதல மாதும் வாழ்க பொன்மழை பொழிந்து வாழ்க
வேதஆ கமும் வாழ்க வேந்தர்செங் கோலும் வாழ்க
தீதில்ஐந் தெழுத்தும் நீறும் சிவனடி யாரும் வாழ்க
வாதவூர் இறை புராணம் படித்தவர் கேட்டோர் வாழ்க

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சக மென்னும் தேன்.

## உயர்ந்த கோபுரங்களும் தாழ்ந்த உள்ளங்களும்

ஆலயம் என்பது ஒரு சமூக முகவர் நிலையம். ஒரு கிராமத்தில் உள்ள சனசமூக நிலையம் எப்படி ஒரு சமூக முகவர் நிலையமாகத் தொழிற்பட்டு மக்களின் உள்ளங்களைப் பண்படுத்துகின்றதோ. அதே போன்றதொரு கடமை மத வழிபாட்டுத் தலங்களுக்கும் உண்டு. இந்தப் பாரிய பொறுப்பை எங்கள் மத வழிபாட்டுத் தலங்கள் எவ்வளவு தூரம் நிறைவேற்றுகின்றன என்பது கேள்விக் குறியே. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற எங்கள் இந்துமதக் கோட்பாட்டை மற்றைய மதங்கள் கடைப்பிடிக்கும் அளவிற்கு நாங்கள் கடைப்பிடிக்கின்றோமா? நாங்கள் இடித்துக் கட்டும் கலாச்சாரத்தைத்தான் கடைப்பிடிக்கின்றோம். ஓர் ஆலயத்தின் வருமான நிலையில் வீழ்ச்சி ஏற்படும்போது உடனடியாக பொதுக்கூட்டத்தைக் கூட்டி ஒரு தீர்மானத்தை எடுத்து ஆலயத்தின் ஒரு பகுதியை உடனடியாக இடித்து மீண்டும் கட்டி ஏதாவது ஓர் உச்சரிக்கமுடியாத பெயரைக் கொண்ட கும்பாபிஷேகத்தைச் செய்து தூள் கிளப்பி விடுகின்றோம். இந்த இடித்துக் கட்டும் கலாச்சாரம் மற்றைய மதங்களில் அரிதாகவே காணப்படுகின்றது. அவர்கள் தங்கள் ஆலய வளங்கள் முழுவதையும் சமூக மேம்பாட்டிற்காக பயன்படுத்துகின்றனர். ஓர் ஆலயத்தின் மூர்த்திகரம் அல்லது தெய்வீகத் தன்மையானது வானளாவிய கட்டடங்களாலோ அல்லது கோபுரங் களாலோ நிர்மாணிக்கப்படுவது அல்ல. அது மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்கு எவ்வளவுதூரம் சேவையாற்றி இருக்கின்றது என்பதில்த்தான் அதன் தெய்வீகம் தங்கி உள்ளது. என்னைப் பொறுத்தவரையில் சுவாமி விவேகானந்தர் சமாதியடைந்த கல்லறைக்குள்ளேயே எமது சமயக்கோட்பாடுகளும் என்றோ முடங்கிவிட்டது என்று நினைக்கின்றேன். எமது சமயக் கோட்பாடுகளை நாம் சற்று சீர்திருத்திக் கொள்வது நல்லது. இல்லாவிட்டால் இக் கடிதத்திற்கு நான் இட்டுள்ள தலைப்பு எம்மவரின் நடத்தைகளுக்குத் தகுந்த உதாரணமாவதை எம்மால் மறுக்க முடியாது.

யாழ் வதிரிவாசன்

நன்றி உதயன் 09.01.2005

அறிவாளிகள் புத்தகங்களோடு வாழ்க்கையையும் சேர்த்து படிக்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



36. நாதா குமரா நமஎன் றரனார்.
ஓதாய் என ஓதிய தெப்பொருள்தான்
வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசேகரனே.

## பதவுரை

வேதா முதல் விண்ணவர்- பிரமதேவன் முதலிய தேவர்கள், சூடும் மலர் பாதா- தங்கள் தலையில் சூடிக்கொள்ளுகின்ற தாமரையன்ன திருவடிகளையுடையவரே! குறமின்பத சேகரனே- மின்னல்கொடி போன்ற வள்ளியம்மையின் பாதத்தைச் சூடிக்கொண்டவரே! அரனார்- சிவபெருமான், நாதா- தலைவனே! குமரா நம என- குமாரக் கடவுளே! வணக்கம் என்று வணங்கி, ஓதாய் என எனக்கு உபதேசிப்பாய் என்று கேட்க, ஓதியது எப்பொருள் தான்- உபதேசித்தது எத்தகைய பொருள்? (அதை அடியேனுக்கும் உபதேசித்தருளு வீராக).

## பொழிப்புரை

பிரமாதி தேவர்கள் தங்கள் சென்னிமேல் சூடிக்கொள்ளும் திருவடியுடையவரே! மின்னல் கொடிபோன்ற வள்ளியம்மையின் திருவடியைச் சூடிக்கொண்டவரே! "தலைவரே! குமாரக் கடவுளே! வணக்கம். என்க்கு உபதேசித்தருள்" என்று சிவபெருமான் வணங்கிக் கேட்க, நீர் அவர் செவியில் உபதேசித்த பொருள் எது? அதை அடியேனுக்கும் உபதேசித்தருள்வீராக.

## விரிவுரை

**நாதா:–**

நாதன்- தலைவன்.
நாதத்தின் முடிவில் விளங்குபவன்.
நாத வடிவாகத் திகழ்பவன் என்றும் பொருள்படும். "நாதா" என்னும் சொல் வடமொழியில் இருவகையாகப் பொருள்படும்.
நாத- தலைவன். நாத- ஓசை.
தமிழின்கண் பொதுப்பட நின்று இரு பொருளையும் உணர்த்தும்.

**ஒரு பாவம் நூறு பாவங்களை அதன்பின்னே இழுத்துச் செல்லும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமரா நம என்று அரனார்:-**

சிவபெருமான் முருகனிடம் உபதேசம் கேட்கத் தொடங்குமுன் கூறிய மந்திரம் இது.

"குமாராய நம" என்பது சடக்கரம். இம்மகா மந்திரத்தைக் கூறி முருகனைத் துதி செய்தார்.

தமிழில் முருகா என்ற மந்திரம் சிறந்தது. வடமொழியில் குமார என்ற மந்திரம் சிறந்தது. பஞ்சாக்கரத்தில் "சிவ" என்பது சிறந்ததுபோல சடக்கரத்தில் குமார என்பது சிறந்தது. இம்மந்திரத்தை ஒருமுறை கூறினால் தீயில் பஞ்சு எரிவதுபோல சகல வினைகளும் எரிந்து கரிந்துபோம்.

குமரா நமஎன்று கூறினார் ஓர்கால்
அமராவதி யாள்வ ரன்றி- யமராஜன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம்.

-திருப்போரூர் சந்நிதி முறை (மாலை 47)

இம் மகா மந்திரத்தை ஒருமுறை உள்ளம் ஒருமைப்பட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உணர்வு ஒன்றி உரை செய்தோர் இந்திரனுலகத்தையும் அரசு புரிவார்கள். காலன் கைவசம் அடையார்கள், மற்றீண்டு வந்து பிறவார்கள். முருகன் திருவடியில் சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்கள்.

நம:- நமஸ்காரம் (வணக்கம்) என்பது ஒரு பொருள்.

ந- இல்லை. ம- என்னுடையது. என்னுடையது இல்லையென்று சிவபோதம் இழத்தல் ஆகும்.

**ஓதியது எப்பொருள்தான்:-**

சிவபெருமான் பிரமனைச் சிறையில் இருந்து விடுவித்த பின் சீடபாவத்தை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு, தன்னில் வேறாகாத குமாரக் கடவுளிடம் உபதேசம் பெற்று எல்லோருக்கும் குரு இன்றியமையாதவர் என்று உணர்த்தியருளினார்.

உண்மையிலேயே தனக்குத் தெரியாததால் உபதேசம் பெற்றார் என்று நினைக்கக் கூடாது; ஏன்? பிரணவம் ஈசன்து பீடம்.

ஈசன் மேவரும் பீடமாய் ஏனையோர் தோற்றும்
வாசமாய் எலா எழுத்திற்கும் மறைகட்கும் முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழறும்
ஆசில் தாரகப் பிரமமாம் அதன்பொருள் ஆய்ந்தான்

-கந்தபுராணம்.

**அரனார்:-**

அரன்- பாவத்தைப் போக்குபவன். அரன் நாமம் எங்கும் ஒலித்தால் உலகத்தில் துன்பங்கள் நீங்கும்.

"அரன் நாமமே சூழ்க வையகமும் துயர்தீர்கவே"

-திருஞானசம்பந்தர்.

அரகர என்ன அரிய தொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்

**இரக்கமில்லாதவன் நெஞ்சம் இரும்பிலும் கொடிது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே.

-திருமந்திரம்.

அரஹரா என்று கூறாதவர்கள் மூடர்கள் என்கிறார் அருணகிரிநாதர்.

யார் யார் மூடர்கள் என்று ஓர் அட்டவணை தொகுத்தார். அதில் இவ்வாறு கூறுகின்றார்.

"அரகராஎனா மூடர் திருவெணீ றிடாமூடர்
அடிகள் பூசியா மூடர் கரையேற
அறிவு நூல்கலா மூடர் நெறியிலே நிலாமூடர்
அறம் விசாரியா மூடர்"

-(இரதமான தேனூறல்) திருப்புகழ்

சிவபெருமானுக்கு முருகன் உபதேசித்த உபதேசப் பொருளைத் தனக்கும் உபதேசிக்குமாறு அருணகிரிநாதர் பல பாடல்களில் வேண்டுதல் புரிகின்றார்.

"உருத்திரனும் விருத்திபெற
அநுக்கிரகி எனக் குறுகி
உரைக்கமறை யடுத்த பொருள்
உணர்த்துநாள் அடிமையும் உடையேனோ?"

-(கருப்புவிலில்) திருப்புகழ்.

"உமைப்பங்காளர்க் கன்று பகர் பொருள் அருள்வாயே"

-(கொண்டாடி) திருப்புகழ்.

"நம்பர் உரைமாளச்
செயல்மாண்டு சித்தம் அவிழநித் தத்வம் பெறப்பகர்ந்த உபதேசம்
சிறியேன் தனக்கும் உரை செயில் சற்றுங் குருத்துவம் குறையுமோதான்".

-(சயிலாங்கனை) திருப்புகழ்.

"விசும்பின் புரத்ரயம் எரித்த பெருமானும்
..........................
பரவ அருளிய மவுன மந்த்ரந்தனைய பழைய
நினது வழியடிமையும் விளங்கும் படிக்கினி துணர்த்தி அருள்தாயே"

-(அகரமுத) திருப்புகழ்.

"பொற்புமத்தை வேணியர்க் கருள்கூரும்
புத்தி சித்தி வாய்கனம் சுத்த சத்ய வாசகம்
புற்பு தப்பிராணனுக் கருள்வாயே"

-(துத்திநச்ச) திருப்புகழ்

உபதேசித்த உட்பொருள் இது என அருணகிரிநாதர் கூறுகின்றார். யான் தான் என்ற துவிதம் அற்ற நிலையில் உண்மையறிவு தோன்றும்.

"யான்றான் எனுஞ்சொல் இரண்டுங்கெட்டாலன்றி யாவருக்கும்
தோன்றாது சத்தியம்"

-கந்தரலங்காரம் (95)

இந்த உண்மையறிவை அறிவதுதான் பிரணவப் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரவு புனை தரு புனி தரும் வழிபட
மழலை மொழி கொடு தெளிதர ஒளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய பெருமாளே"

-(குமரகுருபரகுணதர) திருப்புகழ்.

இந்த உபதேசப் பொருளைத் தாயுமானவர் கூறி வியப்பு அடைகின்றார்.

"அறிவை யறிவதுவே ஆகும் பொருள் என்று
உறுதிசொன்ன உண்மையினை ஓரும்நாள் எந்நாளோ?"

**வேதா முதல் விண்ணவர் சூடு மலர்ப்பாதா:-**

பிரமாதி தேவர்கள் முருகவேளின் திருவடி மலரைத் தங்கள் தங்கள் சென்னியில் சூடிக் கொள்ளுகின்றார்கள்.

"வீடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்
காடும் புனமும் கமழுங் கழலே"

-கந்தரனுபூதி (44)

"இமையவர் முடித்தொகையும் வனசரர் பொருப்புமென
திதையமு மணக்குமிரு பாதச் சரோருகனும்"

-திருவகுப்பு.

இதனால் எந்தை கந்தவேளின் முழுமுதற்றன்மை புலனாகிறது. அப்பரம்பொருளே மூவர்க்குந் தேவர்க்கும் தலைவன்.

**குறமின்பத சேகரனே:-**

வள்ளி தன்னை நோக்கி அரிய பெரிய தவம் செய்தவள் ஆதலின் அடியார்க்கு எளியனாக அவன் பாதமலரைத் தன் முடிமேல் சூடிக்கொள்கிறான். இது அப்பரமனுடைய கருணையின் எளிமையை உணர்த்துகின்றது.

"பைம் புனமேவும்
தீதிலா வஞ்சியஞ் சீதபா தம்படுஞ்
சேகரா"

-(காதல் மோகம்) திருப்புகழ்.

சிவமூர்த்தியும் பிரமாதி தேவர்களும் தொழுகின்ற முருகப்பெருமான் வள்ளியம்மையைத் தொழுகின்றார் என்று ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்துக் கூறும் சதுரப்பாடு மிகவும் இனியது. இதேபோல பூதவேதாள வகுப்பிலும் கூறும் அழகிய திருவாக்கையும் கண்டு மகிழ்க.

"மன்றல் பைம்புனல் தாள்பதாம் புயம்
வந்திக் குந்தனிக் காம வாஞ்சையன்
மத்தமு டித்தருள் அத்தர்ப்ரி யப்பள
நித்த மறைப்பொருளைத் தெளிவித்தவன்"

## கருத்துரை

பிரமாதி தேவர் தொழும் பெருமாளே! சிவனாருக்குச் செப்பிய பிரணவப் பொருளை அடியேனுக்கும் உபதேசித்தருள்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரியும் பிரதோஷ மகத்துவமும்

– திரு காரை எம்.பீ. அருளானந்தன் அவர்கள் –

ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதி லிங்கமாக வெளிவந்து லாவண்ய ரூபத்தையடைந்த புண்ணிய இரவே சிவராத்திரியாகும். விஷ்ணுவும் பிரம்மாவும் சிவபெருமானின் அடிமுடி தேட முயன்று காண முடியாமல் இறைவனைப் பூஜித்த இரவு சிவராத்திரி. லிங்கோற்பவராக அருவத்துக்கும், ஸ்வரூபத் துக்கும் இடையேயுள்ள ஜோதிர் லிங்கமாகத் திருவுருவம் எடுத்துக்கொண்ட நன்னாளே சிவராத்திரி.



இரவில் ஐம்புலன்களும் மனத்தில் ஒடுங்க, மனம் ஜீவனில் ஒடுங்க, ஜீவன் நம் உடலில் தூங்காமல், உண்ணாமல், ஸ்வயம் பிரகாசமாகவுள்ள ஸ்வரூபத் தில் அடைக்கலமாகிறது. இப்படி எல்லா ஜீவராசி களும் அடைக்கலமாகும் ஈஸ்வரனுடைய புண்ணி யத் திருநாளே சிவராத்திரி. அன்று விரதமிருந்து இரவு கண்ணுறங்காமல் சிவதரிசனம் செய்வ தால் பல பிறவிகளின் பாவங்கள் மன்னிக்கப் பட்டு ஈசன் அருள் கிட்டும்.

## பிரதோஷம்

சிவபெருமானுக்கு உகந்தவேளை பிரதோஷவேளை. தோஷம் என்றால் இரவு வருவதற்கு முற்பட்ட மாலைப்பொழுது. "பகலும் இரவும் சந்திக்கின்ற, அந்த மாலைப் பொழுதில் ஆனந்தத் தாண்டவமாடுபவர் ஈசன். சிவபெருமான் ஆலகால விஷத்தை அருந்திய நேரந்தான் பிரதோஷ புண்ணிய காலமாகும்.

வடவரை என்கிற மந்திர மலையை மத்தாக்கி, வாசுகியை நாண் ஆக்கி, பாற்கடலைத் தேவர்களும், அசுரர்களுமாகக் கடைந்தார்கள். அமரத்துவம் தரும் அமிர்தம் கிடைக்க பாற்கடலைக் கடைந்ததனால் உண்டான விஷமும், வாசுகி பாம்பு கக்கிய விஷமும் கலந்து ஆலகால விஷமாக மாறி யது. தேவர்கள் அஞ்சி, நடுங்கி கயிலை யங்கிரியை அடைந்து நந்திதேவரிடம் முறையிட்டார்கள். நந்திதேவர் சிவபெருமானின் அனுமதி பெற்று அவர்களை அவர் முன் அழைத்துச் சென்றார். தேவர்கள் தங்களுக்கு நேரவிருக்கும் ஆபத்தைக் கூறி அழுது தொழுது நின்றனர். உலகில் ஜீவராசிகளைக் காக்கும் பொருட்டு சிவபெருமான் ஆலகால விஷத்தை எடுத்துப் புன்சிரிப்புடன் பருகினார். விஷம் கண்டத்திற்கு வந்ததும் சிவபெருமான் சற்றே நிலை தடுமாறினார்.

அனைவரும் கவலையில் துடித்தனர். பார்வதி அன்னை தனது திருக்கரத்தால் தன் கணவரின் கண்டத்தை நீவி மெல்ல அழுத்த விஷம் உள்ளே செல்லாமல் கண்டத்திலேயே தங்கிவிட்டது. லோகமாதாவின் திருக்கரம்பட்டு நஞ்சும் அமுதாகி லோகநாதனின் கண்டத் தில் கருமணிபோல் தங்கி விட்டது. விஷத் தைக் கண்டத்தில் நிறுத்திக் கொண்டதால்

ஒரு நகரத்தின் சிறந்த பாதுகாப்புச் சுவர் என்பது சமாதானமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரன் திருநீலகண்டர் என்று பெயர் பெற்றார்.

மேற்கொண்டு பாற்கடலைக் கடைந்ததில் கௌஸ்துபம், உச்சைசிரஸ்வம், காமதேனு, ஐராவதம், லட்சுமி என்று ஒவ்வொன்றாக வந்து இறுதியில் அமிர்த கலசத்தை ஏந்தியபடி தன்வந்தரி பகவான் வெளிக்கிளம்பினார். அமிர்த கலசத்தை யார் பங்காக எடுத்துக் கொள்வது என்று தேவர்களுக்கும், அசுரர்களுக்குமிடையே போட்டியும், சண்டையும் மூண்டது. மஹாவிஷ்ணு மோஹினி வடிவம் கொண்டு தன் அழகாலும், நடனத்தாலும் அசுரர்களின் கவனத்தைத் திசை திருப்பி அவர்களை மதிமயங்கச் செய்து அமிர்தத்தைத் தேவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார் கருணாமூர்த்தியான சிவபெருமான்.

பகலும் இரவும் சந்திக்கும் ரம்மியமான பிரதோஷ புண்ணிய காலத்தில் ரிஷப தேவரின் இரு கொம்புகளுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டுத் திருநடனம் புரிந்தார். சரஸ்வதி வீணைமீட்ட, இந்திரன் புல்லாங்குழல் இசைக்க, பிரம்மதேவர் தாளமிட, இலட்சுமிதேவி இனிமையான குரலில் பாட, திருமால் மிருதங்கத்தில் தாளமிசைக்க சிவபெருமான் ஆனந்தத் தாண்டவமாடினார்.

இப்படி ஆலகால விஷத்தை அருந்தி உயிர்களைக் காத்து ஆனந்தத் தாண்டவமாடியது கார்த்திகை சனிக்கிழமை பிரதோஷ சமயத்தில் என்று கூறப்படுகின்றது. அது முதல் திரயோதசி திதியன்று மாலை பிரதோஷ நேரம் சகல பாவங்களையும் போக்கும் நேரமாகியது. பரமேஸ்வரனைத் தரிசிக்க எல்லாத் தெய்வங்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும் பிரதோஷ காலத்தில் வந்து சேருகின்றார்கள்.

அதனால் பிரதோஷ காலத்தில் சிவனைத் தரிசித்தால் எல்லா தேவதைகளையும் தரிசித்த பலன் உண்டு.

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 49
### "பாத அருள் தருவான்"

காத லொடுவதி காலை தொழவரு
வாரின் மகளுறு -துயர்கூற
காய மதுவடை நோயு மகலருள்
வாரி யருளிய -வடிவேலா!
நாத வடிவுடை நாத னொடுவரு
ஞான னெனவுரை -பெருங்கோவே
நாதி யிலனுன பாத நிழலிடை
நாளுங் கிடவென -அருளாயோ?
வேத னுறைகயி லாய மலைவடி
வாக அமையுரு -அதிலேறி
வீசு மருளினை நேச ரடைவுற
வீதி வலம்வரு -முருகோனே!
பாதி மலமவை மோதி பொடிபட
பாத அருளினைத் -தாராயோ?
பாச மொடுகதிர் காம முறைபத
பூசை மகிழுசந் -நிதியானே!

- இராசையா குகதாசன் -

அதிர்ஷ்டத்தை வார்க்கும் அச்சு அவனவன் கையில்த்தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இந்திய தல யாத்திரை

(தொடர்ச்சி...

– செ. மோகனதாஸ் சுவாமிகள் –

**காலம்: 17~06~2013 திங்கட்கிழமை**

திரிவேணி சங்கம வழிபாட்டை முடித்துக்கொண்டு புறப்பட்ட நாம் அனைவரும் மறுநாள் அதிகாலை திங்கட்கிழமை கயாவை அடைந்து எமக்கென ஒழுங்கு செய்யப்பட்ட சத்திரத்தில் இரவுப் பிரயாணத்தின்மூலம் ஏற்பட்ட சோர்வைப் போக்கும் வண்ணம் காலை எட்டுமணிவரை தங்கி இருந்தோம். அன்றைய தினத்தில் எமது குழுவினரில் பலர் பிதிர்க்கடன் செய்யும் செயற்பாட்டின் நிமித்தம் நாம் அனைவரும் காலை உணவைத் தவிர்த்து அக்காரியத்தில் ஈடுபட்டோம்.




காசிக்கு கங்கைபோன்று இங்கே பல்குனி நதி முக்கியத்துவம் பெறுகிறது. சீதையின் சாபத்தின் பிரகாரம் எவ்வளவுதான் நீர் வந்தாலும், மறுநாள் அவ்வளவு நீரும் ஓடி வற்றிவிடும் தன்மை அந்நதிக்கு உண்டு. அத்தோடு பிதிர்க்கடன் செய்வதற்கு உகந்த இடம் கயா. இக்கடனைச் செய்யும் பொருட்டு இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் இங்கே வந்து பிதிர்க்கடன்களை குடும்பம் குடும்பமாகவும், குழுக்களாகவும் மேற்கொள்வர். இக்காரியங்களை நிறைவேற்றுவதற்கு தமிழ் தெரிந்த பிராமணர்களை எமது குழுவினருக்கு ஸ்ரீரெங்கநாதன் ஏற்பாடு செய்திருந்தார். அதன் பிரகாரம் அவர்கள் எம்மோடு வந்து பல்குனி ஆற்றின் கரையோரம் அமைக்கப்பட்ட பிரமாண்டமான மண்டபத்தில் இப்பிதிர்க் காரியங்களை செயலாற்றி அக் கடமைகளை நிறைவு செய்தார்கள்.

**பணம் சேமிப்பது ஊசியால் குழி தோண்டுவது மாதிரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து பிதிர்க்காரியம் நிறைவேற்றிய குழுவினர் அஷ்யவடம் என்று சொல்லப்படுகின்ற ஆலமரத்து அடியில் உள்ள விக்கிரகங்களை வணங்கினர். பிதிர்கடன்களை நிறைவு செய்ய உதவிய பிராமணர் மீண்டும் எம்மிடம் வந்து, எம்மைப் பீடித்திருக்கும் காமம், குரோதம், மோகம் ஆகிய மூன்று பற்றுக்களையும் விட்டுவிட வேண்டும் எனவும், அதற்கு அடையாளமாக நமக்குப் பிடித்த ஒரு பூ, ஒரு காய், ஒரு பழம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இங்கே துறந்துவிடவேண்டும் என்றுங் கூறினார். அதன்பின் நமது வாழ்க்கையில் அவற்றை நாம் தொடவே கூடாது. அதன் பிரகாரம் பிதிர்க்கடன் செய்த எம் குழுவினரும் தமக்கு விருப்பமான ஒன்றைக் கூறி அக்கடமைகளை நிறைவு செய்தனர். இக்காரியங்களை நாம் நிறைவாகச் செய்வதற்கு பிதிர்க்கடன் நிகழ்வுகளை நிறைவேற்றிய பிராமணரும் எம்மோடு வந்து அனைத்துச் செயற்பாடுகளையும் முன் நின்று நடத்தி வைத்தார்.

இக்காரியங்கள் அனைத்தையும் முடித்து நாம் இருந்த சத்திரத்தை அடைந்தோம். அங்கே எமது முகவரால் தலைவாழையிலையில் அறுசுவை உணவு, வடை, பாயாசத்துடன் வழங்கப்பட்டது. வாழை இலை அங்கே எடுப்பது குதிரைக்கொம்பு. ஆனாலும் பிதிர்க்கடன்கள் அங்கே செய்வதால் அப்பகுதியில் மட்டும் வாழையிலை பிற மாநிலத்திலிருந்து கொண்டு வரப்பட்டு விற்பனை செய்கின்றார்கள். வட இந்திய யாத்திரையில் வாழையிலைச் சாப்பாடு என்றால் அது கயாவில் இடம்பெறும் இந்நிகழ்வில் கலந்துகொண்டோருக்கு மட்டும்தான். நாம் எமது இடங்களில் விரத ஒழுங்கினை பூர்த்தி செய்வது போன்று திரு ஸ்ரீரெங்கநாதன் சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார். இவ்விடயங்களில் இவரது செயற்பாட்டின்மூலம் எமது குழுவினர் அனைவரும் திருப்தி அடைந்தனர்.

மாலை 4மணி அளவில் புத்தகயா நோக்கி எமது பிரயாணம் ஆரம்பமாயிற்று. புத்தபகவான் ஆறு ஆண்டுகள் தவம் செய்து ஞானோதயம் பெற்ற அரசமரத்தடியினைச் சுற்றி மேடை அமைத்து அவ்விடத்தைப் புனிதமாகப் பேணி வருகின்றார்கள். அசோகச் சக்கரவர்த்தி புத்தரை வழிபட்டு அவருக்கு ஆலயம் அமைத்த இடம் "மகாபோதி கோயில்" என அழைக்கப்படுகின்றது. 170 அடி உயரம் கொண்ட இவ் ஆலயம் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டு அதனுள் பகவான் அமர்ந்திருக்கும் காட்சி பார்ப்போரைப் பரவசப்படுத்தும் தன்மை வாய்ந்தது. இதன் அங்கமாக இலங்கை உட்பட பல நாட்டவர்கள் தத்தம் நாட்டுச் சிற்பக்கலையுடன் கூடிய புத்த ஆலயங்களை அமைத்து அதனைப் பராமரித்து வருகின்றார்கள். பல புத்த ஆலயங்கள் இருப்பதால் புத்த கயா பிரசித்தம் பெற்று விளங்குகிறது. எமது



**வாழ்க்கையின் எதிர்ப்புத் தன்மையை நீக்குவது சகிப்புத்தன்மை என்ற எண்ணெய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவினரும் எல்லாவற்றையும் பார்வையிட்டு இரவு 7மணி அளவில் சத்திரத்தை அடைந்து இரவு உணவை முடித்து எமது பேருந்தில் இரவு 9 மணி அளவில் காசி நோக்கி புறப்பட்டோம். அடுத்த இலக்கு "காசி" என்று ஸ்ரீரெங்கநாதன் கூறியதும் எமது குழுவினர் அடைந்த உற்சாகத்திற்கு அளவேயில்லை. என்னையும் ஸ்ரீரெங்கநாதனையும் தவிர மற்றவர்கள் எல்லோரும் காசி யாத்திரைக்குப் புதியவர்கள். முதன்முதலாக காசிக்குப் போகின்றோம் என்ற சிந்தனை வேறு. இவ்வளவு ஆரவாரத்துக்கு மத்தியில் அதிகாலை 4மணி அளவில் காசியை அடைந்தோம்.

**காலம்: 18-06-2013 செவ்வாய்க்கிழமை**
**இடம்: காசி (வாரணாசி)**

காலை காசியை அடைந்ததும் எமக்கென ஒழுங்கமைக்கப்பட்ட ஜோதி லொட்ஜினை அடைந்தோம். அவரவர்க்கென ஒதுக்கப்பட்ட அறைகளில் தத்தம் பொருட்களை வைத்துவிட்டு இரவு முழுவதும் பேருந்தில் பிரயாணம் செய்த சோர்வு நீங்கும் வண்ணம் காலை எட்டுமணிவரை ஓய்வெடுத்தோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி நகரத்தின் வடக்கில் "வருணா" நதியும் தெற்கில் "அசி" நதியும் கங்கையோடு சேர்வதால் காசி, "வாரணாசி" என்றும் அழைக்கப்படுகிறது. ஆதி காலத்திலிருந்தே காசி இந்துக்களின் புகழ்பெற்ற தலமாகும். காசியில் இறந்தால் மோட்சம் கிடைக்கும் என்ற வாக்கிற்கமைய தமது இறுதிக்காலத்தை காசியில் இருந்து கழிக்க வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். காசியின் கங்கைக்கரையில் 64 ஸ்நான படித்துறைகளும் அவற்றினையொட்டி உயர்ந்த மாளிகைகளும் இருக்கின்றன. நடுவே ஆலயங்களும் உண்டு. கங்கையில் நீராடிப் பிதிர்க்காரியங்களைச் செய்யவரும் தென்னிந்தியர்களுக்கு உதவுமுகமாக ஓரளவு தமிழ் பேசத் தெரிந்த புரோகிதர்களும் இருக்கிறார்கள். பிதிர்க் கடன்களை நிறைவேற்றி தானம் வழங்குவதைப்போல, தம்பதியரும் கங்கையில் நீராடித் தம் நல்வாழ்வுக்காக தானமும் வழங்குகிறார்கள். வரும் யாத்திரிகர்கள் தங்குவதற்கு சங்கரமடம், குமரகுருபரர் மடம், திருப்பனந்தாள் மடம் போன்ற சத்திரங்களும் பல விடுதிகளும் இருக்கின்றன.



ஹரித்துவாரில் இடம்பெறும் கங்கை பூசை போன்று இங்கேயும் தினசரி 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் கங்கா பூசை நடைபெறுகின்றது. காசிமகாராஜாவின் சந்ததியினர் இப்பூசையில் தினமும் கலந்து கொள்வர். தாரக மந்திரம்போல் ஐந்து விடயங்களை அனைவரும் கூறிக்கொள்கின்றனர். காகம் கரையாது, கருடன் பறக்காது, மாடு முட்டாது, பூ மணக்காது, சவம் மணக்காது. இது முற்றும் உண்மை. நாங்களும் இவ்விடயங்களை நேரில் கண்டோம். பல காகங்கள் பறந்து திரிந்தாலும் கரையவில்லை. அதேபோல் அங்கே காணப்படும் சிறிய சந்துக்களில் எம்மோடு நடைபயிலும் பெரிய மாடுகள்கூட ஒருவருக்கும் இடைஞ்சல் செய்யாவண்ணம் திரிவதைக் காணக்கூடியதாக இருந்தது. நாம் அனைவரும், கங்கையின் மறு கரையிலுள்ள திடலான பகுதிக்கு படகின்மூலம் சென்று உடலசதி தீரும் வண்ணம் கங்கையில் நீராடினோம்.

அதனைத் தொடர்ந்து காசி விஸ்வநாதரைத் தொழும் வண்ணம் வழியில் காணப்பட்ட அர்ச்சனைப் பொருட்கள் விற்கும் பகுதியில் நாம் கையில் கொண்டு சென்ற கங்கை நீருடன் பாலும், பூவும் வாங்கி ஒருவர்பின் ஒருவராக விஸ்வநாதர் ஆலயம் அடைந்தோம். ஆலயச் சுற்றாடல் எல்லாப் பகுதியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு காவல்துறை அதிகாரிகள் வழிபாட்டிற்கு வருவோரை நெறிப்படுத்தி தத்தம் பணிகளை ஆற்றுவதையும் காணக்கூடியதாக இருந்தது. அவ்வகையில் வழிபாட்டுக்கு வருபவர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராகச் சென்று வணங்கக் கூடியதாக இருந்தது.

(தொடரும்...

துரதிர்ஷ்டங்கள் எப்போதும் தனிமையில் வருவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசுரம் பாடலுற்றார் பரசம யங்கள் பாற

– திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள் –

"பாசுரம் பாடலுற்றார் பரசம யங்கள் பாற" என்பது அருள்மொழித் தேவருடைய திருவாக்கு. அவ்வாக்குத் திருத்தொண்டர் புராணத்தில் அமையும் வாக்கு. மாக்கதையில் அமைந்த 2716ஆம் பாடலில் நாலாம் அடியாக நடக்கும். அதுவே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்தில் 818ஆம் திருப்பாடலாகத் திகழ்வது.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாண்டி நாட்டில் திருத்தல யாத்திரையின்போது நிகழ்ந்த சம்பவம். பாண்டி நாட்டில் சைவ சமயத்தை மீண்டும் புத்துயிர்பெறச் செய்வதற்கு முத்தமிழ் விரகர் சமணர்களோடு சமய வாதம் செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

சுரவாதம், அனல்வாதம், புனல்வாதம் என்னும் மூன்று வாதங்களில் புனல்வாதம் நிகழ்த்துவதற்குப் பாடியது- "பரசம யங்கள் பாற பாசுரம் பாடலுற்றார் என்பது.

இங்கு பரசமயங்கள் பாற என்பதனால் பரசமயங்களை அழித்தல் என்பது பொருள் அல்ல. பர சமயங்களின் தீமைகளும், மயக்கமும் ஒழிந்து மறுக்கப்படுவதேயாகும். சமயங்கள் அழித்தல் அல்ல என்பது சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் சிந்தனைத் தெளிவேயாகும்.

ஞானத்தின் திருவுருவர் சமண சமயத்தவர்களோடு செய்த வாதத்தில் இரண்டாவதாகிய அனல் வாதத்திற்கே திருமுறை ஏட்டு நாண் அவிழ்த்தார். "தாமே நீற்று வண்கையான் மறித்தலும்" என்பது பெரிய புராணம் (2680)

ஞானவாரமுது உண்டவரே காப்பு நாண் அவிழ்த்த செய்தியைப் பெரிய புராணம் பின்வருமாறு பேசும்.

"செங்க ளேற்றவ ரேபொரு ளென்றுதாந் தெரித்த
பொங்கி சைத்திருப் பதிகநன் முறையினைப் போற்றி
யெங்க ணாதனே பரம்பொரு ளெனத்தொழு தெடுத்தே
யங்கை யான்முடி மிசைக்கொண்டு காப்புநா ணவிழ்த்தார்"
(2679)

(சிவந்த கண்களைப் பொருந்திய இடபத்தையுடைய சிவபெருமானே உண்மைப் பொருளாவார் என்று உலகறிய உபதேசித்தருளிய பொங்கும் இசையுடன் கூடிய திருப்பதிகங்களை எழுதிய நல்ல திருமுறைச் சுவடிகளைத் துதித்து எங்கள் நாதராகிய சிவபெருமானே முழுமுதற் கடவுளாய் எல்லார்க்கு மேலாகிய பரம்பொருளாவார் என்று தொழுது அங்கையால் எடுத்துத் தமது திருமுடிமேற் கொண்ட பின் அதனது காப்பாகிய கயிற்றினை அவிழ்த்தார்.)

மூன்றாவதாக நிகழ்ந்த புனல் வாதத்தில் ஈடுபட்ட திருமுறை ஏட்டுச் சுவடிகளின் காப்பினை அவிழ்த்து நாண் கயிற்றை இடவும் இல்லை. நூல் இட்டுப் பார்க்கவும் இல்லை.

முன்னதாகச் சமணர்கள் ஆற்றில் இட்ட ஏட்டினை வைகையாறு வாரிக்கொண்டு சென்றது.

"நூறுவிற் கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணார்! சமணர். (2714)

"மாறுகொண் டீரும் இட்டால் வந்தது காணு" மென்றார். (2715)

"ஆசிலா நெறியிற் சேர்ந்த வரசனு மவரை விட்டுத், தேசுடைப் பிள்ளை யார்தந் திருக்குறிப் பதனை நோக்கப்
பாசுரம் பாட லுற்றார் பரசம யங்கள் பாற!
(2716)

படிக்க நேரம் ஒதுக்குங்கள். அது அறிவின் ஊற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு சமணரை நட்டாற்றில் விட்டுச் சென்றது. சமணர் அரசனைப் பார்த்தார். அரசன் பிள்ளையாரைப் பார்த்தான். அரசன் திருக்குறிப்பு அறிந்து பிள்ளையார் பாசுரம் பாடுவார்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்மர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே (3ஆம் திருமுறை)

எமது பெருமானாகிய சிவனே முழுமுதற் பொருள் ஆவான் என்று எழுதும் ஏட்டில் பெருமானது அருளாலே "வேந்தனும் ஓங்குக" என்று அரசனை ஓங்கும்படி பாடியருள, இலக்குமியை மார்பில் உடைய அனபாயன் என்னும் அரசனுடைய செங்கோலினைப் போலப் பாண்டியனுடைய கூனும் நிமிர்ந்தது. கூன்பாண்டியன் நெடுமாறன் ஆயினான்.

## மனித வாழ்க்கையில் மனதின் ஆதிக்கம்

"உடம்பையும் அறிவையும் மனமே ஆக்ரமித்துக் கொள்வதால் மனத்தின் ஆதிக்கத்திலேயே மனிதன் போகிறான். இது என்ன மனது? காலையில் துடிக்கிறது. மதியத்தில் சிரிக்கிறது. மாலையில் ஏங்குகிறது. இரவில் அழுகிறது. ஒரே சீரான உணர்ச்சிகள் இந்த மனதுக்கு தோன்றுவதில்லை. -கவிஞர் கண்ணதாசன்.

நல்ல எண்ணங்களை மனதில் நிரப்புவதன்மூலம் தீய எண்ணங்களை விரட்டவேண்டும் என்று உபமானத்துடன் சொல்லுகிறார். ஸ்ரீ ராமகிருஸ்ணர் "காலில் முள் ஒன்று தைத்தால் மற்றொரு முள்ளைக் கொண்டு வரவேண்டும். காலிலிருந்து முள்ளை எடுத்த பிறகு முட்களை எறிந்து விடுகிறோம். அதுபோல் அஞ்ஞான முள்ளை எடுப்பதற்கு ஞானமுள்ளை தேட வேண்டியிருக்கிறது. -அமுதமொழிகள் 3.424)

இன்றைய சூழ்நிலையில், நவீன வாழ்க்கை முறைகளினால் மனிதன் பொருளாதார நெருக்கடியைத் தானாகவே தோற்றுவித்துக் கொண்டு மன அமைதியில்லாமல் வாழ்கிறான். "உயிர்களிடத்து அன்பு வேண்டும். தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும். வயிரமுடைய நெஞ்சு வேணும். இது வாழும் முறையடி பாப்பா" -பாரதியார்

பணம் சம்பாதிப்பதிலும் சரி, கடவுளை வழிபடுவதிலும் சரி, மற்ற எதைச் செய்வதிலும் சரி மன ஒருமைப்பாடு ஆற்றல் வாய்ந்ததாக இருக்கின்ற அளவுக்கு அந்த காரியத்தை நன்றாகச் செய்ய முடியும். இந்த ஒரு முயற்சியால் மட்டுமே இயற்கையின் கதவுகளைத் திறக்கமுடியும். அதன் ஒளியை வெளியே கொண்டு வரமுடியும். இந்த ஒருமைப்பாட்டுச் சக்தியே அறிவுப் பொக்கிஷத்திற்கான ஒரே திறவுகோல்"

-சுவாமி விவேகானந்தர்.

மனிதனின் மனம் அலைபாயும் தன்மையுடையது. அதை நிலைநிறுத்துவது கடினம். சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், பக்தி முதலியவைகளால் மனதை நெறிப்படுத்த முடியும். ஆண்டவனே, என் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கும் சிறுமையை அகற்றுவாய். துன்பம் வரும்போது மனம் கெடாதவனாகவும், இன்பம் வரும்போது ஆவல் அற்றவனாகவும் இருக்க வரம் அருள்வாய். எந்த உயிரிடமும் என்றும் வெறுப்பைத் தவிர்த்து அன்பு கொள்ள அருள்வாய். அநியாயத்தையும், பலாத்காரத்தையும் எதிர்க்கும் ஆற்றல் தருவாய். மனம் விரிந்து பெருந்தன்மையுடன் செயற்படும் திறனைத் தந்தருள்வாய்" -ரவிந்திரநாத்தாகூர்.

*தொகுப்பு:கு. கோபிராஜ்*

**சிறிய துன்பங்கள் பேசுகின்றன, பெரிய துன்பங்கள் மௌனமாக இருக்கின்றன.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 12. அழகன் ரமணன்

ரமணன் என்ற சொல்லுக்கு அழகன் என்று பொருள். குரு ரமணன் அழகன் மட்டுமல்ல, நம் எல்லார் இதயங்களிலும் களிநடம் புரிபவன். அமிர்தானந்தா அன்று கேட்ட கேள்விக்கு பகவான் சற்றும் சந்தேகத்துக்கிடமின்றி, அழுத்தமாக, ஆணித்தரமாக பதிலளித்திருக்கிறது, தான் யாரென்பதை: "ஹரியாதி# சகல ஜீவராசிகளின் இதயத் தாமரையாகிய குகையில், அறிவு ரூபமாக சதா ரமித்துக் கொண்டிருக்கும் பரமாத்மனே அருணாசல ரமணன்." அமிர்தானந்தருக்கு முதல் இரண்டு வரிகளில் பதிலளித்த பகவான், பின் இரண்டு வரிகளில் நமக்கும் ஒரு செய்தியை சொல்கிறது. அந்த ரமண பரமாத்மனை அதன் இதயக்குகையில் சென்றடையும் வழியை அழகாக அந்த பிற்பகுதியில் தந்திருக்கிறது. அறிவுமூலம் உளத்தை உருக்கி அதனைப் போய் சேரலாம். அப்போதே நிஜ அறிவாகிய விழி - ஒளி - பிறந்து உண்மை அறிவு சுடர்விடும். பரமாத்மனே சச்சிதானந்த அருணாசல ரமணன். அவன் காண்பித்ததே அவனை அடையும் மார்க்கம்.



பகவானின் உருவ அழகால் கவரப்பட்ட "பால் பிரண்டன்:" "இந்த மனிதருள் இருக்கும் ஏதோ ஒன்று, காந்தம் இரும்பை கவர்ந்திழுத்து பிடித்துக்கொள்வது போல், என் கவனத்தைப் பிடித்து வைத்துக் கொள்கிறது என்று எழுதினார். எனது பார்வையை அவரை விட்டு அகற்ற இயலவில்லை". மேலும் பகவானின் சந்நிதி, அருகாமை ஒரே சமயத்தில் அமைதியாகவும் உற்சாகமாகவும் இருந்த அனுபவத்தை பால்பிரண்டனே சொல்கிறார்: "இந்த அபூர்வமான ஈடுபாடு மேன்மேலும் வலுப்படவே அவர் என்னை ஏறெடுத்துக்கூடப் பாராமல் உதாசீனமாகவிருந்தது குறித்து எனக்கேற்பட்ட ஆரம்பத் திகைப்பும், குழப்பமும் மெல்ல மெல்ல மறைந்தன. இந்த அதிசயமான காட்சி ஒரு மணிநேரம் நீடித்து இரண்டாவது மணிநேரம் கடந்து கொண்டிருக்கும் பொழுதுதான் நான் எனது மனதினுள் ஒரு அமைதியான எதிர்ப்பில்லாத மாறுதல் மௌனமாக நிகழ்ந்து கொண்டிருப்பதை உணரத் துவங்குகிறேன். ரயிலில் வரும்பொழுது மிகுந்த சிந்தனையுடனும் நுட்பமாகவும் திருத்தமாகவும் தயாரித்த கேள்விகள், ஒன்றன்பின் ஒன்றாக நழுவி மறைந்தன. இப்பொழுது எனக்கு அக்கேள்விகளைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் ஒன்றுதான். இதுவரை என்னைத் தொந்தரவு செய்த பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்தாலும்

# அரியாதி யிதரசீவரது அகவாரிச குகையில்
அறிவாய்ரமி பரமாத்துமன் அருணாசல ரமணன்
பரிவால்உளம் உருகாநல பரனார்ந்திடு குகையார்ந்து
அறிவாம்விழி திறவாநிசம் அறிவாய்அது வெளியாம்.

மூடநம்பிக்கை பலவீனமான மனங்களின் மதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காவிட்டாலும் எனக்குப் பரவாயில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றுதான்; அமைதி என்னருகே ஆறாகப் பெருகி ஓடிக் கொண்டிருக்கிறது; மகத்தான சாந்தி என் இதயத்தினுள் ஆழப்பாய்ந்து பரவுகிறது; சிந்தனைகளால் சித்திரைவதைப்பட்ட எனது மூளை ஒரு வழியாகச் சற்று ஓய்வு பெறத் துவங்குகிறது.

இவ்வளவு காலமாக கிளிப்பிள்ளை பேசுகிறதுபோல் நான் திரும்பத் திரும்ப என்னிடமே கேட்டுக்கொண்டிருந்த அந்தக் கேள்விகளை நினைத்தால் சிரிப்பு வருகிறது. அவற்றைக் கேட்காமலேயே இவரிடமிருந்து நொடிப்பொழுதில் விடைகள் கிடைத்து விடு கின்றனவே! நான் வாழ்ந்த வாழ்வும், கண்ட காட்சிகளும் இங்கு எவ்வளவு சிறியனவாகத் தோன்றுகின்றன! இங்கே எனக்குத் திடீ ரென்று ஒரு விஷயம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. மனிதனின் புத்தி தனக்குத்தானே பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டு, இல்லாத அப்பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பதில் பேரல்லற்படுகிறது. இதுவரை புத்தியே பிரதானமெனக் கருதிவந்த என் போல் ஒருவன் மனதில் இத்தகைய புதிய கருத்து புகுவது விந்தையே.

இவ்வாறு நிதானமாக, நிலையாக வலுப்பட்டு வந்த .ஆழ்ந்த மன அமைதி என்னை ஆட்கொண்டு விட்டது. இரண்டு மணி நேரம் இந்தச் சரணாகதியில் கழிந்தது. கால விரயமாகிறதே, காலம் கடந்து செல்கிறதே என்று மனதில் எரிச்சல் உண்டாகவில்லை. ஏனெனில் மனது, தனக்குத்தானே சிருஷ் டித்துக் கொண்ட பிரச்சினைச் சங்கிலிகள் உடைத்து எறியப்படுவதை உணர்கிறேன். பிறகு மெல்ல மெல்ல, எனது நனவு மண் டலத்தில் ஒரு புதிய கேள்வி படர்கிறது.

மஹர்ஷி எனப்படும் இவர் ஆன்ம அமைதியைப் பரப்புவது ஒரு மலர் தனது இதழ்களிலிருந்து நறுமணத்தை வெளியே பரப்புவதுபோல் அவ்வளவு இயல்பானதா? (மஹரிஷி அருண்மொழி)

ஆர்தர் ஆஸ்போர்னும் இதைப் போலவே பகவானை வருணிக்கிறார். பக வானது முகம் சதா மாறிக்கொண்டே இருந் தாலும், எப்பொழுதும் ஒரே மாதிரியுமிருக்கும் (மாறாது தானாகவே இருக்கும்.) பகவான் சிரித்துப் பேசிக்கொண்டே இருக்கும். உடனே கனிவுடன் ஒரு சிறு குழந்தையிடம் திரும்பும்; அல்லது ஜன்னலிலிருந்து சோபாவுக்குத் தாவிய அணிலுக்கு கனிவுடன் பருப்பு தரும்; அல்லது அதன் ஒளிவீசும் அகன்று மலர்ந்த கண்கள் அடியார்மீது அன்பொளி பொழியும்.

போலீஸ் அதிகாரியானாலும், ஞானத் தில் நாட்டம் வைத்த பிராங்க் ஹம்ப்ரீஸ் சொல் கிறார் "கம்பீர பாவத்திலும், மென்மையான தன்மையிலும், தன்னடக்கத்திலும் அமைதி, திடமான கொள்கையின் உறுதி முதலிய எல்லாவற்றிலும் அவர் வருணனைக்கு எட்டாத வர்".

மேஜர் A.W. சாட்விக் தெரிவிக்கும் கருத்து- "முதன்முறையாக நான் பகவான் சந்நிதிக்கு வந்தபோது என் மனநிலை எவ் வாறு இருந்ததென்பதை விவரிக்க முயல்வது கடினம். அவரது சாந்நித்தியத்தின் ஆழ்ந்த சாந்தியையும் அருளையும் நான் உணர்ந் தேன்.

Dr G.H. மீஸ் மிகப்பெரிய வித் வானும் பக்தரும் ஆவார். அவர் சொல்வது: ஒரு மனிதன் உலகில் மிகப்பெரிய செய லைச் செய்துவிட்டு, பகவான் முன் அமர்ந்தா னானால், இந்தப் பரம ஞானியின் சுவானுபூதி யின் எதிரே தன் செயல் ஒன்றுமேயில்லை என்பதை உணர்வான்.

தீர்க்கதரிசியும், தவசிரேஷ்டருமான காவிய கண்ட கணபதி முனி களி மீகூரப் பாடுகிறார். "அவன் செயல் அதிமென்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமோ கருணை மிகுந்து குளிர்ந்த நிலவு, அவன் முகமோ முழுதும் மலர்ந்த தாமரை; பகல் நிலவு போன்றது. அவனுள்ளம், எண்ணங்களற்ற வெளி. இவன் ஆகாயத்தில் சூரியன்போல் இதயத்தில் பிரகாசிக்கிறான். (ரமண கீதை 18, அத்: 18)

கவியும் ஞானியுமான முருகனார்,


"மௌன குருநாதனின் அருளொளி வீசும்,
ஒளி வட்டத்தில் நுழைய வல்லோர்
சாஸ்வதானந்தக் கனி உண்டு களிப்பர்
அக்கனி மனதுக் கெட்டா கனி."

என்று பரவசமாகப் பாடுகிறார்.

"சத்தியத்தில் ஊன்றி நிலைத்து நிற்பதுதான் ஒரு மதத்தின் சாராம்சம்; பிரசாரம் செய்வது அல்ல. பரம்பொருளை மையமாக்கிக் கொண்டு வாழும் வாழ்க்கையே ஓருருக்கொண்டு வந்தது போன்றவர்கள் ஞானிகள். தெய்வீக வாழ்வை, மனித வாழ்வெனும் கண்ணாடியில் பிரதிபலிக்கும் மாசற்ற பிம்பங்கள். இவர்களால்த்தான் பாரதத்தின் பாரம்பரியம் உயிருட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது" என்று பகவானைப் பற்றி எழுதுகிறார் Dr S. ராதாகிருஷ்ணன்.

ஆம். உண்மை சத்திய வஸ்துவே மனித உருத்தாங்கி ரமண நாமத்துடன் நம்மிடையே வாழ்ந்தது. நாம் செய்த பூஜா பலத்தால் ராமசுவாமிப் பிள்ளை, பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி ஐயர், பலராம ரெட்டியார், குஞ்சுஸ்வாமி, கனகம்மா, நரசிம்மய்யர், நடேசய்யர் போன்று, சத்தியாவதாரத்தை நேரில் கண்டவர்கள், அதிருஷ்டவசமாக இன்னும் நம்மிடையே உள்ளனர். ரமணனை நேரில் கண்டவர்கள் மேலும் பலர் உள்ளனர்.

(தொடரும்...



துன்பம் உன்னைத் துன்புறுத்தாதவரை துன்பத்தை நீ துன்புறுத்தாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தின் பின்...

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

மரணம் என்றால் என்ன? உடம்பை விட்டு உயிர் பிரியும் நிலை. இந்நிகழ்வே சாவு, மரணம், காலமாதல், தேகவியோகம் என்று பேசப்படுகிறது.

உடம்புக்கு யாக்கை என்ற பெயர் உண்டு. நரம்பு, எலும்பு, தசை, இரத்தம், தோல் இவற்றால் கட்டப்பட்ட வீடு. இதை "புன்புலால் யாக்கை" என மகான்கள் கூறியுள்ளனர். இந்த வீட்டிற்றான் உயிர் குடியிருக்கிறது. உயிருக்கு ஆன்மா என்றும் பெயர். உடம்பை இயக்குவது உயிர். உடம்பை விட்டு உயிர் வெளியேறினால் அது வேறு ஒரு உடலை எடுக்கும். ஆனால் உடம்பு இயங்காது. இப்போ உடம்புக்குப் பெயர் பிணம், சவம், பிரேதம்.

செத்த பிணத்தை யாரும் வீட்டில் வைக்க மாட்டார்கள். ஒரு நாளிலேயே அடக்கம், தகனம் செய்துவிடுவர். இல்லையேல் சுகாதாரத்துக்குக் கேடு என விஞ்ஞானம் பேச அப்படியல்ல வைத்திருக்கலாம் என அஞ்ஞானம் சொல்கிறது. விஞ்ஞானம் அஞ்ஞானம் இரண்டுக்குமிடையே மெஞ்ஞானம் தலைகாட்டுகிறது.

மரணம் விதிக்கப்பட்ட ஒன்று. யாராலும் தடுக்க முடியாது. மரணத்தின் பின் அந்த உயிருக்கு என்ன நடக்கும் என்பதும் தெரியாது. அந்த ஆன்மாதான் அதை உணரும். பூமியில் ஒருவன் பிறந்தவுடன் அவனுக்குப் பெயர் ஸ்ரீதரன். அவன் ஒருநாள் இறக்கத்தான் வேண்டும். இறந்தவுடன் என்ன நடக்கும்? உறவினர், அயலவர், ஊரவர் வந்து கூடுவர். பெண்கள் ஒப்பாரி வைத்து துக்கத்தில் பங்கு கொள்வர். பறை ஒலிக்கும். ஸ்ரீதரன் என்ற பெயரை மாற்றி பிணம் என்ற பெயர் பெறும். ஈமச்சடங்குகள் முடியும். செத்தார் பிணத்தை சாவார் பாடையில் வைத்துப் பிணப்பறை முழங்க சூரையங்காட்டில் (சுடலை) கொண்டுபோய் குடமுடைத்து கொள்ளி வைப்பர்; சாம்பரை அள்ளி நீரில் கரைப்பர்; நீரில் மூழ்கியதுடன் நினைவை மறப்பர். ஆனால் உடலை நீத்த ஆன்மாவின் நிலை?

பஞ்சமா பாதகங்கள், ஊழல்கள், மோசடிகள் நிறைந்த இவ்வுலகைவிட்டு ஆன்மா விடுதலை அடையும். ஆன்மாவுக்கு அழிவு இல்லை. சூக்கும உடலெடுத்து உலகில் சஞ்சரிக்கும்.

உடம்பாகிய வீட்டில் குடியிருந்த போது பேராசையால் பல பாவங்களைச் செய்தேன், வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் வாழ்ந்தேன். இன்று நான் விடுதலை பெற்றாலும், நான் கட்டிக் காத்த வீடு, மனைவி, மக்கள், நிலபுலன்கள், தேடிய தேட்டம் யாவையும் விட்டுப் போகின்றேனே, மனைவி மக்களின் எதிர்கால வாழ்வுக்காக எதுவும் செய்யவில்லையே இவைகளை நிர்க்கதியாக விட்டுச் செல்கின்றேனே, செல்ல மனமில்லாமல் வீட்டைச் சுற்றிச் சுற்றி என்ன நடக்கிறதென அவதானிக்கும்.

பால், நெய், மீன், முட்டை, இறைச்சி சாப்பிட்டு உடம்பை வளர்த்தேனே; உடம்பு எரிகிறதே; வாழ்நாளில் எத்தனை பாவங்கள் செய்திருப்பேன் என எண்ணி அலறும். முப்பது நாட்களும் முடிய அந்தியேஷ்டிக் கிரியைகள் நடந்தேறும். இனிமேற்றான் ஆன்மாவுக்கு மறுபிறவி. பிறவிகள் ஏழு. "ஏழு பிறப்பிலும்

**முட்டாளும் அவன் பணமும் சீக்கிரமாகவே பிரிகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு ஆட்பட்டேன் இனிப் பிறவாமை வேண்டும்" என ஒரு அருளாளர் கூற மணி வாசகரோ அதை விரிவாக, "புல்லாகி பூடாகி புழுவாகி.... என்று தொடங்கி முனிவராய்த் தேவராய் என்று முடிக்கிறார். ஆன்மா செய்து கொண்ட பாவவினைகளுக்கமைய மறுபிறவி கிடைக்கும். கிடைத்தற்கரியது மானிடப்பிறவி. மானிடப்பிறவி கிடைக்கினும் கன்மவினைப் பயனால் கூன், குருடு, செவிடு, முடம் என அங்கவீனத்துடனும் பிறக்கலாம்.

கன்ம வினையை அநுபவிக்குமிடம் பூமி. மனிதனாகப் பிறந்து வினையை அனுப விக்கும்போது, மாடாகப் பிறக்கிறானோ மனித னாகப் பிறக்கிறானோ என்பது அவன் அறியா தது. ஐம்புலன்களையும் அடக்க முடியாமல் மேலும் பல பாவங்களைச் செய்வான். முன் னைய பாவங்களை இப்பிறவியில் அனுப வித்து எஞ்சியவையும் இப்பிறவி செய்த பலன்களும் சேர்ந்து மறுபிறவிக்காகும். வினைகளின் பயனாகக் கிடைப்பது நரகம், சொர்க்கம். நரகம் கீழ் உலகம். அது பாதா ளம். சுவர்க்கம் மேலுலகம். பாவம் செய்த வர்கள் பாதாளத்திற்கும் (நரகம்) புண்ணியம் செய்தவர்கள் சுவர்க்கத்துக்கும் உரியவர்கள்.

புண்ணியம் செய்த ஆன்மாக்கள் மறு பிறவியில் சகல சௌபாக்கியங்களும் பெற்று சந்தோஷமாக வாழ்வர். நல்ல மனைவி, மக் கள் பாசமுள்ள உறவினர், பணிவான வேலை யாட்கள், மாடமாளிகைகள், வாகனம் எனப் பல வசதிகள் பெற்று வாழ்வர். ஆனால் பாவம் செய்தவர்கட்கு நிச்சயம் நரக வாழ்வுதான்.

நரக உலகில் நடப்பது என்ன? எம கிங்கிரர்கள் ஈட்டியால் குத்துவர், கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் தூக்கி வீசுவர், கழுத்தெலும்பு முறிய பாரம் சுமந்தபடி சுடு மணலில் நடக்கவிடுவர்; கொடுக்கும் உணவை உண்ணவிடாமல் தட்டிக் கொட்டுவர்; தாகத் திற்கு நீர் தரார்; நிர்வாண நிலையில் பழுக்க காய்ச்சிய கோலால் மேனியெங்கும் சுடுவர்; மற்றையோர் மனம் புண்படும் வகையில் கொடிய வார்த்தைகள், பழி சொன்னவர்கட்கு நாக்கில் ஊசியால் குத்துவர்; மலம், இரத்தம், சேறு, சுரிக்குழிகளில் கட்டி இழுப்பர். இப்படிப் பல கொடுமைகளை அனுபவிக்குமாம்.

அவசர உலகில் மண், பெண், பொன், பதவி, புகழ்மீது ஆசைப்படுபவர்கள், பஞ்சமா பாதகங்கட்கு அஞ்சாதவர்கள், மனச்சாட்சி இல்லாதவர்கள், இளைஞர்கள் கூட இதை யார்கண்டார்கள்? அனுபவித்த ஆன்மா மீண்டு வந்து சொன்னதா? என்று கேட்கலாம்; சிந்திக் கலாம். கருடபுராணம் எனும் நூலில் இன்னும் விரிவாகக் காணலாம். பாவம் செய்பவர்களுக்கு திருந்துவதற்கான படிப்பினையே.

இறைவன் மனிதனைச் சிருஷ்டிக் கிறான். பிரமா விதியை தலையில் எழுது கிறார். மனிதன் பூமியில் வந்து பிறக்கிறான். இன்ப துன்பங்களை அனுபவிக்கும்போது பாவங்களையும் செய்கிறான். அதன் பலனை அனுபவிக்க பல பிறவிகள் எடுக்க நேரிடும். துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரும். அப் போது ஆன்மா, "பிறப்பதற்கு முன் செய்த தீவினைதான் இங்ஙனம் வந்து மூண்டது என்றுணரும்.

பாவம் செய்த ஆன்மாக்கள் பூமியி லும் நரக வாழ்வு வாழலாம். கொடூர யுத்தம், விபத்துக்களால் உடல் கருகி சிதைந்து கை, கால்கள் துண்டிக்கப்பட்டு, கண்களை இழந்து, இருப்பிடமோ ஆதரிப்போர் எவருமின்றி வினைப்பயனை அனுபவிப்போர் பலர். உயிர் தப்பினாற்போதும் என்றெண்ணி, உடமை களை விட்டு, எறிகணைகள் குண்டுவீச்சுக் களுக்கு எத்தனை இடங்கள் மாறி மாறி அகதி முகாம்களில் சிறைப்பட்டு, குளிக்க- குடிக்க- மலசல விமோசனம் செய்யக்கூட நீர் வசதியின்றி வயிற்றுப்பசிக்கு ஒருவேளை உணவு கிடைக்காமல் பட்டினிச் சாவை

**மௌனம் சில சமயங்களில் உரத்த குரலைக் கொண்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்திருப்பர். இவைகள் யார் செய்த பாவம். எல்லாம் அவரவர் செய்த கன்ம வினைகளே. இந்த நரக வேதனைக்கு முடிவேயில்லையா என ஆன்மா உணரும்.

மனிதன் கன்ம வினையின் பலனை அனுபவிக்கும் இடம் இந்தப் பூமி. ஆன்மா எத்தனை பிறவிகள் எடுக்கும். "புல்லாகி பூடாகி, புழுவாகி... மனிதராய் தேவராய்" என முடிக்கிறார் மணிவாசகர். பாவவினை அனுபவிக்க கூன், குருடு, செவிடு, முடம் என குறைபாடுகளுடன் பிறக்கலாம்; ஈளை, இருமல், கசம், குஷ்டம், மேகம், புற்றுநோய் களால் அவதிப்படலாம். அப்போதுதான், "பிறப்பதற்கு முன்பு செய்த வினையே" என்ற மெய்யுணர்வு வரும். இந்நிலையில்,

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" "படமுடியாது இனித்துயரம் படமுடியாது" என இறைவன் பாதத்தை சரணடையும்.

## தை பிறந்தால் எமக்கு வழி பிறக்கும்!

"தை" மாதம் பிறந்துவிட்டால் கூடவே சந்தோஷமும் சேர்ந்து பிறந்துவிடும். இது காலங்காலமாக நிகழ்ந்துவரும் உண்மை. இந்தத் தை மாதத்தின் பெருமையை உணர்ந்துதானோ என்னவோ, "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.



ஓர் இல்லத்தில் நல்லது நடக்க இந்தத் தையை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். "குமர் காரியம்" ஒப்பேறும் என்று முதியோரும் பார்த்திருப்பார்கள். சின்னஞ் சிறுசுகளும் தம் கனவு நனவாகும் என்று ஆவலோடு மகிழ்ந்திருப்பார்கள்.

ஆதலால் "தை" மகளை வரவேற்று உபசரித்து வாழ்த்துக்கள் கூறி மகிழ்வதோடு, எமது வயலில் நெல் மணிகள் உற்பத்தியாவதற்கு பரிபூரணமாகக் கதிர்களை வீசி கதிர் வளர உதவிய கதிரவன் சூரிய பகவானுக்கு புத்தரிசிப் பொங்கலிட்டுப் படைத்து வணங்கி மகிழ்வோம்.

அது மாத்திரமன்றி, வயலில் பயிர் வளர தம்மாலான மட்டும் முற்று முழுதாகப் பாடுபட்டு உழைத்த உழவர் பெருமக்கள் விளைந்த நெல்மணிகளை அறுவடை செய்ய ஆண்டவன் அருள்வேண்டிக் களத்திலிறங்குவர்.

"ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது; அதில் ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது" என்றபடி வயலில் கட்டிளங் காளையரும் கன்னியரும் ஒருமித்து நல்ல ஒற்றுமையுடன் பாடுபடும் அழகே தனி!

இவ்வாறு இவர்களோடு சேர்ந்து நெல் வயலிலே கடும்பாடுபட்ட எருது மாடுகளும் "அம்மா" என்று அழைத்தபடியே அயராது வேலை செய்யும் பாங்கு வர்ணிக்க முடியாது; சொல்லில் அடங்காது. பால்தரும் பசுக்களுக்கும் ஏழை பங்காளனாம் எருதுகளுக்கும் தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் மாட்டுப்பொங்கல் அதாவது பட்டிப் பொங்கல் பொங்குவதும் பாரம்பரிய சம்பிரதாயமாக இன்றும் வழக்கிலிருக்கிறது.

இன்று பல்வேறு வகையாலும் சிறப்புறக் காண்கின்ற இந்தத் தையல் நல்லாளின் புருஷனாகப் புருஷோத்தமனாக விளங்கும் தைப் பெண்ணின் இதயங்கவர்ந்த நாயகன் சூரியனை வணங்கி வழிபாடு நடத்தி நல்வாழ்வு வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

*-இராசையா ஸ்ரீதரன்-*

**சாந்தமாகச் செல்பவன் பாதுகாப்பாகச் செல்கிறான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

– உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் –

## பரிவார தெய்வங்கள்

திருக்கோவிலுள் நுழைந்து அதன் அமைப்பினை நோக்கும்போதுதான் பரிவார தெய்வங்கள் வழிபாட்டில் வகிக்கும் நிலையினை உணர முடியும். சைவத்தில் இன்றியமையா இடம் வகிக்கும் தேவி சிவனுக்கு இடது பக்கத்தில் தனிக் கோவிலில் இடம் பெறுகிறாள். இறைவனுக்கு வலப்பக்கத்தில் கணபதிக்கும் இடப்பக்கத்தில் கந்தவேளுக்கும் தனித்தனி கோவில்கள் இருக்கின்றன. வாயிலில் அடிவைத்து உள்ளே நுழைந்ததுமே நந்திதேவரைக் காண்கிறோம். இவர் அனுமதி கோரி உள்ளே நுழைவதே முறை. வாயிலுக்கு அருகாமையில் கோயிலின் உட்புறத்தில் பாதுகாவலனாக இறைவன் சந்நிதியை நோக்கியவாறு பைரவர் வீற்றிருப்பார். இறைவன் சந்நிதானத்திற்கெதிரே வலப்புறம் சூரியனும் இடப்புறம் சந்திரனும் இறைவனை எதிர்நோக்கி வீற்றிருப்பர். நவக்கிரகங்களும் பரிவாரத் தெய்வங்களே. இவற்றிற்கும் தனிக் கோவில் உண்டு. சிவனின் அடியவர்களான அறுபத்துமூவரும் பிரகாரத்தில் நடராச மூர்த்தி சந்நிதியில் நடராசப் பெருமானை நோக்கியவாறு தமக்கென நிறுவப்பட்ட தனி அறையில் இடம்பெறுவர். சிவபெருமானது மூர்த்தி பேதங்களான சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், இலிங்கோற்பவர், பிக்ஷாடனர், தக்ஷிணாமூர்த்தி, நடராசர், வீரபத்திரர் முதலியோரும் இறைவன் லிங்கத் திருமேனி கொண்டெழுந்தருளி இருக்கும் கருவறைக்குப் புறம்பாய்ச் சுற்றிலும் உள்ள தனி இடங்களில் இடம்பெறுவதை நோக்கும் வழிபடுவோர்க்கு, இவர்கள் பரிவாரத் தெய்வங்களோ என்றும் ஐயம் ஏற்படுவது இயற்கையே. கோவில் வாயிலில் காவல்புரியும் துவாரபாலகர்களும் பரிவாரத் தெய்வங்களே. இது மட்டுமன்று கோவிலை உருவாக்கப் பயன்படும் ஒவ்வொரு பொருளும் கோவிலின் உறுப்பாயமைந்ததும் தெய்வீகம் வாய்க்கப்பெற்றுத் தத்தமக்குரிய அதி தெய்வங்களை உடையனவாய் விளங்குவன. இவ்வதி தெய்வங்களும் பரிவாரத் தெய்வங்களே. இந்திரன் முதலிய திக்குப் பாலகர்களும் உருவம் பெற்றுக் கோவிலில் நிறுவி வழிபடப்படாதவரெனினும் உரிய வேளைகளில் பரிவாரங்களாகப் பூசிக்கப்படுகின்றனர்.

பாரத நாட்டில் நிலவுஞ் சமயங்களைப் பற்றியமையும் மூலநூல்கள் ஆறு மதங்களைக் குறிப்பிடுகின்றன. இவை **காணபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம், வைஷ்ணவம், சைவம்** என்பன. சிறப்புமிக்க சைவமதம் தனித்தனியாகக் கூறப்படும் ஏனைய ஐந்து மதங்களையும் உள்ளடக்கி அத்தெய்வங்களைப் பரிவாரங்களாக மேற்கொண்டது. இத்தெய்வங்கள் பரிவாரத் தெய்வங்களாக இடம்பெறுவதைச் சிவாலயங்களில் காண்கிறோம். இத்தெய்வங்கள் சைவக் கோவில்களில் வகிக்கும் நிலையினையும் சிவவழிபாட்டில் இடம்பெறுவதையும் இங்கு சுருக்கமாகக் கவனிப்போம்.

"சக்தி" சைவத்தின் இன்றியமையா உறுப்பு. இறைவன் திருக்கோலங்களுள் ஒன்று அர்த்தநாரீசுவர வடிவம். இங்கு சிவன் மாதொரு பாகனாக விளங்குகின்றான். சிவமும் சக்தியும் பிணைந்து ஒருருப்பெற்ற நிலை சைவத்தில் சக்தியின் இன்றியமையாமையைச் சுட்டுகின்றது. பரிவாரத் தெய்வங்களைப் பற்றிக் கூறாதுவிடின் சைவக் கிரியைகளைப் பற்றிய வரலாறு நிறைவுறாது. இவ்வைந்து தெய்வங்களுந் தனித்தனி உயரிய தெய்வங்களாக விளங்கியதற்குத் தொல்நூல்கள் சான்று பகருகின்றன.

**நமக்காகப் பொய் சொல்லுபவன் நமக்கெதிராகவும் பொய் சொல்லுவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கூறப்படுந் தெய்வங்கள் பரிவார தெய்வங்களாக விளங்குமிடத்தும், அவை தனித்தனிக் கோவில்கள் பெற்று அங்கு பெருந்தெய்வங்களாக விளங்கும் நிலையினையுடையன. எனவே, பிள்ளையார், சுப்பிரமணியர், தேவி ஆகிய தெய்வங்கள் தனித்தனிக் கோவில்களில் உயரிடம் வகிப்பவர்களாய், வழிபடப்பட்டு வரக் காண்கிறோம். தேவியின் வெவ்வேறு அம்சங்களான காளி, துர்க்கை, சாமுண்டி முதலிய தெய்வங்களுக்குந் தனிக்கோவில்கள் உள. இக்கோவில்கள் பெருமளவிற்குச் சிவாலயத்தையே நிகர்த்து விளங்குவன. இக்கோவில்களிலும் பரிவாரத் தெய்வங்கள் மிகமிகச் சிறிய அளவிற்கு விளங்கக் காண்கிறோம். சிவாலயத்தில் நந்தி விளங்கும் இடத்தில் பிள்ளையார் கோவிலெனின் மூஷிகம் இடம்பெறும். சுப்பிரமணியர் கோவிலில் மயில் நந்தியின் இடத்தை வகிக்கின்றது. அம்மன் கோவிலில் இவ்வாறு இருப்பது சிங்கம். இத்தகைய கோவில்களில் சிவனுக்கும் சக்திக்கும் இடம் உண்டெனினும் இவ்விருவரும் பரிவாரத் தெய்வங்களாக ஒருபோதுங் கருதப்படமாட்டார்கள். பிள்ளையார், சுப்பிரமணியர் ஆகியோருக்கு உரிய தனிக் கோவில்களில் சிவனும் சக்தியும் உயரிடம் வகிப்பதற்கு எடுத்துக்காட்டாக இலங்கையிலும் இந்தியாவிலும் கோவில்கள் இருக்கின்றன. இந்தியாவில் திருச்சிராப்பள்ளியில் உள்ள உச்சிப்பிள்ளையார் கோவிலையும், சுவாமிமலையில் உள்ள முருகன் கோவிலையும், இலங்கையில் கொழும்பில் செட்டியார் தெருவில் இருக்கும் முத்துவிநாயகர் கோவிலையும், அங்கு ஜிந்துப்பிட்டி வீதியில் காணப்படும் சுப்பிரமணிய சுவாமி கோவிலையும், யாழ்ப்பாணத்து நல்லூர் கைலாச பிள்ளையார் கோவிலையும் உதாரணங்களாக எடுத்துக்காட்டலாம்.

பிள்ளையாருக்கும் கந்தனுக்கும் முறையே அமைந்த இவ்வாலயங்களில் சிவனும் உமையும் பரிவாரங்களுடன் கோயில் கொண்டு உயர்நிலையில் எழுந்தருளியிருக்கக் காண்கிறோம். எனினும், இலங்கையில் சிவன், பார்வதி இல்லாத தனிக்கோவில்கள் பல முருகனுக்கும், பிள்ளையாருக்கும், காளிக்கும், துர்க்கைக்கும், தேவிக்கும், வீரபத்திரருக்கும் வெவ்வேறாக உண்டு. சிவன் கோவில்களில் கருவறையில் மூலமூர்த்தியாகச் சிவலிங்கத் திருவுருவே நிறுவப்படும். பிள்ளையார், முருகன், தேவி ஆகியோரின் தனிக்கோவில்களிலோவெனின் அவ்வம் மூர்த்திகளின் உருவத் திருவுருவங்களே கருவறையில் மூல விக்கிரகங்களாக நிறுவப்படுவன. சிவாகமங்கள் அனைத்தும் சிவனை முக்கிய இடத்திலும் ஏனையோரைப் பரிவார தெய்வங்களாகச் சுற்றிலும் அமைக்கும்படி விதித்துக் கூறுவன. இதிகாச புராணங்களும் இந்நிலையினையே தெளிவாகச் சுட்டக் காண்கிறோம்.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| மார்ச்20 | பங்குனி06 | வியாழன் | காரைக்காலம்மையார் |
| மார்ச்28 | பங்குனி14 | வெள்ளி | பரமகுரு சுவாமிகள் |
| மார்ச் 30 | பங்குனி16 | ஞாயிறு | குழந்தைவேற் சுவாமி |
| ஏப்ரல் 01 | பங்குனி 18 | செவ்வாய் | செல்லப்பா சுவாமி |
| ஏப்ரல் 06 | பங்குனி 23 | ஞாயிறு | நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் |
| ஏப்ரல் 10 | பங்குனி 27 | வியாழன் | யோகர் சுவாமி |
| ஏப்ரல் 24 | சித்திரை11 | வியாழன் | திருநாவுக்கரசர் |
| ஏப்ரல் 29 | சித்திரை 16 | செவ்வாய் | சிறுத்தொண்டர் |

உன்னுடைய தவறுகளை மற்றவர்களுக்கு மிகைப்படுத்துவதற்குமுன் ஒப்புக்கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுடையார் எல்லாம் உடையார்

– செல்வி செ. ஜடா அவர்கள் –

அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்துவது. பணம், பதவி, குலம், பருமன், உயரம், நிறம் அன்று.


அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது திருவள்ளுவரின் வாக்கு.

நல்ல நூல்களைக் கற்கும் தோறும் அறிவு நுணுகி, நலம் எய்தும் நுண்ணறிவின் அளவு நூலின் அளவுதான். இறைவன் கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி. கல்லாமனத்துடன் நில்லாத் தன்மையன்.

மக்கள் செய்யும் பிழைகள் எல்லாவற்றிலும் மன்னிக்கமுடியாத பிழை அறிவு நூல்களைக் கல்லாமையே. பிழைகள் என்ன என்ன என உபதேசிக்கின்றார் பட்டினத்து அடிகளார்.

"கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுங் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே"

நல்ல நூல்களைக் கற்காமலிருப்பதை முதற்பிழையாகக் கூறினார். எல்லோரும் நூல்களைக் கசடறக் கற்க வேண்டும். கற்றார்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. உற்றாரும், மற்றாரும், கற்றாரைக் கைகூப்பி வணங்குவர். "கல்லாதவரைக் கண்டால், அம்மா! நாம் அஞ்சுமாறே" என்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.



அறிவை வளர்க்கத் தமிழில் பல அறநூல்கள் உள்ளன. உலகிலுள்ள எல்லா அறங்களையும் தன்னகத்தே கொண்டு சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது திருக்குறள். திருவள்ளுவர் தமது குறளின் இரண்டடியால் எல்லா உலகங்களையும் அளந்துவிட்டனர். திருக்குறள் ஓதுவதற்கு எளிது. மனப்பாடஞ் செய்வதும் சுலபம். வேதங்களிலுள்ள விழுப்பொருள்களையெல்லாம் விளக்கமாக உரைப்பது; நினைக்கும் தோறும் நெஞ்சில் தெவிட்டாத இன்பத்தை ஊற்றெடுக்கச் செய்வது; கருத்துவேறுபாடின்றி முடிந்த முடிபாகிய உண்மையை உணர்த்துவது.

திருக்குறளைப் பற்பல மொழிகளில் மொழிபெயர்த்து எல்லாத் தேசத்தாரும், எல்லாச் சமயத்தாரும் பாராட்டிப் புகழ்வதே அதன் பெருமையையும், மகிமையையும், அருமையையும் நன்கு புலப்படுத்துகின்றது.

தூயவாழ்வு வாழ்ந்து, எல்லா அறங்களையும் நன்குணர்ந்து திருவாய் மலர்ந்தருளிய திருவள்ளுவர் "தெய்வப்புலவர்" எனும் பெயர் பெற்றார். அவர் சங்கப்புலவர் நாற்பத்தொன்பது பெருமக்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர். செந்தமிழுக்கே ஒரு அரிய கௌரவத்தைக் கொடுத்து தமிழ்மறை எனப் போற்றப்படுவது திருக்குறள்.

"ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

**பிறகு என்பதும் பேசாமலிருப்பதும் இல்லையென்பதற்குச் சமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது நம்நாட்டுப் பழமொழி. நூல் என்பது நாலடியார். இரண்டு என்பது திருக்குறள். உயிருக்கு உறுதி பயக்கும் ஒழுக்கநெறியைத் திருவள்ளுவர் வலியுறுத்தி, அறத்தின் நுட்பத்தை,

"அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று"

எனத் திருவாய் மலர்ந்தருளினார். இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டு, பொய், வஞ்சகம், களவு முதலிய தீவினைகளை ஒழித்து நல்வழிகளில் பொருளை ஈட்டி தென்புலத்தார், தேவர், விருந்தினர், சுற்றத்தார் ஆகிய நால்வர்களுக்கும் பகுத்துக் கொடுத்துப் பின் எஞ்சி நின்றதை ஒருவன் உண்டு வருவானேயானால், அவனுடைய மரபு இந்நிலவுலகில் என்றும் நிலை பெற்று நிற்கும்.

"பழி அஞ்சிப் பாத்து ஊண் உடைத்தாயின் வாழ்க்கை
வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

என அறத்தின் நுட்பங்களை வரையறுத்துக் கூறுகின்றார். அறத்தின் வழிநிற்பவன் எக்காலத்தும் அழியாத புகழையும், இன்ப வீட்டையும் எளிதிற் பெறுவான்.

திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று முப்பாலாக உள்ளது. அறத்துப்பால்- இல்லறவியல் துறவறவியல் ஊழில் எனும் பிரிவினையும், பொருட்பால்- அரசியல், உறுப்பியல் எனும் இரு பிரிவினையும், காமத்துப்பால்- களவியல், கற்பியல் எனும் இரண்டு பிரிவுகளையுமுடையது. இவற்றுள் எல்லா நீதியையும் நன்கு விளக்கியருளி யுள்ளார் திருவள்ளுவர்.

திருக்குறளுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. தமிழ் எழுத்துக்கள் அகரத்தில் தொடங்கி னகர மெய்யில் முடிவடைகின்றன. எல்லா எழுத்துக்களும் இதற்குள் அடங்கிவிடுகின்றன. திருக்குறளும்,

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற அகரத்தில் தொடங்குகின்றது.

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்று னகர மெய்யில் முடிவடைகின்றது.

1330 குறள்களை நன்றாகக் கற்றால், உலகம் போற்றும் உயர்நிலையை அடையலாம். கற்றாங்கு ஒழுக வேண்டும்.

"கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

இறைவனை "வாலறிவன்" எனக்கூறி தூய அறிவின் சொரூபியாகிய அவனின் திருவடிகளை என்றும் தொழவேண்டுமென அறிவுரை வழங்கியுள்ளார். கல்வியின் பயன் இறைவனை என்றும் வணங்குதலே என வலியுறுத்தியுள்ளார்.

தமிழராகிய நாம், தமிழ் மறையாகிய திருக்குறளை நன்கு கற்றுணர்ந்து, அறிவுத் தெளிவு பெற்று உய்யும் வழியிற் செல்வோமாக.

**ஒரு பொய் ஈட்டியைவிட ஆழமான காயத்தை உண்டாக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| குமாரசாமி சோமசுந்தரம் | தெகிவளை | 5000. 00 |
| வ. அஸ்வினியா | பருத்தித்துறை | 4500. 00 |
| N. இரத்தினம் | பருத்தித்துறை | 2000. 00 |
| பாலசுப்பிரமணியம் விசிக்குமார் | புன்னாலைக்கட்டுவன் | 500. 00 |
| வே. சின்னத்தம்பி | மந்துவில் மேற்கு | 500. 00 |
| க. காசிராசா | குப்பிளான் | 1000. 00 |
| சி. குகதாசன் | ஆவரங்கால் கிழக்கு | 2000. 00 |
| ஜெ. இராஜகோபால் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| கு. ரங்கநாதன் | இணுவில் தெற்கு | 5000. 00 |
| ஜெ. தனுஜா (கஸ்தூரி) நெடியகாடு | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| மா. தங்கவேல் | பருத்தித்துறை (பலாலி) | 3000. 00 |
| M.K. சுப்பிரமணியம் | சித்தங்கேணி | 4500. 00 |
| சு. உதயராசா | கோண்டாவில் | 10000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் மகாத்மாவீதி | நெல்லியடி | 1000. 00 |
| பொ. தர்மராஜசிங்கம் | இணுவில் | 5000. 00 |
| செ. சண்முகலிங்கம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| P. சபாநாதன் | மானிப்பாய் | 1000. 00 |
| S. சிவகுருநாதன் | கனடா | 2100. 00 |
| Dr R. ராமச்சந்திரன் | புசல்லாவ | 5000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| T. தயாளினி | நவிண்டில் | 10000. 00 |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | கோப்பாய் | 5000. 00 |
| S. சாந்தகுமார் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| திருமதி சீவரட்ணம் பத்மாவதி | சங்கானை | 1000. 00 |
| கு. சுரேஷ்குமரன் | வட்டுக்கோட்டை | 500. 00 |
| V. சதானந்தன் | வட்டுக்கோட்டை | 500. 00 |
| Dr சி. இராஜலிங்கம் | அச்சுவேலி | 1000. 00 |
| திரு முத்துலிங்கம் செட்டியார் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| மு. யோகேஸ்வரி | கொக்குவில் | 1000. 00 |
| சங்கரப்பிள்ளை சண்முகம் | அவுஸ்திரேலியா | 33249. 00 |
| ஜெ. சந்திரப்பிரகாஷ் குடும்பம் | பருத்தித்துறை | 5000. 00 |
| ஸ்ரீகரன் அபிலஷா | பிரான்ஸ் | 2000. 00 |
| வை. சுஜாதா | இடைக்காடு (கனடா) | 5500. 00 |
| K. சரவணபவான் | மட்டுவில் | 1000. 00 |

அதிகம் வைத்திருப்பவன் பணக்காரன் அல்ல, அதிகம் கொடுப்பவனே பணக்காரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஸ்ரீபாலகிருஷ்ணன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சிவமுத்துலிங்கம் மூலம் இந்துசமயப் பேரவை | கனடா | 170 டொலர் |
| சண்முகலிங்கம் தயாபரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| சிவயோகன் விபூஷனி கந்தர்மடம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சந்திரப்பிரகாசம் ராகவேந்தன் | பருத்தித்துறை | 2000. 00 |
| சி. நாகராசன் சின்னராசாமூலம் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| மதனகுமார் ஜெயந்தா | வரணி | 3000. 00 |
| இரகுநாதன் குடும்பம் | சுவிஸ் | 5000. 00 |
| ஸ்ரீராம் நரேந்திரன் }<br>ரகுராம் நரேந்திரன் } | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| தணிகாசலம்பிள்ளை தணிகபாலன் }<br>தணிகபாலன் சௌமியா } | கொழும்பு-6 | 2500. 00 |
| யோகநாதன் பிருந்தா | உரும்பராய் தெற்கு | 10000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் குடும்பம் | பத்தமேனி | 1000. 00 |
| சோ. காண்டீபன் | நாவற்குழி | 3000. 00 |
| Dr V. பாலகிருஷ்ணன் குடும்பம் | கரணவாய் | 2000. 00 |
| நா. கந்தப்பு குடும்பம் தோப்பு | அச்சுவேலி | 5000. 00 |
| சி. சச்சிதானந்தம் சச்சியா இரும்பகம் வட்டுக்கோட்டை | | 1மூடை அரிசி, 1புட்டி உருளைக்கிழங்கு |
| திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் | கனடா | 1000. 00 |
| உதயராசா சுப்பிரமணியம் | கோண்டாவில் வடக்கு | 10000. 00 |
| ம. ரவிதரன் | குடத்தனை | 16000. 00 |
| ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியன் கம்பர்மலை | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| திரு யோகராசா குடும்பம் | இடைக்காடு | 3000. 00 |
| S. ஹம்ஷை | ஆவரங்கால் | 5000. 00 |
| மயூரதி | தாவடி | 5000. 00 |
| வசீகரன் யதுஷிகா | | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி (நினைவு) | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பிரபாகரன் | அச்சுவேலி தெற்கு | 1மூடை அரிசி |
| நீரஜா சத்தியசீலன் மக்கள் வங்கி | யாழ்ப்பாணம் | 2500. 00 |
| திரு சுகிர்தலிங்கம்மூலம் வ. மகிழன் | பருத்தித்துறை | 2000. 00 |
| திரு இராமச்சந்திரன் (அவுஸ்திரேலியா) | பருத்தித்துறை | 2000. 00 |
| திரு மனோகரன் குடும்பம் | சுவிஸ் | 10000. 00 |
| அமரர் கார்த்திகேசு ஆசிரியர் நினைவு | திருமுறிகண்டி | 5000. 00 |
| திரு சரண்யன் | உரும்பராய் | 1000. 00 |
| திரு ரிஷிகேசன் | உரும்பராய் | 1000. 00 |
| அ. சிவலிங்கநாதன் | திருநெல்வேலி தெற்கு | 5000. 00 |
| Dr P. மகிழ்நங்கை | வெள்ளவத்தை | 10000. 00 |
| த. சண்முகலிங்கம் | டென்மார்க் | 6000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயத்தின் அருமை பெருமைகள்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

சைவசமயம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. இதன் தோற்றம் இன்றுவரை எவராலும் கண்டறியவில்லை. கல்தோன்றா மண்தோன்றா காலத்துக்கு முந்தியது சைவசமயமென்று ஆய்வாளர்களும் அறிஞர்களும் கூறுகின்றனர். அதுமட்டுமன்றி கொலை, களவு, கள்ளுண்ணல், விபசாரம் ஆகிய பஞ்சமா பாதகங்களை அறவே ஒழிக்கச் சொல்லும் சமயம் சைவசமயமொன்றே ஆகும். எனவே சைவ சமயத்தின் அருமை, பெருமைகளைச் சொல்லால் எடுத்து இயம்புதல் இயலாது.

சைவ சமயத்தின் அருமை, பெருமைகளை நாயன்மார்களும், யோகிகளும், சித்தர்களும் காலத்துக்குக் காலம் தோன்றி உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். சீர்காழியில் தோன்றிய திருஞானசம்பந்தர் மூன்று வயதில் தோணியப்பர் கோவிலில் ஞானப்பால் உண்டு "தோடுடைய செவியன்" என்னும் முதலடியுடைய பாடலில் "காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளம் கவர் கள்வன்" என அருளியுள்ளார். சிவனை மூவாய், பிறவாய், இறவாய் போற்றி, முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி" என்று கைலாய பதிகத்தில் அப்பரும், "காலகாலனை கம்பனெம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே" என்று சுந்தரரும், "ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதி" என்று மாணிக்கவாசகரும் திருவாய் மலர்ந்துள்ளனர். திருமூலர் சிவனை, "சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை அவனொடு ஒப்பார் இங்கு யாவருமில்லை" என்று அருமை பெருமைகளை அறிய வைக்கின்றனர்.

சிவன் ஒருவர் அவர் அடியார்களுக்கு அருள் செய்யும் பொருட்டுப் பல வடிவங்களைத் தாங்குகின்றார். தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்குத் தாய்ப்பன்றியாகத் தோன்றி பால் ஊட்டினார். செம்மனச் செல்வி (வந்தி) அம்மையாருக்கு கூலியாளாகத் தோன்றி பிட்டு சுவைக்க உண்டு, அணை கட்டுமிடத்தில் அணை கட்டாது திருவிளையாடல் புரிந்து அடிபட்டதையும் புராணங்கள் கூறுகின்றன. தனது ஒரேயொரு மகனை வாளால் அரிந்து கறி சமைத்துக் கொடுத்த சிறுத்தொண்டனுக்கு அருளியதையும், கண்ணப்பனின் பக்தித் திறனை உலகுக்கு காட்ட சிவன் செய்த திருவிளையாடலை யாவரும் அறிவர். சிவனின் அருட் செயல்களால், சைவ சமயத்தின் அருமை பெருமைகள் நிலைத்து வேரூன்றி நின்றன.

சைவத்தை வளர்க்க ஆறுமுக நாவலர் தோன்றினார். கிறீஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த காலத்திலும், சைவநெறியினின்றும் மாறுபடாது சைவசமய நூல்களையும் அச்சிட்டு சைவப் பிரசங்கங்களையும் செய்துவந்தார். ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள் "சைவ வினாவிடை" என்னும் சிறிய நூலை அச்சிட்டு, சைவ உண்மைகளை அறிய வைத்தார். சைவ வினாவிடையில் (1) உலகுக்கு கருத்தா யாவர்? விடை சிவபெருமான். (2) சிவபெருமான் எப்படிப்பட்டவர்? விடை: என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர். சிவனின் தன்மையைக் கூறிய நாவலர் கோவிலுக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்பதையும், பின்வரும் வாக்கியம் மூலம் விளக்கினார். தோய்ந்து, தோய்த் துலர்ந்த ஆடை தரித்து, விபூதி அணிந்து, சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு, அர்ச்சனைப் பொருட்களுடன் செல்லவேண்டுமென்பதையும் கூறிவைத்தார். யாழ்ப்பாணத்தில் தோன்றிய நாவலர் பெருமான் தனது

செழுமை வரும்போது எல்லாவற்றையும் செலவு செய்து விடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியும், உடலும் உடமை எல்லாம் இறைவனுக்கு அர்ப்பணித்து இறைவனடி சேர்ந்தார். அவரின் பணியை ஆன்மீக அன்னை சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தொடர்ந்தார். அவர் வழியினைத் தொடர்ந்து கடைப்பிடித்து, துர்க்கை அம்மன் ஆலயத்தை பரிபாலனம் செய்து, சைவப் பிரசங்கங்களும் நிகழ்த்தி வந்தார். ஆலயத்துடன் இணைந்து சிறுவர் இல்லத்தையும் நடாத்தி வந்தார். நல்லூரில் துர்க்கா மண்டபம் அமைத்து அன்னதானம் வழங்கி வருவதை தற்போது மக்கள் நன்கு அறிவர். அவர் இறைவனடி சேர அவர் செய்து வந்த பணியைத் தற்பொழுது செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் செய்து வருகின்றார்கள். இவர்களால் சைவசமயத்தின் அருமை பெருமைகள் காப்பாற்றப்படுகின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

சைவசமயத்தின் அடிநாதமாக விளங்குவது அடியார்களுக்கு அன்னதானம் வழங்கல். அடியார்க்கு அன்னதானம் வழங்க வேண்டுமென்பதற்காக சிறுத்தொண்டன் தனது ஒரேயொரு மகனை வெட்டிக் கறி சமைத்துக் கொடுத்தான். நடுநிசியில் மழை கொட்டிக்கொண்டு நிற்கும் நிலையில் வந்த அடியவருக்கு, உணவு கொடுப்பதற்கு வயலில் விதைத்த நெல்லை வாரியெடுத்து வந்து உணவு சமைத்துக் கொடுத்தார் இளையான் குடிமாற நாயனார். இன்று பல ஆலயங்களில் அன்னதானம் நடைபெறுகின்றது. அன்னக் கந்தன் ஆலயச் சூழலில் பல சத்திரங்கள் இயங்குகின்றன. அவற்றுள் தினந்தோறும் அன்னதானம் வழங்கும் ஆச்சிரமமாக விளங்குவது சந்நிதியான் ஆச்சிரமம் ஒன்றேயாகும். சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினமும் அன்னதானம் வழங்கி, இல்லையென்று சொல்லாது எல்லோருக்கும் உணவு அளிப்பதை நினைத்தால் மனம் புளகாங்கிதம் அடைகின்றது. சைவ சமயத்தின் அருமை பெருமைகளை உணர்த்தி நிற்கும் தலமாகத் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயம் விளங்குகின்றது. எனவே மானிடப்பிறவி எடுத்த நாம் ஆற்றங்கரையான் தலம் சென்று இன்புற்று வாழ்வோமாக.

## எப்போதும் உனைநாடிட மனம்தா முருகா

வேல்காட்டி உனைநாட மனம்காட்டி
பணிந்து பாடவைத்த முருகா
மால் மருகோனே நித்தம் உனை நினைந்து
பாதம் பணிந்திட நின்றருள்வாயே
கோலமா மயிலேறி குலவு தெய்வானை வள்ளியுடன்
குமரேசா வரும் நற் காட்சி காட்டு
காலை மாலை மதியம் இரவென்று காணிட
மனம் கூட்டுக். கதிரமலையானே

-சின்னப்பு தனபாலசிங்கம்-

சிக்கனத்தைக் கடைப்பிடிக்காதவன் வருத்தமடைய நேரிடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒட்டகச் சிவிங்கியின் ஆசை

அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃது உண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். (குறள்: 368)

ஆசை இல்லாதவருக்குத் துன்பம் இல்லை. ஆசை இருந்தால் மேலும் மேலும் துன்பம் வரும். ஆசை எனும் பெருந்துன்பம் நீங்கிவிட்டால், இன்பம் தொடர்ந்திருக்கும். ஒருபோதும் திருப்தி தராத ஆசை நீங்கிவிட்டால், அந்நிலையே மாறாத இன்பமான ஆத்ம இயல்பாகும். ஆசையை விட்டுவிட்டால், விரும்பிய நன்மை வாய்க்கும். ஆசையை விட்டவரே பற்றை விட்டவர். மற்றவர் பற்றை விடாதவரே. இப்படி ஆசைக்குப் பயந்து வாழ்வதே அறமாகும். ஏனெனில் அயர்ந்தபோது வஞ்சிப்பது ஆசையே. தூய்மை என்பது ஆசையின்மையே. அது வாய்மையுடனிருந்தால் வாய்க்கும்.



ஓர் ஒட்டகச்சிவிங்கி இருந்தது. உலகில் உள்ள பிராணிகளிலேயே அதிகமாகக் கழுத்து நீண்டிருப்பது அதற்குத்தான். அதைக் கொண்டு மிக உயர்மான மரத்திலுள்ள இலைகளை எல்லாம் சாப்பிட்டு ஆனந்தமாக வாழ்ந்தது. அது ஒரு யானையைப் பார்த்தது. அது தன் தும்பிக்கை கொண்டு உயரத்திலுள்ள இலைகளை மேய்ந்தபோது சிவிங்கிக்கு ஓர் எண்ணம் உதித்தது. "இந்த யானையை விடவும் மிக உயரத்திலுள்ள மிகத் தொலைவிலுள்ள இலைகளையெல்லாம் மேய வேண்டும் என்று சிந்தித்தது. இதற்கு இன்னும் தன் கழுத்து மிக நீளமாக இருக்கவேண்டும் என்று கருதியது.

நீண்ட கழுத்தாசை அதற்கு எழுந்தது. பணக்காரன் இன்னும் பணத்திற்கு ஆசைப்படுவதைப் போல எல்லா உயிர்களையும்விட நீண்ட கழுத்தை உடைய ஒட்டகச்

**சுத்தம் உண்மையாக தெய்வீகத்திற்கு அடுத்தபடியானது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவிங்கிக்கு தன் கழுத்து இன்னும் நீண்ட தாக அமைய விருப்பம் ஆசையாகித் தகித்தது.

கடவுளை எண்ணித் தியானமிருந் தது. உண்ணாமல், உறங்காமல் தவமாக அது உக்கிரமாக மனதை ஒருமுகப்படுத்தி "கடவுளே கடவுளே" எனத் தியானம் செய் தது. காட்டில் இருந்த குளத்தில் குளிப்பதும், அல்லி மலரைக் கொண்டு போய் ஒரு சிவ லிங்கத்தின்மேல் போட்டு பூஜிப்பதுமாக இருந் தது. உயர்ந்த நாகலிங்க மரத்தின் மேலி ருந்து நாகலிங்கப் பூக்களைப் பறித்து வந்து சிவலிங்கத்திடம் போட்டு மண்டியிட்டு வணங் கித் தியானம் செய்தது. சிவபிரான் உச்சி குளிர்ந்தார். கண்விழித்துப் பார்த்தார்.

எதிரில் தோன்றிய சிவபிரானிடம் நன்கு பணிந்த ஒட்டகச் சிவிங்கி வரம் கேட் டது. "பெருமானே, எனக்கு பல நூறு கெஜங் கள் தொலைவிலிருக்கும் தாவரங்களையும், மிக உயரமான தென்னை, பனை போன்று உயர்ந்த மரங்களின் உச்சியிலிருக்கும் இலை களையும் மேய்வதற்கு ஏற்ப, மிகப்பெரிய நீண்ட கழுத்தை வழங்கவேண்டும். இதுவே நான் கேட்கும் வரம்" என்றது.

"எதையும் அளவிற்கு மீறி ஆசைப் பட்டால் அவதிதான் உண்டாகும்" என்றார் சிவன். "பரவாயில்லை. நான் பார்த்துக் கொள் வேன். நீங்கள் எனது ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும்."

"சரி; தந்தேன்" என்றார் சிவன். என்ன ஆச்சரியம்! ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து மிகமிக நீண்டு விட்டது. உடனே ஆனந்தமாக அது பக்கங்களில் வெகுதூரம் கழுத்தை நீட்டி நீட்டி மேய்ந்தது. மிக உயர மரங்களி லும் புதிய இலைகளை அதிகம் பறித்துண் டது. சிலகாலம் இப்படி நன்கு உண்டு உல் லாசமாக வாழ்ந்து வந்தது.

மழைக்காலம் தொடங்கியது. ஒரு குகையில் பதுங்கியது. ஆனால் அளவுக்கு மீறிய நீளமான அதன் கழுத்தை மடித்துத் தலையை மட்டும் குகைக்குள்ளேயே வைத்துக் கொள்ள முடியவில்லை. வெளியில் வெகு தூரம் நீட்டிக்கொண்டு இருந்தது. இதனால் கழுத்திற்கு அடியில் வரும் மிருகங்களை அதனால் காணமுடியவில்லை. மழையில் காட்டில் அலைந்து உணவு பெறமுடியாத நரிகள் தம் மனைவி குட்டிகளுடன் நீளமாக ஏதோ பிராணியிருப்பதாக ஒட்டகச் சிவிங்கி யின் கழுத்தைக் கண்டன. முதலில் அதன் கீழ் தங்கின. பிறகு கழுத்தில் ஏறித் தொங்கி விளையாடின. அப்புறம் பசி வந்தபோது, கடித்துத் தின்னத் தொடங்கின. இதனால் கடித்துக் குதறப்பட்ட சிவிங்கி கழுத்தைத் திருப்பித் தூக்கித் தப்பமுடியாமல் இறந்து போனது. அதன் பேராசை பேரிழப்பானது.

இதனால் "ஆசைப்படாமை"யைப் போன்ற சிறந்த நலம் ஒன்றுமில்லை எனப் புரிகிறது. அப்படி ஆசைப்பட்டால் உலகில் பிறக்கா மலிருப்பதை ஆசைப்பட வேண்டும். இது ஆசைப்படாத நிலையால் கிட்டும். ஏனெனில் எக்காலத்தும் பிறவியினைத் தரும் விதை ஆசைதான்.

## வாசகர் உள்ளத்திலிருந்து.

ஞானச்சுடர் மாத இதழானது தனது பதினாறாவது வயதினைக் கடந்து தற்போது 193ஆவது இதழாகத் தனது பதினேழாவது வயதினில் கால்பதித்து உள்ளது. சுடர் தன்னுள்ளே பெறுமதிமிக்க பல கட்டுரைகளையும், ஆன்மிக கதைகளையும் தாங்கி வருகின்றமை பாராட்டத்தக்கதாகும். அத்தோடு தனது ஒவ்வொரு பக்கத்தின் இறுதியிலும் கருத்துள்ள வசனங்களையும் தந்துகொண்டு இருக்கின்றது. இதேபோல் மேலும் தன்னை வளர்த்து தனது பணியினை சிறப்போடு தொடர்ந்து செய்துவரவேண்டும் என்று மனமார வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-ஸ்ரீமத் வேதவித்தியா சாகர் சுவாமிகள்-
ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்

**பல வியாபாரங்களில் ஈடுபடும் ஒருவன் ஒன்றிலும் வல்லவனாக இருக்கமாட்டான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



## (விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

### காப்புச் செய்யுள்

நற்குஞ்சரக் கன்று நண்ணின் கலை ஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

### பொருள்:

அருள்வடிவான யானைக் கன்றாகிய விநாயகப் பெருமானைப் புகலாக அடைந்தால், மெய்ந்நூலறிவு வருந்திக் கற்கவேண்டிய பொருள் ஆகாது. அஃது எளிதில் வரும்.

### சொற்பொருள்:

நல்- அருள்வடிவான, குஞ்சரக் கன்று- யானைக் கன்று ஆகிய விநாயகமூர்த்தியை, நண்ணின்- புகலிடமாக அடைந்தால், கலைஞானம்- மெய்ந்நூல் அறிவு, கற்கும்- வருந்திக் கற்றுப் பெறும், சரக்கு- பொருள், அன்று- ஆகாது. (அஃது எளிதில் வரும்) காண்- மனமே இதனை நீ உணர்வாயாக.

### விளக்கம்:

**குஞ்சரக்கன்று:**

குஞ்சரம் என்பதற்கு யானை என்பது பொருள். யானை முகத்தினை உடைய பிள்ளையாரை "யானைக் கன்று" என்று குறிப்பிட்டார் ஆசிரியர். இளமை மாறி முதுமையடைதலும், நலிவுறுதலும் நம்மவர் நிலை. ஆயின் பெருமானுக்கு அந்நிலை இல்லை. அவர் என்றும் ஒரு தன்மையராய் இருப்பவர்; என்றும் இளமையானவர். அது பற்றியே அவர் கன்று எனப்பட்டார்.

உலகத்தில் உள்ள யானைக் கன்றுகளினின்றும் வேறுபடுத்திக் காட்டுதற்கு "அருள் வடிவம் கொண்ட யானைக் கன்று" என்றார் ஆசிரியர். "நல்குஞ்சரம்" என்பதில் உள்ள நன்மை, இந்த இடத்தில், அருள் வடிவம் எனப் பொருள் தந்து நின்றது.

**நண்ணுதல்:**

நண்ணுதல் என்பதற்குச் சேர்தல் என்பது பொருள். நற்குஞ்சரக் கன்றைச் சேர்தலாவது, அப் பெருமானை இடைவிடாது நினைத்தலே யாம்.

நம் எண்ணத்தில் இப்பொழுது உலகியல் பொருள்களே இடம்பெற்றுள்ளன. வீடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், மனைவி, மக்கள், பதவி, செல்வம் முதலியவை பற்றிய எண்ணங்களே நம் நெஞ்சில் நிரம்பியுள்ளன. இ·து எதைக் காட்டுகிறது? நிலையற்ற உலகியல் பொருள் களுக்கு நாம் எவ்வளவு முதன்மை கொடுத்து வருகிறோம் என்பதையே இது காட்டுகிறது.

இந்நிலை மாறி உலகியல் மீது வைத்துள்ள பற்று படிப்படியே ஒழிய வேண்டும். இறைவன் ஒருவனே நம் வாழ்வுக்கு முதலாக இருப்பவன்; அவனே எல்லாவுயிர்களுக்கும் புகலாக உள்ளவன். அவனையே நாம் பற்றாகப் பற்றவேண்டும்; அவனையே இடைவிடாது எண்ண வேண்டும். "மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல இனமலர் கையிற்கொண்டு" அப்பெருமானை வழிபடல் வேண்டும். இவ்வாறு மனம் மொழி மெய்களால் அவனை வழிபடுதலையே "நண்ணுதல்" என இங்கு குறிப்பிட்டார் ஆசிரியர்.

**கலை ஞானம் (மெய்ந்நூலறிவு):**

நூல்கள் இருவகைப்படும். அவை உலக நூல்கள், மெய்ந்நூல்கள் என்பன. உலகியல் பற்றி எழுந்தவை உலக நூல்கள். வீட்டு நெறியை உணர்த்துவன மெய்ந்நூல்கள்.

உலக நூல்களை யாரும் கற்கலாம். பல துறைகளைச் சார்ந்த உலக நூல்களை அவ்வத் துறையில் வல்ல ஆசிரியரை அடுத்துக் கேட்டு விளங்கிக்கொள்ளலாம். ஆனால், மெய்ந்நூல்கள் அத்தகையன அல்ல. அவற்றைக் கற்பதற்குப் பக்குவம் வேண்டும். பக்குவமில்லார் அவற்றைக் கற்க விழையார்; கற்க முன்வரார். ஒருவேளை முன்வந்த போதிலும் அவற்றின் பொருளை உள்ளவாறு விளங்கிக் கொள்ளார்.

ஏனெனில் ஆசை, வெகுளி முதலிய மாசுகள் மனத்தில் இருக்கின்ற வரையில் அம் மனத்தில் ஞானநூற் பொருள்கள் சென்று பதியா. முன் கூறியபடி மனம் மொழி மெய்களினால் இறைவனை உண்மையாக வழிபட்டு வருவோர்க்கு மனமாசுகள் அகலும்; உள்ளத்தூய்மை உண்டாகும். அவரே பக்குவம் உடையவர். அவரே மெய்ந்நூலறிவைப் பெறுதற்கு உரியவர்.

**கற்கும் சரக்கு அன்று:**

பொருளியல்பை உள்ளவாறு உணர்தலே ஞானமாகும். அ·தாவது, தனக்குப் புகலாகிய இறைவனது இயல்பையும், அவன் வழியில் நிற்றற்குரிய தனது இயல்பையும், அவ்வாறு நிற்கவொட்டாது தன்னைத் தடுத்து நிற்கும் தளையினது நிலையையும் உள்ளவாறு உணர்தலே ஞானமாகும்.

இந்த ஞானத்தைத் தரும் மெய்ந்நூல்களை ஒருவர் தாமே முயன்று கற்று ஞானத்தைப் பெறுதல் என்பது இயலாது. ஏனைய ஆசிரியன்மார்களை அடைந்து வருந்திக் கற்று ஞானத்தைப் பெறலாம் என்பதும் இயலாது. ஏனெனில் நம்மினும் சிறிது அதிகம் கற்ற அவ்வாசிரியர்கள் உலகநூற் பொருளை உணர்த்த வல்லவரேயன்றி ஞானநூற் பொருளை உணர்த்தும் தகுதியுடையவரல்லர்.

அவ்வாறாயின் ஞானத்தைப் பெறுதல்தான் எவ்வாறு? என்ற வினா எழும். மூத்த பிள்ளையாரது திருவடிகளை இடையறாது பற்றி நின்று வழிபட்டுவரின், அவர் உள்நின்று உணர்த்த மெய்ந்நூலறிவு எளிதில் வந்தடையும் என்பதே அதற்கான விடையாகும்.

வழிபாட்டின்மூலம் பக்குவம் எய்திய உயிருக்கு இறைவன் தானே ஞானத்தை உணர்த்துவன் என்பது கருத்து.

**அவசரங்களில் செய்யப்பட்ட சபதங்கள் அமைதியில் மறக்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காண்:**

செய்யுளின் இறுதியில் "காண்" என்ற முன்னிலைச் சொல் உள்ளது. அறிவாயாக என்பது அதற்குப் பொருள். அவ்வாறாயின், ஆசிரியர் யாரை முன்னிலைப்படுத்தி இக் கருத்தைக் கூறுகிறார்? ஆசிரியர் தம் நெஞ்சை முன்னிலைப்படுத்தி, "நெஞ்சமே! நாமும் அப்பெருமானை நண்ணி அவனருளால் இந்நூலை எளிதில் முற்றுவிப்போம்" என்று கூறியதாகக் கொள்ளலாம். அல்லது, "மாணவனை முன்னிலைப்படுத்தி "மாணவனே! நீ அப் பெருமானை உள்ளம் உருகி வழிபட்டு இந்நூலைக் கேட்பாயாயின் அவனருளால் மெய்யறிவாகிய ஞானம் உனக்கு எளிதிற் கைகூடும்" என்று கூறியதாகவும் கொள்ளலாம்.

(தொடரும்...

## வாழ்த்துகின்றோம்

கலையார்வமும் அயராத உழைப்பும் பெற்ற சிவசுப்பிரமணியம் சிவராசா அவர்கள் நாவற்குழியில் பிறந்து கொக்குவில் பிரதேசத்தில் வசித்து வருகின்றார். இக் கலைஞர் இரசாயன விஞ்ஞானத்தில் டிப்ளோமா தகைமை பெற்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரசாயனபீடத்தில் தொழில்நுட்பவியலாளராகப் பணிபுரிந்த காலத்தில் 1989ஆம் ஆண்டு கண்பார்வை பாதிப்புக்குள்ளானார். அதன்பின்பு பண்டிதர் சு. வேலுப்பிள்ளை, புலவர் கார்த்திகேசு ஆகியோரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங் களைக் கற்றுக்கொண்டு எழுத்துத் துறையில் பிரவேசித்தார்.

பல நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்ற இவர் நம்பிக்கை பிறந்தது, முடிவில்லாத ஆரம்பம், முல்லைப்பூக்கள், வண்ணமலர்கள், காதவாய்க்கால், கருணை வெள்ளம், திருத்தமிழ்க் கதைகள், தொல்லையிரும் பிறவி, ஆகாயத்தாமரை ஆகிய நூல்கள் மற்றும் ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார்.

குறுநாவல்கள், சிறுவர் இலக்கியம், சிறுகதை நாடகம் எனப் பல ஆக்கங்களைத் தந்துள்ளார். மேலும், சொற்பொழிவு, கவியரங்கம், பட்டிமன்றங்களிலும் தன் ஆற்றலை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக சங்கீத நாட்டிய சங்கம் 1998, 1999 ஆண்டுகளில் நடாத்திய போட்டியில் சிறுகதையில் மூன்றாம் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. இதேபோன்று பல நிறுவனங்கள் நடாத்திய பல போட்டிகளில் இவரது ஆக்கங்களுக்குப் பரிசுகள் கிடைத்துள்ளன. புராண படனத்திற்கு உரை சொன்ன சேவைக்காக 2006ஆம் ஆண்டு கல்யாண வேலவர் தேவஸ்தானம், "சத்தியரூபக் கவியுரையாசிரியர்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இவரது சோர்வற்ற கலைச்சேவையைப் பாராட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் "கலாபூஷணம்" விருதுவழங்கிக் கௌரவித்தது. அத்துடன் வடமாகாண கலாசாரத் திணைக்களம் 2013ஆம் ஆண்டு ஆளுநர் விருது வழங்கிக் கௌரவித்தது.

இத்துடன் எமது ஞானச்சுடர் மலருக்கும் ஆக்கங்களை வழங்குவதையிட்டும் எமது பேரவை வாழ்த்தி நிற்கின்றது.

**நல்ல தருணம் இரண்டுமுறை உன் கதவைத் தட்டுமென்று எண்ணாதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும்

– திருமதி சறோஜினிதேவி சிவஞானம் அவர்கள் –

சங்கச் சான்றோனாகிய நக்கீரர் பெரும் புலவர். தீம் சொற் தமிழாம் செந்தமிழ் மீதும், செந்தமிழ் கடவுள் முருகவேள் மீதும் நீங்காத பற்றுக்கொண்டவர். அவரின் அருமருந்தனைய பக்தி மிகுதியால் அவர் பக்திச் சுவை மிகுந்த திருமுருகாற்றுப்படையினை இவ்வுலகிற்கு ஆக்கித் தந்துள்ளார். இது திருமுருகனுடைய திரு உள்ளம் நிரம்பிய நோக்கம். ஆகையால்த்தான் நக்கீரர் செய்த ஆற்றோரம் நடந்த சிவபூசை அங்கு நடந்ததொரு அதிசயச் செயலால் பிழைத்தது. இதற்கு முன்பு சிவபூசையில் பிழைத்த 999 பேரும் அவர்களோடு சிவபூசையில் பிழைத்தவராக நக்கீரரும் பூதத்தால் மரண எல்லையில் சேர்த்துக் கொள்ளப்பட எல்லோருமாக அழுது புலம்பும்போது திருமுருகனின் நேரடித் தரிசனமும், உள்ளத்தில் ஊற்றெடுத்த அருள் உணர்வாலும் முருகனின் ஞான நோக்காலும் திருமுருகாற்றுப்படையும் பிறந்தது. ஆறுபடை வீட்டின் திருவருள் கோலத்தையும், அந்த குறிஞ்சிப் பேரழகையும், ஐவகை நிலங்களின் அழகு எழிலையும் முருகன் அமர்ந்து அருள் சுரக்கும் திருவடிவையும் ஓரளவாவுதல் இக்கட்டுரைக்குள் காண்போம் வாருங்கள்.

ஆறுபடை வீடுகொண்ட திருமுருகன் ஐவகை நிலங்களிலும் கோயில் கொண்டு அருளாட்சி செய்வதே ஆறுபடை வீடாக அமைந்துள்ளது. ஆறுபடை வீடுகளில் தங்கியுள்ள திருமுருகனை அருள் சுரந்து இன்னருள் பெறவேண்டி ஆற்றுப்படுத்துகின்றார் திருமுருகாற்றுப் படை தந்த நக்கீரர். அப்படி ஆற்றுப்படுத்தும் திருமுருக வழிபாட்டால் நினைத்தது கைகூடும் என உறுதியாகக் கூறுகின்றார். எனவே முருகனை எண்ணி தெளிந்த உள்ளத்தோடு உயர்ந்த பேறு பெற்றவர் பெரும் புலவர் நக்கீரர் என்பது அவர் தந்த திருமுருகாற்றுப் படையினாலேயே தெளிவாக விளங்குகின்றது.

இந்தச் சங்கச் சான்றோன், செந்தமிழ்த் தெய்வப்புலவர், பழந்தமிழ் நுண்ணிய பேரறிவாளன் "முருகு" என்னும் சொல்லில் பொதிந்துள்ள பொருளைப் பாடிப் பாடி மாந்து, மோந்து, மோந்து அருள் வெள்ளத்தில் மூழ்கி அனுபவித்தார். முருகு என்பது பண்புப் பெயர். இதனைச் சிறப்புறத் தந்துள்ளார் 317 அடிகளிலே, முருகு என்றால் கடவுள் தன்மை என்பதாகும். அதனிலும் மேலாக இளமை, மணம், அழகு, அருள் என்னும் பொருள் நிலையினைக் கண்டார். அதனுள் பொதிந்து கிடக்கும் நுட்பமான பொருள் கந்தழி என்னும் கட்டற்ற ஒன்று. அதுவே என்றுமுள்ள "இறைமை" என்னும் செம்பொருளாகும். இந்த இறைமை என்னும் செம்பொருளை, இயற்கை இன்பமாகக் கண்டு கண்டு தலை வணங்கித் தொழுதோரெல்லாம் இறைவனை நாட்டிலும், காட்டிலும், மலையிலும், கடலிலும், பாலைவனத்திலும் வைத்துப் போற்றினார்.

இதனை,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

என்று தொல்காப்பியர் எடுத்துக் கூறியுள்ளார். சேயோன் என்பது முருகன். மகன் வழித் தந்தையைக் காணுமாப்போல் "திருமுருகனே சிவபெருமான்"

**செழுமை சில நண்பர்களையும் அநேக எதிரிகளையும் உண்டாக்குகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை திருமணத்தோடும், திருமுருகனின் மங்கலக் கோலத்தோடும் திருமுருகாற்றுப்படையைத் தொடங்கி பழமுதிர்ச்சோலையின் இயற்கை வளத்தை மிக, மிக அழகொழுக எடுத்துக் காட்டுகிறார் திருமுருகாற்றுப்படையினிலே,

"இழிமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைக்கிழவோனே"

| | | | |
|---|---|---|---|
| 1. | திருப்பரங்குன்றம் | (குறிஞ்சி) | 67- 77 |
| 2. | திருச்சீரலைவாய் | (நெய்தல்) | 78- 125 |
| 3. | திருவாவிநன்குடி (பழநி) | (முல்லை) | 126-176) |
| 4. | திருவேரகம் (சுவாமிமலை) | (மருதம்) | 177-189 |
| 5. | குன்றுதோறாடல் | (பாலைநில மலையும் அடங்கும்) | 190-217 |
| 6. | பழமுதிர்ச்சோலை | (குறிஞ்சி) | 218-317 |

இங்ஙனம் வைப்பு முறையாகக் கொண்டு புலவர்கள் பாடுகின்றார்கள். எனவே திருமுருகாற்றுப்படை குறிஞ்சியில் தொடங்கி குறிஞ்சியில் முடிகின்றது. இது பதினோராம் திருமுறையில் சிறப்புடன் விளங்குகின்றது யாவரும் அறிந்ததே.

நக்கீரர் பெரும் புலவர். இவர் மதுரைக் கணக்காயரின் (கணக்காயர்- ஆசிரியர்) மகனாவார். இவர் சிவனுடன் சொற்போர் நடாத்தி செந்தமிழின் மீதுள்ள ஆராத பற்றினால் "நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே" என்று குற்றத்தைத் தயங்காமல், மயங்காமல் எடுத்துக் காட்டிப் போராடினார். இது தமிழ் மீதுள்ள குறையாப் பற்றினால்த்தான் என்பது தமிழ் உலகம் கண்டறிந்து அனுபவித்தறிந்த உண்மையாகும்.

இமைய மலைக்குச் சமீபமாக உள்ள பெருங் காட்டினுள் வழி போகும்போது ஒரு தடாகத்தைக் கண்டார். அங்கு நீராடி சிவபூசை செய்யும்போது நடந்ததொரு ஆச்சரியமான ஒரு காரியத்தால் அவரது சிவபூசை பிழைத்தது. இந்த சிவபூசைப் பிழையினாலேயே பூதத்தால் குகையில் அடைக்கப்பட்டார்.

இவரைக் குகையிலடைப்பதற்கு முன்பு சிவபூசை பிழைத்த 999பேர் மலைக்குகையில் முன்னமே அடைபட்டிருந்தனர். அவர்கள் எல்லோரும் சேர்ந்து நக்கீரரைப் பார்த்து உம்முடன் (1000) ஆயிரவரானோம். இன்று நாம் (1000) ஆயிரவரானவுடன் பூதம் எம்மைச் சாப்பிடும். பூதம் நீராடப் போய்விட்டது. எமது வாழ்வு இன்றுடன் முடிந்தது என அழுது புலம்பினார்கள். ஆகையால் நக்கீரர் மனதிலே திருமுருகன் தோன்றினான். மனமுருகியது; நாசுரந்து திருமுரு காற்றுப் படை நக்கீரர் நாவிலே அருள்நலம் சிறக்க எழுந்தது. திரு முருகாற்றுப் படையினை முழுவதும் உள்ளம் உருக பாடிமுடிக்கவே அவர் முன் நிலையில் முருகன் நேரே தோன்றி ஆயிரம் பேரின் ஆபத்தையும் நீக்கி இந்தத் திருமுருகாற்றுப்படையை அன்புடன் ஓதுபவர்கள் அடையும் பேறினையும் விளக்கி அருளினார். திருமுருகாற்றுப்படையின் சிறப்பால் ஆயிரம் பேரும் அருள் பெற்றனர்.



**மறைந்திருக்கும் சாமர்த்தியம் கீர்த்தியைக் கொண்டு வருவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த திருமுருகாற்றுப்படையை அருளிய நக்கீர தேவனாரும் சிறப்பான அருள்பெற்ற ஏனைய 999 பேரையும் விடுதலைபெறச் செய்து உயிராபத்தை நீக்கி திருமுருகவேளின் தரிசனமும் மலைக்குகையுள்ளே அனைவரும் பெற்றனர். மலைக்குகையில் அடைபட்டு முருகவேளின் அருள்பெற "மனக்குகைக்குள்" முருகப் பெருமானைக் கண்டனர். "குகா" என்றால் மனக்குகைக்குள் உறைபவனே என்பதாகும். முருகன் குகன் என்ற பேருண்மை அங்கே அவர்கட்கெல்லாம் பிறந்தது.

ஆடலையும், பாடலையும் இசைக்கருவிகளின் கையாட்சியினையும் அவாவி நிற்கும் இன்றைய இளம் தலைமுறையினர் அவர் கையாளும் இந்த வழியிலாவது வழிபாட்டில் இணைய வேண்டும். வழிபாடு என்னும் பக்குவம் இளைய தலைமுறையினருக்கும் வர வேண்டும். நக்கீரர் பாடிய நெடும்பாட்டு, பத்துப்பாட்டு புலவராற்றுப்படை என்று வராமல் "திருமுருகாற்றுப்படை" என்றே போற்றப்படுகின்றது. ஆற்றுப்படுத்தல்.... என்பதே திருமுருகாற்றுப்படை" என்பதாகும். அல்லல்படும் உயிரையும் உள் உறையும் முருகன் 6 முகம் கொண்டவன். ஆறு திருமுகம் கொண்டவனின் அந்தத் திருமுகங்களின் மாண்பினைத் திருமுருகாற்றுப்படை நன்கு விளக்குகின்றது. (தொடரும்...

## கோகுல வாழ்வு வேண்டுமையா

கடவுள் ஒருவன் உள்ளான்
கருணையுடன் காப்பான் அவன்
கண்கண்ட தெய்வம் அவன்
கந்தனே எங்கள் தெய்வம்

காடுமலை ஆறுகுளம் அருவிமுதல்
காணுமிடமெல்லாம் உந்தன் வண்ணம்
காட்சியின்பம் தோன்றுதையா
காத்திடவாருமையா முருகா

கிளியாய் உருமாறி நின் அன்பன்
கிள்ளை மொழி ப்திகம் பாட
கிலியெல்லாம் தீர்த்த கந்தா
கிழிந்த எம் வாழ்வு சிறக்கவாருமையா

கீச்சிடும் பறவைகள் வானில்
கீரவாணி இசைத்திடும் நாளும்
கீர்த்தி பெற்று நாம்வாழ
கீர்த்தனைகள் பாடிடுவோம்

குன்றெல்லாம் குடியிருப்பவனே
குமரா என்றழைத்தால் எம்
குற்றங்கள் பொறுத்து நீ
குறை தீர்க்க வாருமையா

கூப்பிட்ட குரலுக்கு யாருமில்லை
கூவி அழைத்திட வேறு பெயருமில்லை
கூடி வாழ்ந்திட வேண்டுமையா
கூவி அழைக்கின்றோம் வாருமையா

கேட்பார் யாருமின்றி
கேளிக்கையான எம் வாழ்வு
கேட்கின்றோம் உன்னடியார்
கேடில்லா வாழ்வு வேண்டும்

கைகொடுப்பாய் நீ என்று
கை கூப்பி தொழுகின்றோம்
கைவிடமாட்டாய் என்று பன்னிரு
கைகளை நம்பி வந்தோம்

கொக்கரக்கோ சேவல் கொடி
கொண்ட வடிவேலழகா
கொக்கரித்து கூறும் சேதி
கொள்ளை இன்பம் தருகுதையா

கோடி கொடுத்தாலும் காணாத உன்னழகை
கோயிலில் கண்டேன் ஐயா
கோமகனே சரவணனே
கோகுல வாழ்வு வேண்டுமையா

-திரு த. வாகீசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகள்

– திரு இ. சாந்தன் அவர்கள் –

பத்தினி, பத்தர்கள், தத்துவஞானிகளால் ஒரு நாட்டுக்குச் சுபீட்சமேற்படுகிறது என்பது திருமூலநாயனார் திருவாக்கு. நமது கண்முன்னே சீவன் முத்தராக விளங்கியவர் யோகர்சுவாமிகள். அவர்கள் இறைபதமடைந்து ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் அவர்கள் எம்மத்தியில் விதைத்து விட்டுச் சென்ற ஞான வித்துக்கள் நன்றாக முளைகொண்டு பூத்துக் காய்த்துக் கனிந்து நற்பயன் தருவதை நம்மால் உணரமுடிகின்றது. ஞான ஒளிவீசும் திருமுகம், கருணை, அலை எறிந்தொழுகும் கண்கள், பஞ்சென நரைத்துத் தொங்கும் தாடி, பாலென வெழுத்துக் கோதி முடியப்பெற்ற நரைமுடி, தூய வெள்ளை வேட்டி இத்தனையும் நிறைந்த ஞானகிரியாக விளங்கியவர் யோகர் சுவாமிகள்.

"கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்"

என்பர் மாணிக்கவாசகப் பெருமான். சுவாமிகள் திருமுன்னிலையில் பக்தர்களின் ஈடுபாட்டுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இவர்கள் ஒரு நடமாடுந் தெய்வம். தியானத்திலும், மௌனத்திலும், அறிவுரை பகர்தலிலும் நற்சிந்தனை படித்தலிலும் பொழுது கழித்த வண்ணம் இருந்தது. அத்துடன் தம்மைத் தரிசிக்க வருவோரின் ஐயங்களைத் தாமாகவே உணர்ந்து தீர்த்து வைப்பதும் சுவாமிகளின் கடமையாக இருந்தது. மகாமந்திரங்கள் போன்று அவர்களுடைய திருவாயினின்றும் வரும் வாக்கியங்கள் பேருண்மைகளை உணர்த்துவன. "சும்மா இரு", எப்பவோ முடிந்த காரியம்"? யாமறியோம்", "ஒரு பொல்லாப்பும் இல்லை", "முழுவதும் உண்மை" என்று அடிக்கடி கூறுவார். தமது குருவினிடத்துத் தான் பெற்ற அனுபவத்தைத் தனது சிஷ்யர்களுக்குப் பகிர்ந்து வழங்குவார்.

இவர்களிடம் தரிசனம் பெறச் சென்றவர்கள் அனலிலே காய்ச்சப்பெற்ற பொன்போலப் புத்தொளிபெற்றே வீட்டுக்குத் திரும்புவர். மனிதனின் எண்ணங்களை ஊடுருவி அறிவதில் இவர் பேராற்றல் படைத்தவர். எத்தனையோ சித்துக்கள் கைவரப் பெற்றவராக இருந்தபோதிலும், அவற்றையெல்லாம் வெளிக்காட்டவில்லை.

ஒவ்வொருவருடைய வாழ்விலும் சுவாமிகள் ஒளியூட்டி பிரகாசித்தார். நோய்நொடிகளுக்கெல்லாம் ஏற்ற மருந்து சொல்லிக் கொடுப்பார். வைத்தியர்களால் மாற்ற முடியாத கொடிய வியாதிகளெல்லாம் இவர் மாற்றியுள்ளார். உடல் நோய், உளநோய், உயிர்நோய் யாவையும் மாற்றிவிடும் பெரு வைத்தியர் இவர்.

தன்னை ஆட்கொண்ட குருமூர்த்தியின் கருணைத் திறத்தைக் காட்டிய இடத்தில் "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியன்" எனப் பாடினார் மணிவாசகப் பெருமான். ஆனால் நாம் கண்ட குருநாதரோ இரும்பு தரும் நெஞ்சங்களையும், பதவிமோகம் பிடித்த பேர்வழிகளையும் செல்வச் செருக்குக் கொண்ட சீமான்களையும் திசை திருப்பித் திருவருள் வழியில் வாழ வைத்தவர். இந்தப் பேறு பெற்ற ஒரு திருக்கூட்டமே இன்று நம்மத்தியில் புனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"வாழ்க சிவனடி வாழ்க சிவனடி
வாழ்க சிவதொண்டன்"

**தன்னையே தேடும் முடிவில்லாத போக்கே வாழ்க்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்





2014 தைமாத ஞானச்சுடர் வெளியீட்டுரையும் மதிப்பீட்டுரையும்...





துன்பம் வந்தபோதும் பொறுத்துக்கொள்ளும் வலிமையே தூய்மை நிரம்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தைமாத ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றவர்களிற் சிலர்...



கோபத்தில் செயல்படுவது புயலில் கப்பலைச் செலுத்துவதற்குச் சமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தைமாத ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றவர்களிற் சிலர்...




ஒன்றும் இல்லாதவன் ஏழையல்ல, அளவுக்கு அதிகமாக ஆசைப்படுபவனே ஏழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் சமூகசேவைப் பணிகள் சில...



உண்மை எப்போதும் கற்பனையைவிட அதிசயமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

(தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

## ஸ்நானம்

247. ஸ்நானஞ் செய்யத் தக்க நீர்நிலைகள் யாவை?

நதி, நதிசங்கமம், ஓடை, குளம், கேணி, மடு முதலியவைகளாம். நதிசங்கமமாவது இரண்டு ஆறுகள் கூடும் இடமாம்; ஆறுங் கடலுங் கூடிய இடம் எனினும் அமையும்.

248. ஸ்நானஞ் செய்யுமுன் யாது செய்தல் வேண்டும்?

கௌபீனத்தைக் கசக்கிப் பிழிந்து, தரித்து, இரண்டு கைகளையும் கழுவி, வஸ்திரங்களைத் தோய்த்து, அலம்பித் தரித்து, உடம்பைச் சலத்தினாலே கழுவிச், செவ்வையாகத் தேய்த்துக் கொள்ளல் வேண்டும்.

249. ஸ்நானம் எப்படிச் செய்தல் வேண்டும்?

ஆசமனம் பண்ணிச் சகளீகரணஞ் செய்து, கொப்பூழளவினதாகிய சலத்தில் இறங்கி, நதியிலேயாயின் அதற்கு எதிர்முகமாக நின்றும், குள முதலியவைகளில் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் நின்றும், இரண்டு காதுகளையும், இரண்டு பெருவிரல்களினாலும், இரண்டு கண்களையும், இரண்டு சுட்டுவிரல்களினாலும், இரண்டு நாசிகளையும் இரண்டு நடுவிரல்களினாலும் மூடிக்கொண்டு, சிவபெருமானைச் சிந்தித்து ஸ்நானஞ் செய்தல் வேண்டும். இப்படி மூடுவது ஷண்முகி முத்திரை எனப் பெயர்பெறும்.

250. இப்படி ஸ்நானஞ் செய்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

ஆசமனம் செய்துகொண்டு, கரையிலேறி, வஸ்திரங்களைப் பிழிந்து, தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினாலே தலையிலுள்ள ஈரத்தைத் துவட்டி, உடனே நெற்றியில் விபூதி தரித்து, உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டி, குடுமியை முடித்து, ஈரக் கௌபீனத்தைக் களைந்து, உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து, இரண்டு கைகளையுங் கழுவிச் சுத்தமாய்க் கிழியாதனவாய் வெள்ளியனவாய் உலர்ந்தனவாய் உள்ள இரண்டு வஸ்திரம் தரித்துக்கொண்டு, ஈர வஸ்திரங்களையும் கௌபீனத்தையும் உலரும்படி கொடியிலே போடல் வேண்டும். ஒரு கொடியிலே தானே தோய்த்த வஸ்திரமும் தோயாத வஸ்திரமும் போடுதலும் ஆகாவாம். நக்கினனாயேனும், கௌபீன மாத்திரமுடையனாயும், ஒரு வஸ்திரம் தரித்துக் கொண்டேனும், யாதொரு கருமமுஞ் செய்யலாகாது. (நக்கினம்- நக்கம்- அம்மணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

251. குளிர்ந்த சலத்திலே ஸ்நானம் செய்ய மாட்டாத பிணியாளர் யாது செய்தல் வேண்டும்?

ஸ்நானம் செய்தவர் சுத்திசெய்யப்பட்ட பாத்திரத்தில் வைத்த வெந்நீரை ஒரு பாத்திரத்தில் விடவிட, அவர் எடுத்து ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினால் ஈரத்தைத் துவட்டி, உலர்ந்த வஸ்திரம் தரித்துப் பதினொரு மந்திரத்தை ஒருதரம் செபித்துக்கொண்டு, சந்தியாவந்தனம் முதலியன செய்யலாம்.

252. வியாதியினாலே ஸ்நானம் செய்யமாட்டாதவர் யாது செய்தல் வேண்டும்?

கழுத்தின்கீழ், அரையின்கீழ், கால் என்னும் இவைகளுள் ஒன்றை இயன்றபடி சலத்தினாலே கழுவிக்கொண்டு கழுவாமல் எஞ்சிய உடம்பை ஈரவஸ்திரத்தினால் ஈரம் படும்படி துடைத்து, அவ்வீரத்தைத் துவட்டித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துப் பதினொரு மந்திரத்தை ஒருதரஞ் செபித்துக்கொண்டு, சந்தியாவந்தனம் முதலியன செய்யலாம். இந்த ஸ்நானம் காபில ஸ்நானம் எனப் பெயர் பெறும்.

253. இராத்திரி ஸ்நானஞ் செய்யலாமா?

யாகம், சந்திரகிரகணம், சிவராத்திரி, மாசப்பிறப்பு, மகப்பேறு என்பவைகளில் மாத்திரம் இராத்திரி ஸ்நானம் செய்யலாம்.

254. நியமகாலத்திலன்றி, இன்னும் எவ்வெப்பொழுது ஸ்நானஞ் செய்வது அவசியமாகும்?

சண்டாளருடைய நிழல் படினும், புறச்சமயிகளும், வியாதியாளரும், சனன மரணா சௌசமுடையவரும், நாய், கழுதை, பன்றி, கழுகு, கோழி முதலியவை தீண்டினும், எலும்பு, சீலை முதலியவற்றை மிதித்தாலும், க்ஷௌரஞ் செய்து கொள்ளினும், சுற்றத்தார் இறக்கக் கேட்கினும், துர் சொப்பனங் காணினும் பிணப்புகை படினும், சுடுகாட்டிற் போகினும், சர்த்தி செய்யினும் உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானஞ் செய்வது அவசியம். (சர்த்தி- வாந்தி)

255. தீண்டலினாலே எவ்வெப்பொழுது குற்றமில்லை?

சிவதரிசனத்திலும், திருவிழாவிலும், யாகத்திலும், விவாகத்திலும், தீர்த்த யாத்திரையிலும், வீடு அக்கினி பற்றி எரியுங் காலத்திலும், தேச கலகத்திலும், சன நெருக்கத் தீண்டலினாலே குற்றமில்லை.

256. ஸ்நானம் சரீர சுத்திக்கு மாத்திரம்தான் காரணமா?

சரீர சுத்திக்கு மாத்திரமன்றிச் சரீராரோக்கியத்துக்கும், சித்த சோபனத்துக்கும், ஒருப்பாட்டுக்கும், இந்திரிய அடக்கத்துக்கும், யோக்கியத்துக்கும் காரணமாகும். விடியற்கால ஸ்நானத்தினாலே பசி உண்டாகும்; நோய் அணுகாது.

(தொடரும்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம் எமது சுய புராணமே

– திரு V.R. சரவணபவன் அவர்கள் –

மாணிக்கவாசகப் பெருமானின் அற்புதமான படைப்பு சிவபுராணம். சிவபெருமானின் அழகு, சக்தி, கருணை எல்லாவற்றையும் தமது வரிகளிலே மிக அழகாக வர்ணிக்கிறார். இந்த வர்ணனைகள் ஊடாக ஒரு முக்கியமான செய்தியையும் எமக்குத் தருகின்றார்.



சிவபுராணம் என்னும்போது சிவனுடைய புராணம் என நாம் கருதிக்கொள்கிறோம். ஆனால் சிவனுக்குப் புராணம் எழுத முடியுமா? "ஆதியும் அந்தமுமிலா அரும்பெரும் ஜோதி" என்று திருவெம்பாவையில் கூறிவிட்டு, ஆதியும் அந்தமுமில்லாப் பொருளுக்கு புராணம் எப்படி அமைக்க முடியும்? எம் ஒவ்வொருவருள்ளும் இறைவன் குடிகொண்டுள்ளான். ஆகவே எமக்குள்ளாக இருக்கும் சிவனை வர்ணித்து அந்தச் சிவனுடைய புராணத்தைத் தந்துள்ளார். "பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்" என்று சிவனை வேறாக வைத்துப் பாடுவதன்மூலம் இது எமக்குள் இருக்கும் சிவனது புராணமே என உணரலாம். இப்படி பொருள் உணரும்போது எமது வாழ்க்கையின் குறிக்கோளையும் உணர்ந்து கொள்ளலாம். சிவனைப்பற்றிய வர்ணனைகளூடாக அவர் சொல்லவந்த செய்தியும் அதுதான்.

"புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகி பல்விருகமாகி பறவையாய் பாம்பாகி கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய் வல்லசுரர் ஆகி முனிவராய் தேவராய் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" இது எங்கள் ஒவ்வொருவரினதும் கடந்த காலம். மீண்டும் மீண்டும் பிறந்து களைத்து விட்டோம்.

இனி தற்போதைய நிகழ்காலத்தைப் பார்ப்போம். "மறைந்திருந்தாய் எம் பெருமான் வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை அறம்பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி புறந்தோல் போர்த்து, எங்கும் புழு அழுக்கு மூடி, மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை, மலங்கப் புலனைந்தும் வஞ்சனையை செய்ய விலங்கு மனத்தால் விமலா உனக்கு கலந்த அன்பாகி கசிந்து உள்ளுருகும் நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி" எமது உடம்பின் தற்போதைய நிலையைக் கூறுகிறார்.

மறைந்திருந்தாய் எம்பெருமான். எமது உடம்புக்குள்ளே நீ மறைந்து இருந்து கொண்டு கடந்த காலத்தில் எத்தனையோ பிறவிகளில் நாம் செய்த "அறம், பாவம்" என்ற இரண்டையும், தோல் என்ற பையுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு அதற்குள் புழு அழுக்கையும் போட்டுக் கட்டியுள்ளாய். பிணம் சில நாட்களுக்கு வைத்திருந்தால் இந்தப் புழுக்கள் வெளிப்படும் என நாம் கண்டிருக்கிறோம். இந்த தோற்பையிற்கு ஒன்பது வாசல். கண் துவாரம் இரண்டு, காது துவாரம் இரண்டு, மூக்கு துவாரம் இரண்டு, வாய் துவாரம் ஒன்று, மல, சல உறுப்புத்துவாரங்கள் இரண்டு. மொத்தம் ஒன்பது துவாரங்கள். இவற்றினூடாக வெளிவரும் அழுக்குகளை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள். (மலம் சோரும் ஒன்பது வாயில்) ஐந்து புலன்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி இவை ஞானேந்திரியங்கள் என்று கூறிக்கொண்டு எம்மை வஞ்சித்துக் கொண்டே இருக்கின்றன. இந்த ஐந்து உறுப்புகளும் எமக்கு ஆனந்தத்தைத் தருவதாக ஏமாற்றி தமக்குப் பின்னால் வரத்தூண்டும். கண்கள் "நல்ல சினிமாப் படங்கள்தான் மகிழ்ச்சி தரும் வா" என அழைக்கும். சில மணிநேரத்தில் களைப் படைந்து தூங்கிவிடும்; வாய், "நல்ல சுவையான உணவுதான் மகிழ்ச்சியைத் தரும்" தேன் இனிப்பாக இருந்தாலும் ஒரு டம்ளர் தேன் குடிக்க முடியுமா? தெவிட்டிவிடும். இப்படியே ஒவ்வொருவரும் எமக்கு ஆனந்தத்தை தருவதாகக் கூறி எம்மைத் தங்களுக்குப் பின்னால் அழைத்துச் சென்றுவிட்டு ஏமாற்றி வஞ்சனையைச் செய்து விடுவார்கள். இந்த 5பேருக்கும் மனம் என்பவர்தான் தலைவர். அது "விலங்கு மனம்" தான் நினைத்ததை புலன்கள் வழியாக அனுபவித்து எம்மை இறைவனிடமிருந்து பிரித்துவைத்துவிடும். புலன்கள் இரவில் உறங்கினாலும் தானே கனவு நிலையில் வெளியே சென்று தனக்கு இஷ்டப்பட்ட எல்லாவற்றையும் அனுபவித்து விட்டு திரும்பிவரும். இதுதான் நாம் தினசரி காணும் "கனவுநிலை" அது மிருகம்போல எம்முடன் நடந்து கொள்கிறது. இதுதான் எம்முடைய உடம்பின் நிலை. இதற்குள்ளே தான் இறைவன் சிறை வைக்கப்பட்டுள்ளான். இந்த நிலையில் இருந்துகொண்டு "கலந்த அன்பாகக் கசிந்து (உன்னை நினைத்து) உள்ளுருகும் நலம்தான் இல்லையே!" என்று எமது உடல் அமைப்பு இந்திரியங்கள், மனம் இவற்றின் தன்மையை எமக்கு ஞாபகமூட்டுகிறார். இந்த நிலையில் இருந்து நான் எப்படி வணங்குவேன்? என்று ஆதங்கப்படுகிறார். இது எம் ஒவ்வொருவரினதும் நிலை என்பதை ஞாபகத்தில் இருத்திக் கொள்ளுங்கள்.

கடைசியாக எமது எதிர்கால இலட்சியம் எதுவாக இருக்கவேண்டுமென்பதை மாணிக்கவாசக சுவாமிகள் சுட்டிக்காட்டுகிறார். "வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று போற்றி புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானால் மீட்டிங்குவந்து வினைப் பிறவி சாராமே கள்ளப் புலைக் குடம்பைக் கட்டளிக்க வல்லானே!" என்று மீண்டும் இந்தப் பூமியில் பிறந்து வாழ்க்கையை நடாத்த வைக்காமல் உடம்பு எடுக்காமல் இருக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்து, அடுத்து "அல்லல் பிறவி அறுப்பானே! ஓ என்று" இறைவனிடம் மீண்டும் பிறவாத வண்ணம் இருக்க வேண்டுகிறார்.

இவ்வாறாக எமது முற்பிறப்பு, எமது தற்போதைய அருவருப்பான நிலையைக் கூறி மீண்டும் நாம் இங்குவந்து பிறக்கக்கூடாது என்ற போதனையை மணிவாசகப் பெருமான் சிவபுராணம்மூலம் எமக்குப் போதிக்கிறார். இக்கருத்தை உணரவேண்டுமென்றே கடைசி வரியில் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்து உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப்பணிந்து" என்று நிறைவு செய்கிறார். ஆகவே, நாங்கள் சிவபுராணத்தை வெறுமனே பாராயணம் செய்வதோடு நில்லாது அதன் உட்பொருளை உணர்ந்து எமது ஆத்ம விடுதலைக்காக முயற்சிப்போமாக.

**நனையச் செய்த கடவுளே காய வைக்கவும் செய்வார்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள் –

உகந்தை மலையானை நோக்கிய எமது பயணம் சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் ஆரம்பமானதால் வீடுகளற்ற எங்கும் ஒரே வயல் கொண்ட பெரும் பிரதேசத்தினூடாக ஜில்லென்ற தென்றல் தவழத் தொடர்ந்து கொண்டிருந்தது. நாம் சென்ற வேளை அறுவடைக் காலமாக இருந்தமையால் சில வயல்களில் அறுவடை முடிந்திருந்தது. சில வயல்களில் அறுவடை நடந்துகொண்டிருந்தது. பல வயல்கள் நன்கு முற்றிப் பழுத்த கனதியான கதிர்களைக் கொண்டு ஒரே மஞ்சள் நிறக் கம்பளம் விரித்தாற்போன்று அழகாகக் காட்சி தந்தது. எம்மூரில் பட்டிக்கணக்கிலும் பரப்புக் கணக்கிலும் காணிகளை வயல்களைக் கொண்டு நாம்தாம் பெரும் நிலச் சுவாந்தர்கள் என இறுமாப்புறும் எம்மவர் எங்கே 100, 200 ஏக்கர்களை வசமாக்கி பெரும் வயல்செய்து எம்மவர்க்கு ஈயும் அந்த நிலச் சுவாந்தர்களின் மாண்பு எங்கே என ஒரு கணம் நினைக்கத் தோன்றியது. முழு ஈழமணித் திருநாட்டிற்கும் அரிசி வழங்கக் கூடிய வயல்களைக் கடந்து செல்கிறோம் என்ற நினைப்பு எம்போன்றவர்களின் மனதில் எண்ண வைத்ததை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். பெரும் இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்து தூற்றி மூட்டைகளாக்கி பெரும் வாகனங்களில் ஏற்றி கிராமத்திற்கும், நகரத்திற்கும் அனுப்பிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டோம்.



இப்படியான வயலின் அருகில் ஓர் சிறு தேனீர்க் கடை. அதில் எமது வாகனம் நின்றது. அனைவருக்கும் ஏற்கனவே தயாராக வைத்திருந்த பிஸ்கற் பெட்டிகள் வழங்கப்பட்டன. அந்தி மாலைக்கருக்கலில் மருத நிலச் சூழலில் மந்தமாருதம் வீச மாலை 6.15 மணியளவில் தேனீர்க் கடையில் பெறப்பட்ட தேனீருடன் தாகசாந்தி செய்து சற்று இளைப்பாறினோம். நெல்லடித்த படங்கே எங்கள் தரைவிரிப்பாக இருந்தது. பின் தொடர்ந்த பயணம் அடர்ந்த வனப்பகுதியூடாகச் சென்று இரவு 7.20 மணிக்கு உகந்தை மலையின் உறைவிடத்தை அடைந்தோம். அங்கு ஓர் இராணுவ முகாம் அருகில் இருந்தது. யாத்திரிகர் மடத்தில் கிணறுகள், மின்சார வசதி, மலசலகூடங்கள் என்பன நேர்த்தியாக நிறைவான ஒழுங்குடன் அமைந்திருந்தன.

அங்கு எம்மை வரவேற்ற முருகன் அடியவர்களை அவர்களின் தோற்றத்தை, அவர்களின் உரையாடல்களை எழுதுவதற்கே தனித் தொடர் தேவை. ஆம். சிறியோரும் பெரியோருமாக, தோற்றத்தில், பேச்சில், உபசரிப்பில் அவர்கள் ஓர் தனித்துவம் பெற்ற மனிதர்களாக இருந்தார்கள். அத்தனைபேரும் நாங்கள் வாகனத்தில் வந்த கிராமம்,

**கெட்ட பெயரெடுத்த ஒரு மனிதன் ஏற்கனவே பாதித் தூக்கிலிருக்கிறான்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரம், பட்டினங்கள், வயல், கல், முள், மலை தாண்டி தலைச்சுமையுடன் கதிரமலை யானைக் காணவேண்டும் என்ற ஒரே கருத்துடன் பொடி நடையாக வந்த பக்தர்கள் என நினைக்க.... முருகனின் திருவருளின் திறம் தெரிகிறது. தளர்ந்த ஔவைப்பாட்டி போன்ற தோற்றம், வெண்தாடி தாங்கிய வயோதிபர் கூட்டம், இளம்பெண்கள், குழந்தைகளைத் தம் உறவினருடனும் தம் பெற்றோருடனும் விட்டு வந்து நடந்து செல்லும் இளம் தம்பதியர் அப்பப்பா என்னே முருகன் மீது இவர்கள் வைத்திருக்கும் வாஞ்சை.

இம்முருகனின் மலைச்சூழல் இரவில் எமக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனாலும் மரங்களடர்ந்த ஓர் மலைப் பிரதேசத்தில் இருக்கிறோம் என்ற வகையில் மின் விளக்குகள் அதன் எல்லைக்குள் பிரகாசித்து உணர்த்தின. அதேவேளை யானைகளின் பயம் உண்டு என்ற எச்சரிக்கை வேறு. இது விலங்குகளின் யால சரணாலயப் பகுதி என்பதையும் மிருகங்களை வேட்டையாடுவதோ வதைப்பதோ முற்றாகத் தடைசெய்யப்பட்ட பிரதேசம் என்பதையும் அறியமுடிந்தது. நாம் அனைவரும் கிணறுகளில் கைகால்கள் அலம்பி சுத்தம் செய்து ஆயாசம் தீர்த்து முருகனை வழிபட்டுக் கொண்டிருக்கும் வேளை ஓர் அடியவர் சாமிமார்கள் வாருங்கோ சாப்பாடு தயார் என்ற அழைப்புடன் வந்தார்.

தெரிந்த குரல் மிகவும் பழக்கப்பட்ட குரல் பார்த்தேன். பார்த்தார். சேர் நீங்களும் வந்திருக்கிறீர்களா? சற்று உற்றுப் பார்த்தேன். மொட்டைத் தலை நரைத்த சிறு மயிர்கள் சவரஞ் செய்யப்படாத முகம், காவிவேட்டி, இடையில் ஒரு சால்வை, கழுத்தில் பெரிய உருத்திராட்ச மாலை மெலிந்த உடல். இத்தோற்றத்தில் இவரா என என்னால் முதலில் மட்டுக்கட்ட முடியவில்லை. எழுத நெஞ்சு கனக்கின்றது. கண்கள் பனிக்கின்றன. தம்பி இங்கே இந்த நேரத்தில் நீங்களா. ஓம் சேர். நான் நடந்து இந்தச் சாமிமாருடன் வந்துள்ளேன். இன்னும் காட்டுப் பாதை திறக்கவில்லை. வசந்தி வந்துகொண்டிருக்கிறா என்று சுருக்கமான




கடவுளை நெருங்கிச் செல்வதற்கு மலையேற வேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் கிடைத்தது. இவருடன் கூட வந்தவரைப் பார்த்தேன். அவர் மாத்தளைச் சாமியாம். அவரைப் பார்த்தால் மஞ்சள் வேட்டியுடன் வெள்ளைத் தாடி வளர்த்த முடியுடன் ஸ்ரீவள்ளி நாடகத்தில் வரும் வயோதிப முருகனைப் போலிருந்தார். என்னை அழைத்தவர் கணபதிச் சாமியாராம், மற்றவர் மாத்தளைச் சாமியார்.



கணபதி களஞ்சிய முதலாளி கணபதிச் சாமியார். மாத்தளையின் வாசி மாத்தளைச் சாமி. ஆம் முருகன் யாத்திரையில் அவன் அடியார்கள் அனைவரும் சாமி. என்னையும் சிலர் மாஸ்ரர் சாமி என்றனர். ஆண்டியாய் நின்றவனும் முருகன். அரசனாய் வைப்பவனும் முருகனல்லவா என நினைத்துக் கொண்டேன்.

கணபதிச் சாமியார் கூட்டத்தினருடன் உகந்தைமலை அன்னதான மடம் சென்றோம். அனைவர்க்கும் அமுது படைத்தார்கள். ஆனந்தமாக மாந்தினோம். சாமிமார்கள் அனைவரும் தலைச்சுமையுடன் வந்தவர்கள். எங்களை விழுந்து விழுந்து உபசரித்தார்கள். இரவுச் சாப்பாட்டை முடித்தபின் அவரவர்கள் தங்கள் கூட்டத்தினருடன் நித்திரைக்குப் புறப்பட்டனர். மடத்திலும் கோவிலிலும் மக்கள் மரங்களுக்குக் கீழும் படுத்தனர். எம்போன்றவர்களுக்கு நித்திரை ஏது. முருகனின் உறைவிடத்தையும் அவனை வழிபடும் மக்களின் மனநிலை பதவி, அந்தஸ்து, வாழ்க்கை முறைகளை நினைக்க சற்று மலைப்பாக இருந்தது. ஒவ்வொரு மனிதனிலும் தெய்வம், தெய்வீகம் உள்ளது என்பதனை சிந்தனை உணர்த்தியது. கண்ணயர்ந்து போக சரியாக அதிகாலை 4.00 மணி. சாமி, சேர் என்ற அழைப்பு மீண்டும் அதே குரல் நானும் நண்பர் சிவ. ஆறுமுகசாமியும் மோகன் ஐயாவும் ஒருங்கே படுத்திருந்தோம்.

விழித்தோம். பின்பு எல்லோரும் எழுந்தால் மலசலகூட பிரச்சினை வாருங்கோ காலைக் கடன்களை முடியுங்கோ கையில் ஓர் பிளாஸ்ரிக் வாளி, ரோச்லைற்றுடன் எங்களை கணபதி சாமி அழைத்தார். சென்றோம்; காலைக்கடன்களை முடித்தோம். இங்கே நாங்கள் பார்க்க வேண்டியவை பல இருக்கின்றன. முதலில் வாருங்கள் சுவாமி தரிசனஞ் செய்வோம் என்று உகந்தைமலை முருகனைத் தரிசிக்க வைத்தார். பெரிதாக இல்லை. இந்த அடர்ந்த வனத்தில் முருகனுக்கு இப்பெரு ஆலயம் அமைத்தார்கள் எனத்தான் எண்ண வைத்தது. அடியார் கூட்டம் யாத்திரை காலத்தில் மட்டும் தான் கூடுமாம். அதிலும் பாதயாத்திரையாக வருபவர்கள் மட்டும் கிழக்குக் கரையோரமாக வருபவர்கள் மட்டும் தரிசிக்கக் கூடிய ஓர் ஆலயம் இது என்பதையும் அறிய முடிந்தது. ஏனையோர் வேறு மார்க்கமாகத் கதிரமலையானிடம் செல்லும் வாய்ப்பு உள்ளதாம். வழிபாடு முடித்து சாமி வாருங்கள் இங்கே 11 தீர்த்தக் கிணறுகள் இருக்கின்றன. என்று எம்மை அழைத்தார் கணபதிச்சாமி.

(தொடரும்...

ஏழை மனிதனுக்கு ஒரு நோய், பணக்காரனுக்கு நூறு நோய்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு வழிப் பாடல்கள்

– திருமதி தமிழினி கமல்ராஜ் அவர்கள் –

அன்பான உள்ளங்கள் நாம் இங்கு கூடி
ஆனந்தமாக ஆண்டவனைப் போற்றி
பண்ணோடு பலபல பாடல்கள் பாடி
பரமனின் பாதம் பணிந்திடுவோமே

விடியற் பொழுதில் விரைவாக எழுந்து
வித்தையை விரும்பிக் கற்றிடுவோமே
அன்றைய பொழுது அன்பாகப் புலர
அன்றாடம் ஆண்டவனை மன்றாடுவோமே

காலையில் கதிரவன் எழு முன்னர் எழுந்து
காலைக் கடனைக் கருத்தோடு ஆற்றி
கடிமலர் எடுத்து மாலை தொடுத்து
கடவுளை தினசரி பூசிப்போமே.

அன்னையின் அறிவுரையை அன்பாகக் கேட்போம்
தந்தையின் சொல்லைத் தட்டாமல் நடப்போம்
தம்பி தங்கையோடு தர்க்கங்கள் புரியாது
தரணியில் அன்பாக வாழ்ந்திடுவோம்.

கற்பித்தல் கற்றல் நிகழ்த்துகையிலே
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் நாம்
கல்வியை ஊட்டிடும் அறிவுக் கண் ஆசானை
கடவுளாய்ப் போற்றி மதித்திடுவோமே.

பட்டங்கள் பெற்று பட்டதாரி ஆனாலும்
பண்பில்லையானால் அதில் பயன் இல்லை
அழகுற அனைத்தும் அமைந்திருந்தாலும்
அன்பில்லையானால் அதில் பயனில்லை.

இல்லம் நாடி வரும் இனிய உறவுகளை
இன்முகத்தோடு வரவேற்றிடுவோம்
சந்தோஷமாக சாந்தியைப் பெற்றிட
சத்திய - வார்த்தையை சம்பாஷிப்போமே.

**வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட கடமை இல்லாதவன் ஏழைகளிலெல்லாம் ஏழை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை
அகிம்ஷையை உள்ளத்தில் உதயம் ஆக்கி
அழுக்காறு அவா வெகுளி இன்னா சொல்
இழுக்கான இவற்றை அகற்றிடுவோம்.

பெரியோரின் வார்த்தையைப் பேணி நடந்து
பெற்றோர்க்குப் பெருமையைத் தேடிக் கொடுப்போம்
சாலையில் நின்று சண்டைகள் செய்யாது
சத்சங்கத்தில் சங்கமம் ஆவோம்.

ஆனந்தமாகவே காலையும் மாலையும்
ஆர்வத்தோடு நாங்கள் பஜனைகள் செய்து
ஆன்மாவை ஆனந்தப் பெருவாழ்வு பெறவைக்க
அனுதினம் சாதனை செய்திடுவோம்.

நாள் தோறும் நாங்கள் விட்டதவறென்ன
நம்மைநாம் உயர்த்த நல்ல வழி என்ன
நல்லவராய் நாங்கள் உருவாக
நாள்தோறும் குடும்பமாய் ஆலோசிப்போமே.

தம் மக்கள் விடுகின்ற தவறான பிழைகளை
தந்தை தாயார் அன்பாய்த் திருத்திட வேண்டும்
தப்பான வார்த்தைகளை நாங்கள் கூறாது
தயைவாக எடுத்து இயம்பிட வேண்டும்.

சாந்தி சமாதானம் நம் நாட்டில் நிலவ
சாதி மத பேத சர்ச்சைகள் ஒழிய
அதர்ம வழிகள் அடியோடு சாய
அகிம்சா வழியில் நாம் நடப்போமே.

ஊர்மக்கள் நாமெல்லாம் ஒன்றாய்க் கூடி
உன்னத பாதையில் வழி நடப்போமே
அழியாத வஸ்துவாம் ஆன்மாவை அறிந்து
அன்பான வாழ்வு வாழ்ந்திடுவோமே.

அதிகாலை தொடங்கி அந்தி மாலை வரையும்
ஆற்றுப்படுத்துகின்ற ஆண்டவருக்கு
அநுதினம் நாங்கள் நன்றியை நல்கிட
நாள்தோறும் இரவில் நமஸ்கரிப்போமே.

**உன் பெயர்தான் வியாபார அடையாளம். அதை உன் உயிர்போல் காப்பாற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருட புராணம்

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –



ஸ்ரீமத் நாராயணமூர்த்தியிடம் கருடாழ்வார், "பரந்தாமா! இவ்வுலகில் உயிர்கள் ஏன் பிறக்கின்றனர்? அவர்கள் மரணமடைந்த பின்பு அவர்களில் சிலர் சொர்க்கம் புகுவதும், சிலர் நரகத்திற்கு செல்வதும் எதனால்? ஒருசிலர் மரணத்திற்குப் பிறகு ஆவிரூபமான பிரேத ஜென்மத்தை அடைவது எதனால்? எத்தகைய செயல்களால் பிரேதஜென்மத்தை நீக்கலாம்? எச்செயல்மூலம் முத்தி என்னும் பரமபதத்தை அடையலாம்? மேலும் உயிர்கள் முன்பு செய்த பாவங்களை மரணகாலத்தில் நீக்கிக்கொண்டு நற்பேறு அடையும் வழி என்ன? மரணத்தருவாயில் யாரை நினைத்தால் நற்கதி உண்டாகும் என்பதை விளக்க வேண்டும்" என்று பல்வேறு விளக்கங்களைக் கேட்கிறார்.

இவ்வினாக்களுக்கு மகாவிஷ்ணு உலக நன்மையின்பொருட்டு விளக்கமளிக்கிறார். கருடனைப் பார்த்து பரமாத்மா கூறுகிறார், பறவைகளுக்கு அரசனான கருடனே! நீ கேட்ட கேள்வி சிறந்தவையாகும். உலகில் பிறப்பு என்று ஒன்று இருந்தால் இறப்பு என்று ஒன்று உண்டு. இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. உயிரைக் கவர்ந்து செல்வதற்கு யமதர்மன் ஒருநாள் வருவான் என்று யாரும் நினைப்பதில்லை. அதை உணர்ந்தவன் எவனோ அவன் இந்த உலக வாழ்க்கை நிரந்தரமானதல்ல என்று உணர்ந்து அறச்செயல்களை தவறாது கடைப்பிடிக்க வேண்டும். கரும காரியங்களை எவனொருவன் செய்து வருவானோ அவனை அந்தக் கருமங்களே காப்பாற்றும்.

உலகில் பிறக்கும் மனிதர்களை அவரவரின் தொழில் முறைமைக்கேற்ப நான்கு வகைகளாகக் கூறுவர். அவர்கள் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆவர்.

**நமது அறியாமையை மேலும் மேலும் அறிந்துகொள்வதே கல்வி ஆகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் பிராமணர்கள் சத்வகுணமுடையவர்கள். இவர்கள் வேள்விக்குரிய வேத மந்திரங்களை ஓதுதல், உபதேசித்தல், யாகம் புரிதல், திருமணம் செய்வித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய கருமங்களைப் புரிவர்.

சத்திரியர்கள் ஓதல், வேள்வி செய்தல், ஈதல், உலகைக் காத்தல், படைப்பயிற்றுதல், போர் புரிதல் போன்ற ஆறு கருமங்களைச் செய்வர்.

வைசியர்கள் ஓதல், பொருள் சம்பாதித்தல், ஈதல், உழுதல், பசுக்கன்றுகளைக் காத்தல், வேள்வி புரிதல் போன்ற ஆறு கருமங்களைப் புரிவர். மற்ற மூன்று வகையினருக்கும் உதவுதல்.

சூத்திரர் ஓதல், பொருள் சம்பாதித்தல், உழுதல், பயிர் செய்தல், பசுக்கன்றுகளைக் காத்தல், வேள்வி புரிதல் போன்ற ஆறு கருமங்களைப் புரிவர்.

கடமையிலிருந்து தவறாமல் நடப்பவருக்கு தவம் செய்வதால் கிடைக்கும் பலன்கள் உண்டாகும். கடமையைச் செய்வதே தவமாகும். அதனால் போக இன்பத்தை மட்டுமன்றி யோகமென்னும் உயர் நிலையையும் அடைந்து நீண்டகாலம் வாழ்வர்.

மனிதனுக்கு இயற்கையாகவே ஆசையுண்டு. ஆசைகளை அடக்க வேண்டும். மக்களின் துன்பங்களுக்குக் காரணம் ஆசையாகும். ஆசையானது நம்மைத் தவறு செய்ய வைத்துவிடும். ஆசை அவர் செய்த எத்தகைய தவப்பயனையும் பாழ்படுத்திவிடும். எனவே ஆசையை ஒழிக்க வேண்டும். ஒருவர் எத்தகைய கருமம் புரிபவர்களாக இருந்தாலும் பேராசையை விட்டுவிட்டு பற்றற்றவராக இருந்தால் அவரே ஆனந்த வாழ்வு வாழ்பவராவார். அவரையே மற்றவர் போற்றுவார். இவ்வாறு கடமைகளைப் பற்றி மகாவிஷ்ணு கருடனுக்கு விளக்கிக் கூறினார்.

### உயர்ந்த பிறவி

நாராயணன் மானிடப்பிறவியின் சிறப்புப்பற்றி கருடாழ்வாருக்கு விளக்குகிறார்.

உலகத்தில் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்கள் அதாவது கருப்பை உற்பத்திகள் உள்ளன. அவற்றை அண்டசம், உற்பிசம், சராயுசம், சுவேதசம் என்கின்ற நான்கு வகைகள் முக்கியமானவையாகும்.

### அண்டசம்

முட்டையிலிருந்து கருத்தோன்றிப் பிறப்பன அண்டசமாகும். இதற்குச் சான்றாக பறவை இனங்கள் உள்ளன. இருபத்தொரு இலட்சம் பறவைகள் தோன்றின.

### உற்பிசம்

நிலத்தை அடியாகக் கொண்டு தோன்றுவனவாகும். மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலிய தாவரங்கள் இதிலடங்கும். இதிலும் இருபத்தொரு லட்சம் தோன்றின.

### சராயுசம்

கருப்பையிலிருந்து தோன்றும். இவை கருப்பையிலிருந்து தோன்றிப் படிப்படியாக வளர்ச்சியடைந்து பிறக்கும் பிறவிகளைக் குறிக்கும். மனிதர், ஏனைய விலங்குகள் இதிலடங்கும். இதிலும் இருபத்தொரு லட்சம் தோன்றின.

**கடன் வாங்குகிறவன் தன் சுதந்திரத்தை விற்கிறான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவேசம்**

இதில் சிறிய நுண்ணுயிர்கள் அடங்குகின்றன. நோய்க்கிருமிகள், நுளம்பு முதலியன அடங்கும். இச்சிறிய உயிர்கள் வியர்வை நீரிலிருந்து தோன்றின எனக் கூறப்படுகிறது. சடப்பொருள்களின் சேர்க்கையால் முதல் உயிர்கள் தோன்றின என்பது அறிவியல் தரும் விளக்கமாகும். நீரிலிருந்து தோன்றின என்பது இதன் அடிப்படையேயாகும். வியர்வையில் பெரும் பகுதி நீரேயாகும்.

பிறவிகள் மொத்தம் எண்பத்து நான்கு லட்சம் தோன்றின. இவை எல்லாவகைப் பிறவிகளிலும் மானிடப் பிறவியே மேலானதாகும்; கிடைத்தற்கரிய பிறவியாகும்; புண்ணிய பிறவியாகும்.

மானிடப்பிறவி உயர்வானது என்பதற்கு என்ன காரணம்? மற்றப் பிறவிகளிடம் இல்லாத தனித்தன்மை மானிடர்களிடம் என்ன உள்ளது என்று சந்தேகம் எழக்கூடும்.

மானிடர்களுக்கு மட்டுமே பொருள்களைக் கண்டறிய கண்களும், வெளிவிடயங்களை கேட்டறிய காதுகளும், சுவையை உணர்வதற்கு நாக்கும், பொருட்களின் மணத்தை நுகருவதற்கு நாசியும், தொட்டு உணர்வதற்கான பரிச உணர்வும் ஆக ஐம் புலன்கள் உள்ளன.

இதற்கு மேலான நன்மை தீமைகளை பகுத்தறிவதற்கான உணர்வும் மானிடர்களிடம் மட்டுமே உள்ளது. அதனாலேயே எல்லாப் பிறவிகளிலும் மானிடப் பிறவியே உயர்வானது என்றும் கூறப்படுகின்றது.

மனிதன் ஆற்றும் தொழிலின் அடிப்படையில் அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வகையினரைக் கண்டோம். அவர்களோடு தொழில் புரிபவர்கள் முடிந்து விடவில்லை. இவர்களைத் தவிர துணிகளை வெளுத்துக் கொடுக்கும் சலவைத் தொழிலாளியும், மிதியடி தைப்பவரும், நடனமாடுபவரும், நீர்நிலைகளில் படகு ஓடம் செலுத்துபவரும், துணி நெய்யும் நெசவாளரும், தங்க ஆபரண வேலை செய்யும் பொற்கொல்லரும், மீன் பிடிக்கும் செம்படவரும், காடுகளில் வேட்டையாடும் வேடுவரும் என்று பல தொழில்களைப் புரிபவர்களும் இன்னொரு வகையினராக உள்ளனர்.

உயிரினங்கள் யாவற்றுக்கும் உறக்கம் கொள்வது, அச்சப்படுவது, புணர்ச்சி இன்பம் கொள்வது, பசி ஆகியவை பொதுவானது. இவற்றில் எந்தவித பேதமும் கிடையாது. இருப்பினும், ஒன்றைப் பகுத்தறிவதிலும் ஞானம் பெற்றிருப்பதும் எல்லா உயிர் இனங்களுக்கும் பொதுவானது அல்ல. இது மானிடர்களுக்கு மட்டுமே உரியது.

மானிடர்கள் அனைவரும் ஒரே தன்மை உடையவர் என்று கூறிவிட முடியாது. ஒவ்வொருவரும் அவர்கள் வசிக்கும் நாட்டிற்கேற்ப வேறுபட்ட உருவமைப்பு, நிறம் கொண்டவர்களாக உள்ளனர்.

பூவுலகில் எந்த இடத்தில் கிருஷ்ண சாரம் என்ற கறுப்பு நிறமுடைய மான்கள் வசிக்கின்றனவோ அந்தப் பூமி புண்ணிய பூமியாகக் கருதப்படுகிறது. அந்த இடத்தில் தேவர்களையும், முனிவர்களையும், பிதுர்களையும் போற்றித் துதிப்பவர்களுக்கு நன்மைகள் பல உண்டாகும். இந்தப் புண்ணிய பூமியில்தான் முப்பத்து முக்கோடி தேவர்கள் எந்தக் காலத்திலும் இருப்பார்கள்.

உருவமுள்ள உயிர்கள் போன்று உருவமற்ற பிறவிகளும் உண்டு. அவை தனி இனத்தைச் சார்ந்தது. பூதம், பேய், பிசாசு போன்றனவாகும். இவற்றுக்கு ஆவியுருவம் மட்டுமே உண்டு.

உயிர்களில் தேகம் பெற்றிருப்பவை சிறப்புடையவையாகும். தேகம் பெற்ற உயிர்களில் பசு, பறவை போன்ற பிறவிகளை அடுத்து ஓரளவு அறிவுள்ளதாக இருப்பவை

**தலைக்கும் இதயத்துக்கும் கொடுக்கும் பயற்சியே கல்வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புடையவை. இவற்றைவிட மானிடர்கள் உயர்ந்தவர்கள். அவர்களிலும் அந்தணர்கள் உயர்ந்தவர்கள். இவ்வாறு பொதுவாகக் கூறப் பட்டாலும் அந்தணர்களைக் காட்டிலும் மிக உயர்ந்தவர்கள் உள்ளனர் என்று பரந்தாமன் கருடாழ்வாருக்கு கூறுகின்றார்.

உலக நடைமுறை வாழ்க்கையில் நீதிக்கு மாறான செயல்களில் ஈடுபட்டு வீணாக காலங்கழிக்காமல் வேதங்களில் கூறப்பட்டதை கற்றுணர்ந்தவர்கள் மிக உயர்ந்தவர்கள்.

வேதங்களில் கற்றுணர்ந்ததை வாழ்க்கையில் நிறைவாகப் பற்றி நிற்பவர்கள் சிறந்தவர்கள். இவர்களையும்விட இறைவனைப் பற்றி அறிந்தவர்கள் அதாவது பிரம்ம ஞானத்தை அடைந்தவர்கள் மிகமிக உயர்ந்தவர்கள்.

இவ்வாறு கூறிய பரந்தாமர், மானிடப் பிறவியைப் பற்றிக் கூறுகிறார். பல்கோடிப் பிறவிகள் இருப்பினும் மானிடப்பிறவியே அரிதானது. இது எளிதில் கிடைக்கக்கூடிய பிறவியல்ல. பறவை, தாவரம், விலங்கு போன்ற பிறவிகளைக் கடந்து அடையப்பெறும் பிறவியாகும். மானிடப்பிறவியே சொர்க்கம், நரகம், மோட்சம் (வீடுபேறு) போன்ற நற்பேறுகளை அடைவதற்கு காரணமாக அமைகிறது. மானிடப்பிறவியில் ஒருவர் செய்யக்கூடிய வினைகளுக்கேற்ப நற்கதியும், துர்க்கதியும் அடைகின்றனர்.

அடைதற்கரிய மானிடப்பிறவி எடுத்தவர் செய்யும் செயல்களால் நல்வினையும் தீவினையும் அடைகின்றனர். அதைப்பற்றி பகவான் மேலும் விளக்குகிறார். மானிடர்கள் நற்காரியங்களைப் புரிவதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தால் நல்லுலகம் அடைவர். அவ்வாறன்றி தீய காரியங்களைப் புரிந்து வந்தால் நரகமேயடைவர்.

உலகில் தம் பிறப்பில் நற்காரியங்களை விடுத்து தீய காரியங்களைப் புரிபவர்கள் அதிகமாக உள்ளனர். முற்பிறவியில் செய்த புண்ணியத்தால் பெற்ற மானிடப் பிறவியை தமக்குத் தாமே பாழ்படுத்திக் கொள்கின்றனர். அந்தவகையில் தமக்குத் தாமே கேடு புரிந்து கொள்பவர்களாகின்றனர்.

(தொடரும்...

## சந்நிதி முருகனைச் சரண் நாம் அடைவோம்

சந்நிதி முருகனைச் சரண் நாம் அடைந்திட்டால்
எந்நிதி யாயினும் எமக்கெட்டுந்தூரமே
பன்னெடுங்காலம் பயின்ற அவன் நாமம்
எம்மனக் கமலமதில் ஏற்றமுடன் திகழும்

அன்னதானக் கந்தனாகி அறிவும் பசியும் தீர்க்கும்
பன்னக சயனனது மருகனாம் முருகனை
எம் மகம் முழுவதும் இருத்தி வழிபட்டிடவே
நம் அகம் முழுவதும் நல்லதே நடக்குமே

காலையில் எழுந்ததும் கந்தாகுமரா என்றிட்டால்
வேலையில் வில்லங்கம் விலகியே ஓடும்
வேலையே வணங்கி காலை நாம் பிடித்திட்டால்
ஓலையும் வருமோ எமனிடம் இருந்தே

-பு.பி. அனந்தம்-

ஒரு வசீகரமான கடுஞ்சொல் ஆயிரம் கேவலங்களுக்குச் சமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் திருக்கோயில் வரிசை:


# திருவெண்ணெய்நல்லூர்

– வல்வையூர் அப்பாண்ணா –

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனிஅல்லேன் எனலாமே"

-சுந்தரர்-

சுருண்ட சடாமுடி, சடாமுடி நடுவே கங்கை, நெற்றிக்கண் இத்தனையையும் துணியால் மூடி மறைத்து (பெரியபுராணம் பாடல் இல.175) வயோதிப அந்தணர் வேடந்தாங்கி, சுந்தரரின் திருமண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த "புத்தூர்"க்கு வந்த இறைவன், "சுந்தரா! நீ எனக்கு அடிமை" என்று சொல்லி வாதிடுகிறார். "வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக" (பெ.பு.பாடல்: 210) எனச் சபையோர் கேட்டுக் கொண்டதற்கிணங்க திருவெண்ணெய் நல்லூரிலிருந்த "திருவருட்டுறை" திருக்கோவிலுக்கு அனைவரையும் அழைத்துச் சென்று, "என் இருப்பிடம் இதுவே" (பெ.பு.பாடல் இல: 211) எனக் கூறி மறைந்தார் எம்பெருமான். "பித்தா" எனக் கூறிய சொல்லினையே முதற் சொல்லாக வைத்து "பித்தா பிறைசூடி" பதிகம் பாடினார் சுந்தரர். திருவருட்டுறை திருக்கோவிலும் சுந்தரரின் தேவார முதற்பதிகத்தின் முதற் பாடல்பெற்ற பெருமையினைப் பெற்றது. பாடலிலும் "வெண்ணெய் நல்லூர் அருட் டுறையுள்" என வரும் அடியினையும் நோக்க வேண்டும். (திருவெண்ணெய் நல்லூர் ஊரின் பெயர். திருவருட்டுறை ஊரின் நடுவிருந்த கோவிலின் பெயர். திருவருட்டுறை- திருவருள் துறை)



சுந்தரரின் திருமண ஏற்பாடுகள் நடைபெற்ற ஊரின் பெயர் "புத்தூர்". முதிய வேதியராக வந்த இறைவன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட பின்னர் அக்கிராமம் "தடுத்தாவூர்" என இன்றும் வழங்கப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

இறைவன்: கிருபாபுரீஸ்வரர், அருட்டுறை நாதர், தடுத்தாட்கொண்ட நாதர்
இறைவி: மங்களாம்பிகை, வேற்கண்ணியம்மை
தலமரம்: தண்டதீர்த்தம்

பத்து ஏக்கர் பரந்த நிலப்பரப்புடன் ஒரு ராசகோபுரம், இரண்டு பிரகாரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி திருவெண்ணெய்நல்லூர் திருக்கோவில் காணப்படுகிறது. கிழக்குப் பார்த்தபடியுள்ள ஐந்து நிலைக் கோயிற் கோபுர வாசலினூடாக உள் நுழைந்ததுமே முதன் முதலில் கண்ணில் படுவது சுந்தரர் வழக்கு நடந்த "வழக்கு

**ஒருவன் தன் சொந்தத் தனித்தன்மையை விடுத்து வேறொரு மனிதன் ஆகக்கூடாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்த மண்டபம்". இம்மண்டபம் கால ஓட்டத்தினால் தற்போது பெருமளவு சேதமடைந்த நிலையில் இருப்பினும், சுந்தரர் வாழ்வினில் முக்கிய பங்கு வகித்த காரணத்தினாலும், இறைவன் திருவடி தீண்டப்பெற்று புனிதம் பெற்ற பூமியாதலினாலும் "வழக்குத் தீர்த்த மண்டபம்" இன்றும் வணங்கப்பட்டு வருகிறது. மண்டபம் தாண்டினால் செப்புக் கவசமிட்ட கொடிமரமும், கொடிமரத்து விநாயகரும், நந்தி பலிபீடமும் காணப்படுகின்றன. மண்டப முகப்பில் சுந்தரருக்கு இறைவன் இடபாரூடராகக் காட்சி தந்த அழகிய சுதைச்சிற்பம் உள்ளது.

அதற்குக் கீழே எதிர்ப்புறத்தில் சுந்தரர் சந்நிதி உள்ளது. மாப்பிள்ளை கோலத்தில் கழுத்தில் மாலையுடன்- கையில் ஓலையுடன் ("நீ எனக்கு அடிமை" என வேதியர் உருவில் வந்த இறைவன் காண்பித்த ஓலை) காணப்படும் சுந்தரரின் திருக்கோலத்தின் அழகே அழகு. வேறு எங்கும் காணமுடியாத நிறைவான திருவுருவம் இது. பரந்த உட்பிரகாரத்தை வலம் வந்தால், தென்பிரகாரச் சுவரோடு அமைந்துள்ள கல் மண்டபத்தில் அறுபத்துமூவரும் வரிசையாக அமர்ந்துள்ளனர். தொடர்ந்து, சப்த மாதர்கள், சம்பந்தர், மகாவிஷ்ணு, அருணந்திசிவம், மெய்கண்ட தேவர் திருமேனிகளும் வரிசையாக உள்ளன.

நமது தரிசன வேளை முதல்நாள் பகற்திருவிழா முடிவுற்ற நேரமாக அமைந் திருந்தது. பிரம்மோற்சவத்தை முன்னிட்டு பளிச்சென சுத்தமாகக் காணப்பட்ட உட்பிரகாரத் தின் ஒவ்வொரு மூர்த்தங்களின் முன்பாகவும் (அறுபத்துமூவர் உட்பட) ஒரே அளவான வாழையிலையில் வெற்றிலை, பாக்கு, பழம், உடைக்கப்பட்டிருந்த தேங்காய் ஆகியவை நிவேதிக்கப்பட்டிருந்தது. அறுபத்துமூவரின் கழுத்திலும் ஒரே நிறத்தில் ஒரே அளவினதாகத் தொங்கிக்கொண்டிருந்த மாலைகள் அம்சமாக - அழகாக - ரம்மியமாக இருந்தது. நிவேதிக்கப்பட்ட பொருட்களுடன் பொங்கல் - சுண்டல் ஆகியவையும் சேர்த்து ஒரு பையிலிட்டு அங்கு நின்றிருந்த பொதுமக்களுக்கு வழங்குகிறார்கள். எவ்வித சிரமமுமின்றி எமக்கும் அர்ச்சனைப் பொருட்கள் அடங்கிய பை ஒன்று கிடைத்தமை எமது அதிஷ்டமே.

அறுபத்துமூவர் சந்நிதிக்கு முன்பாக சோமாஸ்கந்தர் சந்நிதி காணப்படுகிறது. சோமாஸ்கந்தர் சந்நிதி அருகே மூலவரின் கருவறைக்குச் செல்லவேண்டிய பக்கவாட்டுப் படிகள் காணப்படுகின்றன. எனவே நாமும் அந்தப் பக்கவாட்டுப் படிவரிசை கடந்து கருவறை வாசலின் முன் மண்டபத்திற்கு வந்து சேருகிறோம். கருவறைக்கு நேர் எதிரே மண்டப முடிவில் கல்யன்னல் காணப்படுவதனால் அனைவரும் இந்தப் பக்கவாட்டுப் படிகளையே பயன்படுத்துகிறார்கள். மூலவர் "கிருபாபுரீஸ்வரர்" சுயம்பு லிங்கமாக நிறைந்த அலங்காரத்துடன் அற்புதமாக அருள் பாலிக்கிறார். மூலவரின் முன் மண்டபச் சுவரில் "பித்தா பிறைசூடி" பதிகம் முழுவதும் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. மண்டபத் தூண்களில் பைரவர், தட்சணாமூர்த்தி சிற்பங்கள் தனித்தனியாக உள்ளன.

கோஷ்ட மூர்த்தங்களாக பிட்சாடனர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், மகாவிஷ்ணு, துர்க்கை ஆகியோர் உள்ளனர். விசாலமான உட்பிரகாரச் சுற்றில் பொல்லாப் பிள்ளையார், முருகன், சுந்தரர், கஜலெட்சுமி சந்நிதிகள் உள்ளன. வடகிழக்கு மூலையில் உள்ள நவக்கிரக மண்டபத்தில் அமர்ந்திருக்கும் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றும் தத்தமது வாகனத்தில் ஆரோகணித்தபடி உள்ளமை வித்தியாசமான அம்சமாக இருந்தது.

அன்னை மங்களாம்பிகை சந்நிதி உட்பிரகாரத்தை அண்டியபடி இடது புறமாகக் காணப்படுகிறது. மூலவர் சந்நிதி போன்றே அம்பிகையின் சந்நிதியும் கிழக்குப் பார்த்தபடியே உள்ளது. பூரண அலங்காரத்துடன் நின்ற திருக்கோலத்தில் அம்பிகை அருள் பாலிக்கிறாள்.

**அடக்கம் ஒரு ஆபரணம் மாத்திரமல்லாமல் நற்குணத்திற்கும் ஒரு காவலன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையம்மை இத்தலத்தில் பசு வெண்ணெயால் கோட்டைகட்டி அதில் பஞ்சாக்கினி வளர்த்து அதன் நடுவிருந்து தவஞ்செய்த காரணத்தால் இவ்விடம் "வெண்ணெய்நல்லூர்" எனப் பெயர் பெற்றதாக ஸ்தல புராணம் கூறுகிறது.

தினமும் நான்கு கால பூசைகளுடன் பிரதோஷம், சிவராத்திரி, திருவாதிரை, பங்குனி உத்தரம், ஆடிச் சுவாதி முதலிய உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆடிச்சுவாதி உற்சவத்தில் திருமண உற்சவம், திருமணத்தைத் தடுத்தது, சுந்தரருக்குக் காட்சி கொடுத்தது முதலிய அக்கால நிகழ்வுகளை அப்படியே இக்காலத் திருவிழாவாக வருடந்தோறும் முன்னிறுத்துகிறார்கள்.

சடையப்ப வள்ளல் வாழ்ந்த பதி இதுவே. சைவ சித்தாந்த சாத்திரங்களுள் தலையானதாகத் திகழும் "சிவஞானபோதம்" நூலை அருளிச்செய்த மெய்கண்டார் (மெய்கண்ட தேவர்) வாழ்ந்து உபதேசம் பெற்ற சிறப்புத் தலமும் இதுவேயாகும். மெய்கண்டாரின் சமாதி புறவீதியின் வடமேற்கு மூலையில் உள்ளது. இந்தச் சமாதி அமைந்துள்ள "மெய்கண்ட தேவர்" மடம் திருவாவடுதுறை ஆதீனத்தின் பராபரிப்பில், ஆதீனத்து தம்பிரான் சுவாமிகள் ஒருவரால் பராபரிக்கப்பட்டு வருகிறது.

இறைவன் திருப்பாதம் பதிந்த திருவெண்ணெய்நல்லூர்- திருவருட்டுறை திருக் கோவிலின் வாசற்படியில் கை வைத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு கோவில் வளாகத்தினை விட்டு வெளியே வருகிறோம்.

## வேலாக வணங்க வைக்கும்

நூற்றித் தொண்ணூற்றி நான்கில் பூக்கும் ஞானச்சுடரே - நீ
நூதனமாய் வென்று விட்டாய்,
நேற்றுப் போல இருக்கிறது - நீயோ
நெடிதுயர்ந்து நிற்கிறாய்,
நாற்று மேடையில் கீற்றாக நீதான்
நனிசிறக்க நவில்கிறாய் அதனால்
ஊற்றாக மாதமொருமுறை அழகு
உருவாக ஆன்மீகம் தருகிறாய்,
தோற்காத கட்டுரைகள், படைப்புக்கள் யாவும்
தூயமனதாரின் வார்ப்புக்கள்,
தொற்றாமல், பற்றாமல் தனித்துவமாய்
துலங்கும் ஞானச் சுடரே! நீ வாழி,
வற்றாமல் சற்றேனும் இலாபமின்றி - நீ
வடிவோடு வெளி வருகின்றாய் - உன்
வாரியழகு முருக சந்நிதி வேலாக
வணங்க வைக்குமே முறையாக

-கே.எஸ். சிவஞானராஜா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனிமாத வாராந்த நிகழ்வுகள்

**07.03.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கீதை காட்டும் பாதை"

வழங்குபவர் :- ஜாக்கிரத் சைதன்யா சுவாமிகள் அவர்கள்

[சின்மயா மிஷன்]

---

**14.03.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

வழங்குபவர் :- க. ரஜீவன் ஆசிரியர் அவர்கள் (பக்கவாத்திய சகிதம்)

[இசை நுண்கலைமாணி, யாழ் மத்திய கல்லூரி]

---

**21.03.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தரநுபூதி"

வழங்குபவர் :- திரு நா. நவராஜ் அவர்கள்

---

**28.02.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

[இளை. அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு க. ஆனந்தராசா அவர்கள்

[இளை. அதிபர்]

195ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/16/NEWS/2014

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org